# உதயன்

கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 217 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 16, புதன்கிழமை 01.07.2015


கருத்தில் கொள்ளப்படாத புலம்பெயர் மக்களின் உரிமைகள்

பக். 17



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலய தேர் திரு விழா நேற்று இடம்பெற்றது. (மேலும் படங்கள் 02ஆம் பக்கத்தில்)

## தனிநபர் வருமானம் 6,000 அமெ. டொலர்

### அடுத்த 5 வருடங்களில் வரும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 1
அடுத்த 5 வருடங்களில் இந்த நாட்டின் தனிநபர் வருமானத்தை 6 ஆயிரம் அமெரிக்க டொலர்வரை உயர்த்துவதற்கு அரசு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சீதாவகை ஆற்றில் இரத்தினக் கற்கள் அகழும் ஒருங்கிணைந்த முன்னோடிக் கருத்திட்டத்தின் பயன்களை அப்பிரதேச மக்களிடம் ஒப்படைக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் தெகியோவிட்டவில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட பக்.24

## தேர்தல் வன்முறை ஒருவர் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூலை 1
நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலுக்கு முன்பதாக, தேர்தல் வன்முறைகள் ஆரம்பித்துள்ளன. கடந்த 24 மணி நேரத்தில் தேர்தல் வன்முறை காரணமாக ஒருவர் கொல்லப்பட்டிருப்பதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக, 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக் பக்.24

### போதைவஸ்து கடத்தினால் தராதரம் பாராது நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 1
போதைப்பொருள் விடயத்தில் கட்சி, அரசியல், தராதரம் பார்க்காமல் சகலருக்கும் கடுமையாக சட்டத்தைப் பிரயோகிப்பதே தமது நோக்கம் எனத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போதைப் பொருள்களைத் தடுக்கக் கடற்படையினரை ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.
திருகோணமலை கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டின் முப்படைகளிலிருந்தும் ஓய்வு பெறுகின்ற பக்.24

# பிரதமர் வேட்பாளராக மஹிந்தவை மைத்திரி அங்கீகரிக்கவில்லை

### ஜனாதிபதி செயலகம் நேற்று அதிரடி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 01
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்கீகரிக்கவோ அல்லது பிரதமர் வேட்பாளராகப் பெயரிடவோ இல்லை என்று ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் எந்த பக்.24



### ரவிராஜ் கொலை சந்தேக நபருக்கு நேற்றுப் பிணை

கொழும்பு, ஜூலை 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான, கடற்படை கப்டன் சமந்த முனசிங்கவுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் பக்.24

### மஹிந்த தேர்தலில் போட்டியிடுவது ஹெல உறுமயவுக்கு பிரச்சினையில்லை

கொழும்பு, ஜூலை 1
மஹிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவது எமக்குப் பிரச்சினையில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் தவிசாளர் வண. பக்.24

## டக்ளஸுக்கு எதிரான விசாரணை ஆரம்பம்

### கொழும்பிலிருந்து வந்தது விசேட குழு

யாழ்ப்பாணம், ஜூலை 1
முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக, இலஞ்ச ஊழல் ஒழிப்புக்குழு செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக, கொழும்பிலிருந்து விசேட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.
முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மகேஸ்வரி நிதியம், பாரவூர்தி உரிமையாளர்களிடம் பெற்றுக் கொண்ட பணத்தைத் திருப்பிச் செலுத்தாமைக்கு எதிராகவும், சட்ட விரோதமாகப் பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குள் மணல் அகழ்வில் பக்.24

### இணுவில் விபத்தில் மூதாட்டி சாவு

யாழ்ப்பரணம், ஜூலை 1
இணுவில் பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் வீதியை கடக்க முற்பட்டவரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30மணியளவில் இடம்பெற்றுள்ளது.'
சம்பவத்தில் உயிரிழந்தவர் இணுவில் மேற்கை சேர்ந்த செல்லையா-சிவபாக்கியம் (வயது-74) எனத் தெரியவந் பக்.24

## மோசடி அரசியலை தோற்கடிப்போம்

### ஜே.வி.பி. அறைகூவல்



கொழும்பு, ஜூலை 1
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசியல் சகாக்களும் அறிமுகப்படுத்திய ஊழல், மோசடிமிக்க அரசியல் கலாசாரத்தைத் தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் அணிதிரள வேண்டும்" - என ஜே.வி.பி. அறைகூவல் விடுத்துள்ளது. பக்.24

## மஹிந்த இன்று விசேட அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் மட்டுமன்றி, சர்வதேச ரீதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் தொடர்பான விசேட அறிவிப்பு இன்று விடுக்கப்படவுள்ளது.
அம்பாந்தோட்டை மெதமுலனையில் உள்ள தனது இல்லத்தில் இன்று புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொதுத் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, சு.கவின் பொதுச் செயலாளர் அநுர பிரிய பக்.24

## தேர்தல் கால நியமனத்துக்கு 3 வருடச் சிறைத் தண்டனை

### ஒரு லட்சம் ரூபா அபராதம் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 1
ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளின் நியமனங்கள், தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியப்படுத்தி வழங்க முடியும். அதனைத் தவிர்த்துப் புதிதாக நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு அரச நியமனங்கள் வழங்கப்படுமாக இருந்தால், ஒரு லட்சம் ரூபா அபராதமும், மூன்று வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.
கொழும்பிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. குறித்த முறைப்பாடு தொடர்பில் பதிலளிக் பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இனவாதம் தூண்டுகிறார் மஹிந்த

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 01

மஹிந்த மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தைத் தூண்டி, மூவின மக்களது ஒற்றுமையைக் குழிதோண்டிப் புதைக்க எண்ணியுள்ளார் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அமெரிக்காவின் அறிக்கையை வைத்து பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும், சிங்களவர்களிடையேயும் இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, மீண்டும் புலிகள் தலைதூக்கியுள்ளார்கள், அதற்கு இடமளிக்கக்கூடாது என இந்த நாட்டில் தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்ட பல்வேறு யுத்திகளைக் கையாண்டு வருகின்றார். இவரின் இனவாத அரசியலுக்கு அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையை முன்னிலைப்படுத்தி பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார்.

அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையானது நல்லாட்சி அரசின் காலத்தில் எடுக்கப்பட்ட தரவுகளுக்கு அமைய தயாரிக்கப் பட்டது அல்ல. அந்த அறிக்கை மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் தயாரிக்கப்பட்டது என்பதை அவர் மறந்துவிடக்கூடாது.



இந்த நாட்டில் இனவாத ஆட்சியைக் கொண்டுசெல்ல முயற்சித்து வரும் மஹிந்தவின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (த)

## சுயேச்சை வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தலாம்

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக சுயேச்சைக் குழுக்களில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணத்தை ஏற்பது கடந்த 27 ஆம் திகதியன்று ஆரம்பமாகியுள்ளதோடு ஜூலை 13 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் இந்தச் செயற்பாடு முடிவுக்கு வருவதாகவும் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

கட்டுப்பணம் ஏற்பது ஜூலை மாதம் 13 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு நிறைவு செய்யப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

1981 இலக்கம் 1 ஐக் கொண்டுள்ள நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டத்துக்கு அமைய பொதுத்தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளரொருவருக்கான கட்டுப்பணம் ரூபா 2 ஆயிரம் ஆகும். (ற-22)

# அடியார்கள் அரோகரா கோஷம் ஒலிக்க தேரேறி அருள் தந்தாள் நயினை நாகபூஷணி

யாழ்ப்பாணம், ஜூலை 1

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

அதிகாலை 4.30மணிக்கு விசேட பூசைகள் இடம்பெற்று காலை 8மணிக்கு நடைபெற்ற வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதியில் வலம் வந்து காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணித்தாள். தேரில் இடம்பெற்ற அர்ச்சனைகளைத் தொடர்ந்து அடியார்களின் அரோகரா கோஷம் ஒலிக்க அம்பாளின் தேருலா ஆரம்பமானது. விநாயகர், வள்ளி தெய்வானை சமேதராக முருகப் பெருமானின் தேர் பவனியைத் தொடர்ந்து அம்பாள் தேர்ப்பவனியில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வீதியுலா வந்தாள்.

அன்னையின் தேருலாவைக் காண 8ஆயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் நேற்றுத் திரண்டிருந்தனர். குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்குரிய படகுச் சேவை அதிகரிக்கப்பட்டு போக்குவரத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றதால் யாத்திரிகர்கள் சிரமமின்றி தேர் உற்சவத்தில் கலந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

போக்குவரத்து, குடிதண்ணீர் வசதிகளை வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் பார்வையிட்டுத் திருப்தி தெரிவித்தார். விழாத் தொண்டர்கள் சேவை , அன்னதான சேவைகள் வழமை போன்று சிறப்பாக இடம்பெற்றது. (ற-7)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரணதரப் பரீட்சை மீளாய்வு பெறுபேறுகள் 30ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 1

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் இம்மாதம் 30 ஆம் திகதி வெளியாகவுள்ளன.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக ஒரு லட்சத்து 7 ஆயிரம் பேர் வரை விண்ணப்பத்திருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார தெரிவித்தார். பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அந்தந்த பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். தவிர, மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகளை இணையத்தளத்தில் வெளியிடவும் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இம்முறை ஒரு மாதத்துக்கு முன்னதாகவே மீளாய்வு பெறுபேறுகளை வெளியிடுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ற-4)

# உயர்தரப் பரீட்சையை ஒரே கட்டமாக நடத்துக

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதியும், அவர்களின் எதிர்கால வாழ்வு கருதியும் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சையை ஒரே கட்டமாக கலவரம் இல்லாத நாள்களில் நடத்துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அந்தச் சங்கம் செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவ வாழ்வில் அடுத்த கட்டத்தைப்பற்றி முடிவெடுக்கும் பரீட்சையாக உயர்தர பரீட்சை உள்ளது. இது மிகவும் கடுமையான போட்டிப் பரீட்சையாக மாறியுள்ள காலத்தில், வாக்குரிமையோடு உள்ள க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களின் அரசியல் உரிமையையும், கற்றல் சுதந்திரத்தையும் பறித்தெடுக்கும் செயற்பாடாகவே இரண்டு கட்டங்களாக பரீட்சை நடத்துவதை நாம் பார்க்கின்றோம். தேர்தலுக்கு முன்னுள்ள நாள்களில் பரீட்சையை நடத்துவது எவ்வளவு விசமத்தனமானது. தேர்தல் பரப்புரை, கலவரம், ஒலிபெருக்கி, ஆரவாரம் என்றெல்லாம் எமது நாட்டில் மலிந்துள்ள நிலையைப் புரிந்துகொள்ளாமல் பரீட்சையை நடத்துவது எத்தனை பொருத்தமானது?

இந்நாட்டில் கல்வியைவிட அரசியலுக்குத்தான் முன்னுரிமை என்றால். எதிர்கால சிறார்களின் வாழ்வு பற்றி சிந்திக்கத் தேவையில்லை என்றால், தேர்தலின் பின்னராவது பரீட்சையை நடத்துங்கள் என்பதை வலியுறுத்திக் கேட்கின்றோம்.

ஓகஸ்ட் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிந்து மறுநாள் 24 ஆம் திகதி திங்கட்கிழமை க.பொ.த உயர்தர பரீட்சையை ஆரம்பித்து குழப்ப மில்லாமல் தொடர்ச்சியாக நடத்தலாம்.

இதனைக் கல்வி அமைச்சர் கருத்தில் எடுத்து திகதியில் மாற்றத்தைச் செய்ய வேண்டும்.- என்றுள்ளது. (ற-4)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 01

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

யாழ்.நகரில், காஞ்சிபுரம், விபுலானந்தர் வீதி, அந்தோனியார் வீதி, பானாவெட்டி ஆஸ்பத்திரி வீதி, தோப்புக்காடு, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி ஆகிய இடங்களிலும்– வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளுக்குளம், பம்பைமடு, தொழிநுட்பக் கலலூரி, பம்பைமடு பல்கலைக் கழகம் மற்றும் விடுதி ஆகிய இடங்களிலும்– மன்னார் பிரதேசத்தில் மணல் குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற-5)

## சங்கிலி அறுத்த பெண் சிக்கினார்

நேற்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டுவிட்டு வீடு செல்வதற்காக துறைமுகத்தில் வரிசையில் காத்து நின்ற பெண் ஒருவரிடம், சங்கிலி அறுக்க முயன்ற பெண் ஒருவர் தொண்டர்களால் மடக்கிப் பிடிக்கப் பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அதேவேளை, ஆலயத்துள் தவறவிடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-7)

# கூட்டு முயற்சியே போதைக்கு எதிரி

## அதைப் பிரயோகிக்க வேண்டும் என மருத்துவ நிபுணர் சிவன்சுதன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கில் சமூகத்தில் எல்லா வழிகளிலும் சுகாதாரம், பொருளாதாரம், ஆளுமை, கலாசாரம், கல்வி என அனைத்தையும் சீரழிப்பதற்குத், தாக்கி அழிக்கும் ஆயுதமாகத்தான் போதைப் பொருள் பாவனை தற்போது உள்ளது. அனைவரதும் கூட்டு முயற்சி மூலமாகவே இதனைத் தடுக்கலாம். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். – இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன் தெரிவித்தார்.

யாழ்.மருத்துவச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இது பற்றிய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப் பொருள் பாவனையிலிருந்து எப்படித் தப்பிப் பிழைக்கப்போகிறோம் என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அதற்கு அனைத்துத் தரப்பினரும் இணைந்த கூட்டு முயற்சி – ஒத்துழைப்பு வேண்டும். இந்தத் தாக்கம் மிகப் பயங்கரமானதாக உள்ளபோதும் அவற்றில் சிலவே வெளியே தெரிகின்றன. வெவ்வேறு வடிவங்களிலும் அதனைப் பார்க்க முடிகிறது. போதைப் பொருள் உள்ளிட்ட பாவனையால் நாளாந்தம் 4 அல்லது 5 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். இது நேரடியான அல்லது மறைமுகமான போதைப் பொருள் தாக்கத்தின் விளைவுதான். போதைப் பொருள்களை அவ்வாறு பாதிக்கப்படுபவர்களே பாவித்திருக்கலாம். அல்லது அவர்களது பெற்றோர் பாவித்து அதன் தாக்கமாக இருக்கலாம். அல்லது போதைப் பொருள் பாவனைக் கலாசார நிலை உருவாகி அதன்விளைவாக ஏற்பட்டதாக இருக்கலாம். அல்லது போதைப் பொருள் பாவனையின் வெளிப்பாடாக இருக்கலாம். தற்கொலை முயற்சி அண்மைக்காலமாக பெரியளவில் அதிகரித்துள்ளது. வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அரைவாசிக்கும்மேற்பட்ட கட்டில்கள் தற்கொலை முயற்சி, அதனால் ஏற்பட்ட நோயால் வந்தவர்களால்தான் நிரம்பி வழிகிறது. அதனால் இயற்கையான நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் விடுதி ஒன்றை எடுத்துக் கொண்டால்கூட போதைப் பொருள் காரணமாக நேரடியான தாக்கம் மறைமுகமான தாக்கம், குடிவகை சம்பந்தமாக இரத்த வாந்தி எடுத்தவர்களின் தாக்கம், அதனால் ஈரல் பழுதானவர்களின் தாக்கம், போதைப் பொருள் பாவனையால் வாகன விபத்துக்களில் சிக்கியவர்களின் தாக்கம் எனப் பலதரப்பட்ட தாக்கங்கள் போதைப் பொருள் பாவனையால் ஏற்பட்டுள்ளது. அதனால் வைத்தியசாலையில் பரிசோதனைப் பகுதிகள், எக்ஸ்றே பிரிவு, மருத்துவர்கள், தாதியர்கள் என அனைவரும் கடும் வேலைப்பளுவுக்கு உள்ளாகியுள்ளனர். மருந்துப் பாவனையும் அதிகரித்துள்ளது.

வெளியே தெரியும் தாக்கம் இவையாகவிருந்தாலும் அதன் பின்னால் பெரியதொரு தாக்கம் சமுதாய அளவிலும் கல்வித் தராதர அளவிலும் பொருளாதார அளவிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய இடங்களைவிட வடக்கில் இது அதிகரித்துள்ளது. அதற்கு என்ன காரணம் என்று ஆராய வேண்டும். இது பற்றித் தொடர்ச்சியான விழிப்பூட்டல் முன்னெடுக்க வேண்டும். அந்த விழிப்பூட்டல் செயற்பாட்டைத் தொடர்ந்து செயற்படுத்த .வேண்டும்.– என்றார். (ற-4)

## டெங்கை கட்டுப்படுத்த கிராமங்களில் குழுக்கள்

வலி.தென்மேற்கு, ஜூலை 1

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியால் கிராமங்கள் தோறும் நுளம்புக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் குழுவினர் நுளம்பு பெருகும் இடங்களைக் கண்காணிப்பதுடன், கிரமமான முறையில் கழிவகற்றப்படுவதை உறுதிப்படுத்துவது போன்ற பணிகளை முன்னெடுப்பர் என்றும், டெங்குக் கட்டுப்பாட்டு வாரங்களின் போது சுகாதாரத் துறையினருடன் இணைந்து செயலாற்றுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்திய அதிகாரி எஸ்.ரஜீவ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் சகல தனியார் மற்றும் அரச நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொண்டனர். நிறுவனங்கள் மட்டத்தில் அமைக்கப்படும் இந்தக் குழுக்களில் மூன்று பேரில் இருந்து ஐந்து பேர் வரை அங்கம் வகிப்பார்கள்என்றும்தெரிவிக்கப்பட்டது. (ற-115)

## சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பதவிநீக்கம்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதி ஒருவர் தப்பியோடிய சம்பவம் தொடர்பில் நான்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதி ஒருவர் கடந்த சனிக்கிழமை அதிகாலை தப்பியோடிய சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இவர்கள் நான்கு பேரும் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் இச் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி பொலன்னறுவை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட் டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

## புலிகளின் சீருடை வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 1


விடுதலைப்புலிகளின் வரிச் சீருடைகள் மற்றும் தொப்பிகள், கோல்ஸர் என்பவற்றை வைத்திருந்த கைதடி மேற்கைச் சேர்ந்த ஒருவரையும், அதனைக் கொண்டு வந்திருந்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.

நான்குதினங்களுக்குமுன்னர் கைதடி மேற்கில் உள்ள வீடொன்றைச் சுற்றி வளைத்த பொலிஸார் அங்கிருந்து விடுதலைப் புலிகளின் வரிச் சீருடைகள், 2 தொப்பிகள், ஆயுதம் தாங்கும் தோற்பையான கோல்ஸரும் என்பவற்றைக் கைப்பற்றி[illegible] போது வீட்டின் உரிமையா[illegible] இல்லாததால் அவரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கூறிச் சென்றுள்ளனர்.

மறுநாள் பொலிஸ் நிலையம் சென்ற வீட்டு உரிமையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார். [illegible] விடுதலைப் புலிகளின் சீருடைப் [illegible] பயன்படும் என்பதால் அவ்வாறான படங்கள் எடுத்து குறித்த நபர் வெளிநாடு சென்ற பின்னர் அந்தப் படங்களை அனுப்பும் முகவராக குறித்த நபர் விசாரணையில் அறிய முடிந்துள்ளது.

அதனையடுத்து தடைசெய்யப்பட்ட சீருடைகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ற-9,288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி பிரதேச செயலக கலாசார பிரிவினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கலாசார சீரழிவைத் தடுக்கும்முகமாக கலாசார விழிப்புணர்வு தொடர்பான தெருக்கூத்தை நடத்தி வருகின்றனர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் தெருக்கூத்து நடத்தப்பட்டது. (ந-9)

# மீனவர்களுக்கான வீட்டுக் கடன் திட்டம்

## நீரியல் வளங்கள் திணைக்களம் இலங்கை வங்கி இணைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

கடற்றொழில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் மீனவ சமுகத்தினரின் வீட்டுத் திட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்துள்ள கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களம் இலங்கை வங்கியுடன் இணைந்து வீட்டுக்கடன் திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரவீரவின் வழிகாட்டலுடன் 2015ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்து கடற்றொழில் மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் 150 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக அமைந்துள்ள கிராமிய கடற்றொழில் அமைப்புக்களில் அங்கத்தவர்களாக இணைந்துள்ள மீனவர்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இத்திட்டத்தில் இணையும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 5 லட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் பயனாளிகள் கிராம கடற்றொழில் அமைப்புக்கள் மூலம் கடற்றொழில் திணைக்கள பிரதிப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இந்த வீட்டுத்திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

1. காணி ஒன்றின் சொந்தக்காரராக இருத்தல். அத்துடன் உறுதி,அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும். உரியவருக்கு காணி சொந்தமில்லாவிடின், கணவர், மனைவி அல்லது குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவர் விண்ணப்பிக்க முடியும்.
2. கடன் விண்ணப்பதாரரின் மாதாந்த வருமானம் கடற்றொழில் உதவிப் பணிப்பாளரால் உறுதி செய்யப்படல் வேண்டும். வீடு நிர்மாணிப்பதற்கு உரிய மதிப்பீடு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் தொழில்சார் அலுவலர் பரிந்துரை செய்தல் வேண்டும்.
3. வீட்டின் மதிப்பீட்டு மொத்த தொகையில் 25 வீத பங்களித்தல். கடன் தொகைக்கு சமமாக கடன் விண்ணப்பதாரர் செலுத்துதல் (உம் : கட்டடப் பொருள்கள் வழங்கும் முறை வழங்குவது கவனிக்கப்படும்.)
4. புதிய வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கு/வீட்டின் ஒரு பகுதி கட்டுதல்/திருத்தல் நடவடிக்கைக்கு கடன் பெற முடியும்.
5. ஆகக்கூடிய தொகை ரூபா ஐந்து லட்சம்.
6. கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் 6 வீதம் ஆகும்.
7. கடன் செலுத்தி முடிக்கும் காலம் 5 வருடங்களாகும். குறித்த கடன் தொகைக்கு கடன் தவணை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
8. உறுதி பாதுகாப்புக்காக வங்கியில் வைத்தல் வேண்டும். அத்துடன் இரு பிணையாளர்கள் கையெழுத்துடன் கடன் விடுவிக்கப்படும். – என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-115)

## ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் வழிபாட்டுத் தலம்



வவுனியா, ஜூலை 1

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில் வழிபாட்டுத் தலம் அமைக்க உத்தியோகபூர்வமாக வவுனியா மாவட்ட அரச அதிபர் அனுமதியளித்துள்ளார்.

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் பொதுத்தேவைகளுக்காக பொதுக்காணியில் ஆலயம் ஒன்றை பொதுமக்கள் அமைத்தனர். தொடர்ச்சியாக 10 நாள் பொங்கல் வைபவம் நடைபெற்றநிலையில் நேற்றுமுன்தினம் வவுனியா பிரதேசசெயலாளர் ஓமந்தை கிராம சேவகருக்கு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த ஆலயம் பிரதேச செயலகத்தின் அனுமதி பெறப்படாமல்

அமைக்கப்பட்டுள்ளது என்றும், இதுகுறித்து அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி கோயில் கட்டடங்கள் எவையும் அமைக்கவேண்டாம் என்ற உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இது குறித்து அப்பகுதி மக்களுக்கு கிராமசேவகர் தொலைபேசி மூலம் கூறியதையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்கள் வவுனியா மாவட்ட அரச அதிபரை சந்தித்து தமக்கு வழிபாட்டு தலம் அவசியம் என்றும்–தொடந்து வழி படஅனுமதி எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் கோரினர். அதற்கு அமைய ஒரு ஏக்கர் காணியில் வழிபாட்டு தலம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ந-402)

# களைகளின் ஆக்கிரமிப்பால் விளைச்சலில் பயனில்லை

## விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, ஜூலை 1

முத்துஐயன்கட்டு மற்றும் சிறு குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் களைகளின் ஆக்கிரமிப்பால் விளைச்சலின் பயனைப் பெற முடியாது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். நெல் கொள்வனவாளர்கள் மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதாலும் தாம் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த வருடச் செய்கையின் போது ஏக்கருக்கு சுமார் 10 ஆயிரம் வரையில் களைநாசினி வாங்கி விசிறியிருந்தபோதும் மருந்துகள் பயனளிக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். அதனால் களைகள் கட்டுப்பாடின்றி வளர்ந்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அறுவடை செய்த அற்ப சொற்ப நெல்லையும் தனியார் வர்த்தகர்கள் 76 கிலோ நெல் ஆயிரத்து 850 ரூபா வீதமே கொள்வனவு செய்கிறார்கள். கிலோ ஒன்று 25 ரூபாவுக்கும் குறைவாகவே கொள்வனவு செய்கின்றார்கள். அதனால் எமது செலவைக் கூட ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. – என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

விவசாய அமைச்சோ அன்றி அரச அதிகாரிகளோ நெல்லின் உத்தர



வாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய ஆவன செய்யவில்லை என்று அவர்கள் கவலை வெளியிட்டனர்.

உத்தரவாத விலைக்கு நெல்லை சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்ய வசதி செய்யப்பட வேண்டும். இல்லையேல் தனியார் நெல்லை உத்தரவாத விலைக்கே கொள்வனவு செய்ய ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

களை நாசினிகள் பயனளிக்கவில்லை தாம் தெரிவித்தபோதிலும், அது குறித்து எவரும் கவனம் செலுத்தவில்லை. இந்தத் தொழிலை நம்பி உள்ள ஏழை விவசாயிகளான எமது குறைகளை யாரிடம் தெரிவிப்பது?. இது தொடருமானால் விவசாயச் செய்கையை கைவிடும் நிலை ஏற்பட்டுவிடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அரச அதிபர் இதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ந-500)



முன்னிலை சோஷலிஸக் கட்சியால் இடது சாரிய நடவடிக்கை "நெருக்கடியின் முன் வர்க்கத்தின் தீர்வு" எனும் தொனிப்பொருளிலான நூல் ஒன்று நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அது தொடர்பான கருத்தரங்கும் நேற்று இடம்பெற்றது. கட்சியைச் சேர்ந்த பலரும் அதில் கலந்து கொண்டிருந்தனர். (ந-4)

# கிணற்றுள் விழுந்த சிறுமிக்கு அறிவுரை கூறிய பிள்ளையார்!

முள்ளியவளை, ஜூலை 1

கிணற்றுக்குள் தவறி விழுந்த 4 வயதுச் சிறுமியை மீட்டெடுத்த பின்னர், அந்தச் சிறுமி தான் கிணற்றுக்குள் அம்மா ஒருவருடனும், பிள்ளையாருடனும் பேசிக் கொண்டிருந்தேன். அதனால் நான் பயப்படவில்லை. இனிமேல் கிணற்றடிப் பக்கம் தனியாக வரக்கூடாது என்று அவர்கள் கூறினார்கள் என்று கூறியுள்ளாள். இதைக் கேட்டவர்கள் அதிசயித்துப் போயினர். இந்தச் சம்பவம் முள்ளியவளை, 3 ஆம் வட்டாரத்தில் நடந்துள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த சிறுமியின் தந்தையும், தாயும் வீட்டில் இல்லை. அத்தை மட்டுமே இருந்தார். அவர் வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அப்போது சிறுமி தன்னிடம் உள்ள விளையாட்டுக் கார் ஒன்றை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். அந்தக் கார் கிணற்றுக்குள் விழ, சிறுமியும் அதனுள் குதித்துள்ளாள்.

12 அடி உயரத்துக்கு நீர் கொண்ட அந்தக் கிணற்றின் அகலம் 6 அடி. கிணற்றுக்குள் விழுந்த சிறுமி சுவரைப் பிடித்தபடி 'அத்தை' 'அத்தை' என்று சத்தமாகக் கூப்பிட்டுள்ளாள். அதைக் கேட்ட சிறுமியின் அத்தை ஓடிச் சென்று கிணற்றுக்குள் பார்த்துவிட்டு கிணற்று வாளிக் கயிறை உள்ளே விட்டுள்ளார். சிறுமி கயிறைப் பிடித்ததும் அதை இழுத்து சிறுமியை வெளியே எடுத்துள்ளார். சிறுமிக்கு காயங்கள் எதுவுமே இல்லை.

சிறுமியோ எந்த அச்சமும் இல்லாது தனது விளையாட்டுக் கார் பற்றியே கேட்டுக் கொண்டிருந்தாள். அங்கு ஓடி வந்த தந்தை மகளிடம் எப்படி விழுந்தாய்?, காயம் இல்லையா?, பயப்படவில்லையா? என்று கேட்டபோது தன்னுடன் பிள்ளையார் பேசிக்கொண்டிருந்தார் என்று பதிலளித்தாள்

ஒரு அம்மாவும் பிள்ளையாரும் என்னுடன் கதைத்துக் கொண்டு பயப்பட வேண்டாம். இனிமேல் இப்படிக் கிணற்றடிப்பக்கம் வரக்கூடாது என்று கூறி அத்தையை கூப்பிடும்படி கூறினார்கள். நான் அத்தையைக் கூப்பிட்டேன். அவர் வந்து என்னை வெளியே எடுத்தார் – என்று சிறுமி கூறியுள்ளாள். இதைக் கேட்டதும் அந்தப் பகுதி மக்கள் அதிசயித்துப் போயினர். கண்ணகை அம்மனும், காட்டா விநாயகரும் காப்பாற்றிவிட்டனர் என்று அவர்கள் கூறிக்கொண்டனர். உடனே அவர்கள் காட்டா விநாயகர் ஆலயத்துக்குக் குழந்தையை அழைத்துச் சென்று வழிபட்டபோது அங்கிருந்த கண்ணகை அம்மனைக் காட்டி இந்த அம்மாவும் பிள்ளையாரும்தான் தன்னுடன் கதைத்தார்கள் என்று கூறியதாம். இதைப் பலரும் அதிசயம் என்று தெரிவிக்கின்றனர். (ந-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த வந்தால் நிச்சயம் அழிவே

## எச்சரிக்கின்றார் சம்பிக்க

கொழும்பு, ஜூலை 1
சர்வாதிகாரப் பாதையில் இருந்து விடுபட்டு நாடு இன்று ஜனநாயகத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. மீண்டும் மஹிந்தவின் கையில் நாட்டைக் கொடுத்தால் அழிவு நிச்சயம் என்று அமைச்சர் சம் பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் முட்டாள்களாகச் செயற்படக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஏற்பட்டிருக்கும் பிரதமர் வேட்பாளருக்கான போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த பத்து ஆண்டுகளாக இந்த நாடு பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. பயங்கர வாதத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது, அதேபோல் சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதேபோல் சர்வாதிகார ஆட்சியாளர்களின் கடும்போக்கு அரசியலுக் கும் நாடு முகம் கொடுத்தது. வெறுமனே யுத்தத்தை வெற்றிகொண்டு நாட்டை ஆயுதப் போராட்டத்தில் இருந்து விடுவித்ததாக கூறிக் கொண்டு மக்களை ஏமாற்றிய மஹிந்த கூட்டணி நாட்டை அழிவின் பாதையில் கொண்டு சென்று விட்டது.
போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதில் நாமும் ஆவலோடு இருந்தோம். போர் நடத்தப்படாது இடைநடுவே புலிகளுக்கு ஆதரவாக அரசு செயற்பட ஆரம்பித்த போது ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்து போரை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாம் கொடுத்த அழுத்தத்தின் காரணத்தால்தான் அரசு தொடர்ந்து போரை முன்னெடுத்தது.
போர் முடிவடைந்தவுடன் நாட்டை மாற்றுப் பாதையில் கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருந்தும் முன்னைய அரசின் முக்கிய உறுப்பினர்கள் தமது அதிகார ஆசையில் சர்வாதிகார ஆட்சியை கடுமையாக்கியமையும் நாட்டில் அதிகாரக் குவிப்பை மேற்கொண்டமையுமே நாம் மஹிந்தவின் அரசில் இருந்து வெளி யேறப் பிரதானமான காரணமாக அமைந்தது.
கடந்த ஜனவரி மாதம் இந்த நாட்டில் மிக முக்கிய மாற்றம் ஒன்று ஏற்பட்டது. இதுவரை காலமும் சர்வாதிகாரமாக பயணித்த ஆட்சிப் பாதை கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலுடன் ஜனநாயகத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் பிரதான கட்சிகளாக ஒன்றிணைத்து ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்த ஆட்சியை அமைத்துள்ளோம்.
இந்த ஆட்சியில் நாடு சரியான பாதையில் பயணிக்க ஆரம்பித்துள் ளது. ஆகவே இப்போது நடைபெற விருக்கும் பொதுத் தேர்தலுடன் மீண்டும் பல கட்சி அரசியல் முறைமை உருவாக்கும் சர்வாதிகாரப் போக்கு இல்லாத, அனைத்துக் கட்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கும் வகையில் சரியானதொரு அரசியல் முறைமை உருவாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.
கேள்வி :- மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக களமிறங்குவது சாத்திய மானதா? ஏற்றுக்கொள்ளக் கூடியதா?
பதில்: மஹிந்தவை மீண்டும் பிரதமராக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி முயற்சிக்க நினைப்பது மிகவும் முட்டாள்தனமானதொரு செயற்பாடாகும். இத்தனை காலமும் நாம் போராடியதும் சர்வாதிகார குடும்ப அரசியலை அடியோடு ஒழிக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். அவ்வாறான நிலையில் மீண்டும் மஹிந்தவை அதி காரத்துக்குக் கொண்டு வர நினைப்பது ஏன்? மீண்டும் மஹிந்த கூட்டணியிடம் நாட்டை ஒப்படைத்தால் நாடு அழிவது உறுதி. அதேபோல் மஹிந்தவால் இனிமேல் அரசியலில் கால் தடம் பதிக்க முடியாது. அவரால் மீண்டும் மக்களின் ஆதரவைப் பெற முடியாது. மஹிந்த மற்றும் அவரது குடும்ப அரசியல்வாதி களைப் பற்றி மக்கள் நன்றாக அறிந்து கொண்டுள்ளனர். அவ் வாறான நிலையில் மக்கள் மீண் டும் மஹிந்தவை ஏற்றுக்கொள்ள மாட்டார் கள்.
கேள்வி :- பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமைய தனித்து போட்டியிடுமா?
பதில் :- பொதுத் தேர்தலில் நாம் தனித்து களமிறங்குவதா அல்லது கூட்டணியில் களமிறங்குவதா என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானம் இல்லை. இவ்வார இறுதியில் நாம் கட்சிக் கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்போம். (ற)

# மஹிந்தவின் வருகை நாட்டுக்குக் குந்தகம்

## அஜித் மானப்பெரும கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 1
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகை நாட்டிற்கு நல்லதல்ல. அவருக்கு ஒரு போதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்புமனு வழங்க மாட்டார். இருந்த போதிலும் மஹிந்த ராஜபக்ஷ மீளவும் அரசியலுக்கு வருகை தரும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலையிடப் போவதில்லை. - இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப் பெரும தெரிவித்துள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர் வாதத்தைக் கொண்டு அரசியல் செய்வதற்கு இடமளிக்க மாட்டோம். நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பெயரைக் கேட்டாலே கொள்ளையர்கள் விடு தலைப் புலிகளின் ஆயுத விமானத்துக்கு பயந்து நடுங்குவதைப் போன்று நடுங்குகின்றனர். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலை மையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ள தாவது:-
முன்னைய ஆட்சியின்போது மக்களுடைய பணத்தைக் கொண்டு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பதிலாக பெரியளவில் கொள்ளையிட்டனர். இதற்க மைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமான பணத்தை ராஜபக்ஷவின் குடும்பத்தின் வரப்பிரசாதங் களுக்கு மாத்திரம் பிரயோகித்துள் ளனர்.
சிறிலங்கா ரெலிகொம், லொத்தர் சபை போன்ற அரச நிறுவனங்களின் இலாபங்கள் அனைத்தையும் நாமல் ராஜபக்ஷவின் எதிர்க் கால அரசியலுக்கு செலவிட்டுள்ளனர். முன்னைய ஆட்சியின் போது மக்கள் பணத்தைக் கொள்ளையிட்டோர் தொடர்பில் சுயாதீன மான விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம். விசாரணையின் முடிவில் நிச்சயமாக குற்றவாளிகள் தண்டனையை அனுபவிப்பார்கள். மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டோர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நிதி மோசடி விசாரணை பிரிவை நிறுவினோம். தற்போது நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பெயரைக் கேட்டாலே கொள்ளையர்கள் விடுதலைப் புலிகளின் ஆயுத விமானத்துக்கு பயந்து நடுங்குவதனை விடவும் அஞ்சுகின்றனர்.
இப்படியான நிலைமையில் இலங்கை லொத்தர் சபையின் 38 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது கூட தெரியாமல் உள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் ஆட்சியின் போது முன் னெடுக்கப்பட்ட மோசடிகள் பெரும் பாலானவை தொடர்ந்தும் வெளி வந்து கொண்டே இருக்கும். மோச டிகள் தொடர்பில் நிதி மோசடி பிரிவிடம் பொறுப்பை ஒப்படைத்து சுயாதீன விசாரணையை ஆரம் பித்து குற்றவாளிகளுக்கு தண் டனை பெற்றுக்கொடுப்போம்.
இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலுக்கு வரப் போவதாக செய்திகள் வெளியான வண்ணம் உள்ளன. முன்னாள் ஜனாதிபதி மீளவும் அரசியலுக்கு பிரவேசிப்பது நாட்டிற்கு நல்லதல்ல. எவ்வாறாயினும் ஜனாதிபதி மைத்திரிபால் சிறிசேன அவருக்கு வேட்புமனு வழங்க மாட்டார். – என்றார். (ற)

# பிரதமர் பதவிக்கு போட்டியிட எனக்குப் பைத்தியம் இல்லை

## இப்படிக் கூறுகின்றார் சந்திரிகா

கொழும்பு, ஜூலை 1
பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு எனக்கு ஒன்றும் பைத்தியம் பிடிக்கவில்லை. நாட்டு மக்களின் பணத்தை கொள்ளையடித்தோரே தமது ஊழல்களை மூடி மறைப்பதற்காக அதிகார பீடமேற முனைகின்றனர். மீளவும் அரசியலுக்கு வர வேண்டிய பேராசை எனக்கு இல்லை. - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சீரழிக்கும் விமல் வீரவன்ஸவை ஒரு சதத்துக்கும் கூட தாம் கணக்கில் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்பு அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பிரதமர் வேட்பாளராக மீளவும் அரசியலுக்கு வருவதற்கு எனக்கு ஒன்றும் பைத்தியம் பிடிக்க வில்லை. நீண்ட கால அரசியல் வாழ்க்கையின் பின்பு நான் ஓய்வெடுக்க விரும்புகிறேன். எனவே ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில் மீளவும் அரசியலில் பிரவேசிப்பதற்கு நான் பேராசை பிடித்தவள் அல்ல.
அதிகார மோகம் பிடித்தவர்கள் தான் தமது ஊழல், மோசடிகளை மூடிமறைப்பதற்காக மீளவும் அதிகார பீடமேறுவதற்கு முயற்சிக்கின்றனர். ஆனால் நான் எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டு மக்களின் பணத்தை கொள்ளையிடவில்லை. ஆகையால் அதிகார மோகம் எனக்குக் கிடையாது. எனவே நான் பிரதமர் வேட்பாளராக களமிறங்கப் போவதில்லை.
அதிகார மோகம் பிடித்தவர்களே மீளவும் அரசியலுக்கு வர முனைகின்றனர்.- என்றார்.
இதன்போது விமல் வீரவன்ஸ தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேள்வி எழுப்பப்பட்டது. அதுகுறித்து அவர் குறிப்பிட்டதாவது:-
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியை சீர் குலைக்கும் வகையில் செயற்படும் விமல் வீரவன்ஸ தொடர்பில் எதுவும் என்னால் கூறமுடியாது
விமல் வீரவன்ஸவின் கருத்துக்களை நான் ஒரு சதத்திற்குக் கூட கணக்கில் எடுக்கப் போவதில்லை. – என்றார். (ற)

# எந்தச் சின்னமானாலும் மஹிந்தவுக்குத் தோல்வி

## அடித்துக் கூறுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜூலை 1
வெற்றிலைச் சின்னத்தில் அல்ல, எந்தச்சின்னத்தில் போட்டியிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைவது நிச்சயம் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, மஹிந்த அணி நாட்டில் இனவாதத்தைத் தூண்டுகிறது. இந்தப் பொதுத் தேர்தலில் மக்கள் இனவாதத்திற்கு சாவுமணி அடிப்பதும் நிச்சயிக்கப் பட்டு விட்டது என்றும் கூறியுள்ளது.
ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
இங்கு உரையாற்றிய முன்னாள் பிரதி அமைச்சரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான சுஜீவ சேனசிங்க,
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிலைச் சின்னத்தில் அல்ல அதை விடுத்து எந்தக் கட்சியில் எந்தச் சின்னத்தில் பொதுத் தேர்தலில் களமிறங்கினாலும் வெற்றி பெறமாட்டார்.
கடந்த ஜனாதிபதித்தேர்தலை விடவும் மும்மடங்கில் படுதோல்வியடைவார். எனவே மஹிந்த களமிறங்குவது எமக்கு எந்த விதத்திலும் ஒரு சவால் அல்ல. மஹிந்தவும் அவருக்கு ஆதரவு வழங்கும் விமல் தலைமையிலான அணியினரும் அரசியலில் அநாதையாக்கப்படுவார்கள்.
மஹிந்தவின் ஆட்சியில் நாட்டில் தலைவிரித்தாடிய அரச பயங்கரவாதம், வெள்ளைவான் கலாசாரம், ஊழல் மோசடிகள், வீண் விரயங்களை மக்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். அதற்கான பாடத்தையே கடந்த ஜனாதி பதித் தேர்தலில் மக்கள் மஹிந்தவுக்கு கற்பித்தனர்.
எகிப்தில் சர்வாதிகார ஆட்சி நடத்திய ஹூஸ்னி முபாரக்கின் ஆட்சியும், மியன்மாரில் குண்டர்கள் ஆட்சியும் தோல்வி கண்டன. அந்த வரிசையில் மஹிந்தவும் தோல்வி கண்டார். அதோடு ஒதுங்கிக் கொள்ளலாம். ஆனால் மீண்டும் பொதுத்தேர்தலில் போட்டியிட முயற்சிக்கின்றார். இதனை மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவரை நிராகரிப்பார்கள். எப்படியாவது தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்ற நோக்கில் மஹிந்தவும் அவரது சார்பு அணியும் நாட்டுக்குள் இனவாதத்தை தூண்டிவிடுகின்றன.
தென்னை மரத்திலிருந்து இரண்டு தேங்காய்கள் விழுந்தாலும் அதற்கு தமிழ், சிங்கள தேங்காய் என இனவாத முத்திரை குத்துகின்றனர். இவ்வாறு இனவாதத்தின் உச்சக்கட்டத்திற்கு இந்த அணியினர் பயணித்துள்ளனர். இனியும் இந்த நாட்டில் மக்கள் இன வாதத்துக்கு இடமளிக்கமாட்டார்கள். இந்தப் பொதுத்தேர்தலோடு மக்கள் இனவாதத்துக்கு சாவு மணி அடிப்பது நிச்சயமாகும்.
கடந்த 100 நாள் நல்லாட்சியில் நாட்டுக்கும் மக்களுக்கும் பல நன்மைகளை வழங்கினோம். இந்தத் தேர்தலில் ஐ.தே.கவின் வெற்றி மக்களின் வெற்றியாகும். இலங்கையில் ஐ.தே.க. ஆட்சியிலேயே பல அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவும் சீனாவும் அபிவிருத்தியில் தவழும் காலத்தில் நாம் மகாவலி போன்ற பெரும் அபி விருத்தித் திட்டங்களை முன்னெடுத் தோம். பொதுத்தேர்தலில் ஐ.தே.க. வின் வெற்றி நாட்டின் எதிர்கால அபி விருத்திக்கு மூலகாரணமாக அமையும். உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி நாட்டை வளப்படுத்துவோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகார ஆசை இல்லாதவர். எனவே தான் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை குறைத்துக்கொண்டார். அதே போன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊழல் மோசடிகள், வீண்விரயங்களை எதிர்ப்பவர். எனவே எதிர்காலத்தில் ஐ.தே.க.வின் ஆட்சியிலேயே நாடும் மக்களும் முன்னேற்றம் காண முடியும்–என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எவருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடை ஏற்பட்டு விலகும். குடும்பச் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது. மனைவியின் பேச்சு, மனதுக்கு ஆறுதல் தரும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழா ஆகிய வற்றுக்குச் சென்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** சாதுரியமாகப் பேசி, நன்மை காண்பீர்கள். உறவினர் மத்தியில் அந்தஸ்து உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வெளி யூரிலிருந்து எதிர்பார்த்த சுப செய்தி வரும்.

**கடகம்:** பணியில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். தொழில், வியாபாரம் சிறக்க, புதிய வாய்ப்புக் கிடைக்கும். சேமிப்பு பணம், முக்கிய செலவுக்கு பயன்படும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**சிங்கம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் உருவாகும். குடும்ப செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப் பீர்கள். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**கன்னி:** எதிர்கால வாழ்வு சிறக்க, புதிய வாய்ப்பு உருவா கும். நண்பரின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக இலாபம் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** வாக்குவாதத்தில் ஈடுபடும் சூழ்நிலை ஏற்பட லாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக் கும். அத்தியாவசிய செலவுக்காக கடன் வாங்க நேரிடும். நீண்டதூரப் பயணம் செல்லத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஆதரவு, வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடை யூறு விலகும். மங்களகரமான விடயத்தில் நல்ல முன்னேற்றம் உண்டா கும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு மகிழ்வீர்கள்.


**தனுசு:** யாரிடமும் வாக்குவாதம் செய்வது கூடாது. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். உணவு விடயத்தில் எச்சரிக்கை தேவை. அத்தியாவசியச் செலவுக்கு கடன் பெறுவீர்கள்.

**மகரம்:** உங்கள் பேச்சால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். குடும்பத்தினர் தேவையை நிறைவேற்றுவீர்கள். பயணத்தால் இனிய அனு பவம் பெறுவீர்கள்.

**கும்பம்:** பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த குறை மறையும். பண வரவு தடையின்றி சீராக கிடைக்கும். ஆன்மிகச் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** மன அமைதிக்கான பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். மனைவியின் பேச்சு, நிம்மதிக்கு வழிவகுக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

## அழியும் கேக் பாறை



ஆஸ்திரேலியாவுக்கு வரும் சுற்றுலா பயணி களை ஈர்த்த இடங்களில் ஒன்று வெடிங் கேக் ரொக். திருமண கொண்டாட்ட கேக்கை வெட்டினால் எப்படி இருக்குமோ அப்படி இந்த பாறை அமைந்துள்ளதால் இதற்கு இந்த பெயர்.

கடலோரமாக அமைந்துள்ள இந்த பாறை, கடல் அரிப்பின் காரணமாக இடிந்து கொண் டிருக்கிறது. எந்த நேரத்திலும் முழு பாறை யும் இடிந்துவிடலாம் என்று ஆஸ்திரேலிய சுற்றுலா அமைப்பு அறிவித்துள்ளது.

இதனால் சுற்றுலா பயணிகள் அந்த பகுதிக் குச் செல்லக் கூடாது என்று அறிவித்துள்ள நிலையில் தற்போது இந்த பாறையை கடைசியாக பார்க்க சுற்றுலாப் பயணிகள் படையெடுத்து வருகிறார்கள்.


## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

**மனைவி:** ஏங்க, உங்கள் நண்பர்கிட்ட பொண்ணு நல்லாருக்குன்னு ஏன் பொய் சொன்னீங்க?
**கணவன்:** எனக்கு பொண்ணு பார்க்கும்போது மட்டும் உண்மையா சொன்னான் அவன்!!

**மனைவி:** ஏங்க என்கிட்ட உங்களுக்கு பிடிச்சது என் சிரிப்பா, கூந்தலா, என் கண்களா.. எதுங்க?
**கணவன்:** இப்படி சிரிக்காமலேயே சூப்பரா காமெடி பண்ணுறியே அதான் பிடிச்சுருக்கு.

**மனைவி:** என்னங்க, அதோ குடிச்சிட்டு தள்ளாடிக் கிட்டே போறாரே அவரு என்னை பொண்ணு பார்க்க வந்தாரு, நான் அவரை கல்யாணம் பண்ண மாட்டேன்னு சொல்லிட்டேன். அதை நினைச்சே அவரு இத்தனை வருஷமா தண்ணியடிக்கிறாரு!
**கணவன்:** அவன் கொடுத்து வைச்சவன், அந்த சந் தோஷத்தை இத்தனை வருஷமா கொண்டாடுறானே!

## அண்ட்ரியாவை காயப்படுத்திய கிசுகிசுக்கள்



கிசுகிசுக்கள் தன்னைக் காயப்படுத்துவதாக நடிகை அண்ட்ரியா வேதனை வெளியிட் டுள்ளார். என்னைப் பற்றி நிறைய கிசுகிசுக் கள் வருகின்றன. அவர் களை எதிர்கொள்ள எனக்கு நேரம் இல்லை. பொறுமையும் இல்லை. கிசுகிசுக்கள் மூலம் என்னை காயப் படுத் தினர். தற்போது தெளி வாகிவிட்டேன். அவற்றை நான் தற்போது கண்டு கொள்வது இல்லை என்கிறார் அண்ட்ரியா.

அண்ட்ரியா பற்றிக் குறைவில்லாமல் வெளிவரும் கிசுகிசுக் கள் பற்றி மனந் திறக்கும்போது, வாழ்க்கையில் முக்கிய விடயங்களில் மட்டுமே என் கவனத்தை செலுத்துகிறேன். மென்மையான கதையம்சம் உள்ள திரைப்படங்களில் நடிக்க விரும்புகிறேன் என்று சொல்கிறார் அழகு அண்ட் ரியா.

## மகனின் முடிவுக்கு கட்டுப்பட்ட விஜய்

புலி கதையைக் கேட்டுவிட்டு, இந்தப் படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும், கண்டிப்பாக ஹிட்டாகும், என்று நடிகர் விஜய்யிடம் அவரது மகன் கூறி யிருக்கிறார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பும் முடிந்து, தற்போது இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இயக்குநர் சிம்புதேவன் படத்தின் கதையை கூறும் போது விஜய்யுடன் அவரது மகன் சஞ்சய் உடன் உட் கார்ந்து கேட்டார். முதலில் இந்தப் படத்தின் கதை பேண்டஸி சார்ந்து இருப்பதால் தனக்கு சரியாக வருமா என்று யோசித்தார் விஜய்.

சிம்புதேவன் முழுக்கதையையும் கூறிவிட்டு கிளம்பிய உடன், மகன் சஞ்சய் தான் விஜய்யிடம் இந்தப் படத்தை செய்யுமாறு தெரிவித்தார். இப்படத்தில் நடித்தால் பெருமை கிடைக்கும் என்று விஜய்யிடம் சஞ்சய் கூறியுள்ளார்.

புலி படமும் காலப் பயணத்தைப் பற்றிய படம் தான். இந்தப் படத்தில் விஜய் இரண்டு வேடத்தில் நடித்தி ருக்கிறார். ஸ்ரீதேவி ராணியாகவும், அவருடைய மகளாக ஹன்சிகாவும் நடித்திருக்கிறார்கள். படத்தை ஓகஸ்ட் அல்லது செப்ரெம்பர் மாதத்தில் வெளி யிட முடிவு செய்திருக்கிறார்கள்.



## தனக்குத்தானே அறுவைச் சிகிச்சை



முக எலும்பில் வளர்ச்சியடைந்த புற்று நோய்க்கட்டியை அகற் றுவதற்கான சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு பண வசதியற்ற நபரொருவர், தனக்குத்தானே சுயமாக சத்திர சிகிச்சைகளைச் செய்து கொண்ட சம்பவம் சீனாவில் இடம் பெற்றுள்ளது.

குவாங்ஸொயு நகரில் வசிக்கும் யு யி பேயி என்ற மேற்படி நபர், கடந்த மே மாதம் 20 ஆம் திகதி முதல் 10 தடவைகள் சத்திரசிகிச்சைகளை செய்து கொண்டுள்ளார்.

அவர் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட உபகரணங்க ளையும் தனது கையடக்கத் தொலைபேசியையும் பயன் படுத்தி தனது குளியலறை கண்ணாடியின் முன்பாக இந்த அறுவைச்சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார். தனது அறுவைச் சிகிச்சைகள் ஒவ்வொன்றுக்கும் 30 நிமிடங்களை செலவிட்டுள்ளார்.

[illegible] அவரது மனைவிக்கும் 10 வயது மகள் ஒருவர் உள்ளார்.

## ஆண்களுக்கு பாதுகாப்புக் கவசம்

கென்யா நாட்டில் கணவன் – மனைவி சண்டையின்போது, கணவனின் உயிரை பெண்கள் எடுத்து விடுவது அடிக்கடி நடை பெறுகிறது.

மேலும் சில பெண்களால் ஆண்களின் கற்புக்கு பாதுகாப்பு இல்லாத நிலையும் ஏற்பட்டது. இந்த விபரீதத்தைத் தடுக்க ஆண் களுக்கு என்று உயிர் காப்பு கவசமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பூட்டு வசதியுடன் இரும்பாலான இதனை ஆண்கள் உள்ளா டையுடன் அணிந்து கொள்ளலாம்.

இதன் விலை இலங்கை மதிப்பில் 4 ஆயி ரத்து 500 ரூபா ஆகும். இந்த உயிர் காப்பு கவசத்துக்கு கென்யாவில் இப்போதும் கடும் கிராக்கி என்று அதன் விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது கூற்றுக்காக ராஜித மன்னிப்பு கோர வேண்டும்

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரான ஏ.எல். அப்துல் மஜீத் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை 1

பதவிக்காகவும், பட்டத்துக்காகவும் முஸ்லிம்கள் மதம் மாறினார்கள் என்ற வரலாறே இந்த நாட்டில் கிடையாது. எனவே அமைச்சர் ராஜித தலைவர் ஹக்கீம் குறித்து தெரிவித்த கருத்தை மாற்றிக் கொண்டு அவர் பகிரங்கமாக முஸ்லிம் சமுதாயத்திடம் மன்னிப்புக்கோர வேண்டும்"–இவ்வாறு கல்முனை மாநகர சபையின் பிரதி மேயரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஏ.எல். அப்துல் மஜீத் கூறினார்.

கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த திங்கட் கிழமை பிற்பகல் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கல்முனை மாநகர மேயர் சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் மாநகர சபா மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதிப் பதவி கிடைக்குமாக விருந்தால் முஸ்லிம் காங்கி ரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது மதத்தையும் மாற்றிக்கொள்வார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனரட்ண அண்மையில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் பிரதிமேயர் அப்துல் மஜீத் கவலையும் கண்டனமும் தெரிவித்து சபையில் உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் இந்த விடயம் தொடர்பாகக் கூட்டத்தில் கவலையும் கண்டனமும் தெரிவித்து உரையாற்றியதுடன் இறுதியாக மேயர் நிஸாம் காரியப்பரும் உறுப்பினர்களின் கருத்துக்களை ஆமோதிக்கும் வகையில் உரையாற்றினர்.

பிரதி மேயரும்,முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவருமான அப்துல் மஜீத் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:–

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ண தகவல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குறித்துத் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கின்றது.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் கடுமையான விமர்சனங்கள் அமைச்சர் ராஜிதவின் கூற்று குறித்து முன்வைக்கப்பட்டு வருகின்றன. மிகவும் விமர்சனத்துக்குரிய கருத்தாக அது மாறியிருக்கின்றது.

**கருத்தும் கண்டனமும்**

ஜனாதிபதிப் பதவி கிடைக்குமாக விருந்தால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது மதத்தையும் மாற்றிக் கொள்வாரென அமைச்சர் ராஜித தெரி வித்த கருத்து வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்க விடயமாகும்.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் அரசமைப்பில் 20 ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக முன்மொழியப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அவருடைய தலைமையில் சிறுபான்மைக்கட்சிகளும் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டன.

இரு பிரதான கட்சிகளும் அவர்களுடைய அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான ஒரு முன்மொழிவாகவே 20 ஆவது திருத்தமிருக்கிறதென சிறுபான்மைக் கட்சிகள் சுட்டிக்காட்டின.

**சிறிமாவோ**

1972 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க முதலாவது குடியரசு சாசனத்தைக் கொண்டு வந்தபோது அப்போதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அதனைத் எதிர்த்தனர். அத்துடன் அந்த நகலைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

சிறுபான்மைச் சமூகத்துக்கு இருக்கும் ஒரேயொரு காப்புடைமையான செனட் சபையை ஒழிக்கும் சரத்து, 29 ஆவது சரத்தின் ஏ பிரிவு ஏன் நீக்கப்பட்டதெனவும் அது போன்று சிறுபான்மைசமூகத்தின் உரிமையை இல்லாமல் செய்யும் சரத்துக்கள் உள்ளடங்கியுள்ளன என்பதற்காகத் தமிழ்த் தலைவர்கள் போராடினார்கள்.

அண்ணன் அமிர்தலிங்கம் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தகைய கடந்தகால அரசியல் வரலாறுகள் உண்டு.

**ஜே.ஆர்.**

ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசியல் யாப்பு கூட சிறுபான்மைச் சமூகங்களின் பல உரிமைகளைப் பாதிக்கின்றது என்ற குரல்களும் அவ்வப்போது எழுந்து வந்துள்ளன.

எனவேதான் 20 ஆவது திருத்தமென்பது 35 வருடங்களுக்குப் பிறகு கொண்டுவரும் அரசியல் சீர்திருத்தம். சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகளை நிலைநாட்டும், உத்தரவாதப் படுத்தும் நிலைமையை உருவாக்க வேண்டுமென்பதில் எமது தலைவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

**பெரும் தலையிடி**

சிறிய கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து இதற்காகச் செயற்பட்டமை, சிங்கள இனவாத வகுப்புவாத சக்திகளுக்கு பெரும் தலையிடியாகவே இருந்தது.

குறிப்பாக எமது தலைவர் அமைச்சர் ஹக்கீம் ஒன்றிணைந்து எடுத்த 20 ஆவது திருத்தம் தொடர்பிலான நடவடிக்கைகள் அமைச்சர் ராஜித சேனாரட்ண போன்றவர்களுக்குப் பிடிக்கவில்லை.

இதனால்தான் மிக மோசமான கருத்தை அமைச்சர் ராஜித முன்வைத்துள்ளார்.

**சுயநலவாதி**

ரவூப் ஹக்கீம் ஒரு சுயநலவாதி, சமூகத்துக்காக அவர் இரட்டை வாக்கு முறையைக் கொண்டு வரவில்லை. அவருடைய கட்சியை வளர்க்கவும் அவருடைய பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தவுமே கொண்டு வருகிறார் என அமைச்சர் ராஜித கூறியது மட்டுமன்றி, ஜனாதிபதிப் பதவி கிடைக்குமாக இருந்தால் அவர் தனது மதத்தையும் மாற்றிக் கொள்வாரென்ற மிக மோசமான கருத்தையும் வெளியிட்டார்.

**15 வருடங்கள்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 15 வருடங்களாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமை தாங்கிக் கொண்டிருகின்றார். பலதடவைகள் சமூகத்துக்காக அமைச்சர் பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டு வந்துள்ளார்.

அமைச்சர் பதவிக்காக அங்குமிங்கும் அலைந்து ஆலவட்டம் போடும் ஒரு தலைவரல்ல முஸ்லிம் காங்கிரஸின் தலைவரென்பதை இத்தகையவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**ராஜித**

ஆனால் அமைச்சர் ராஜித, வளர்த்த கட்சியையே விட்டு வெளியேறி அமைச்சர் பதவியைப் பெறுவதற்காக ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து கொண்ட வரலாற்றை மறுத்துவிட முடியாது.

முஸ்லிம்கள் தமது உயிரை விடவும் சமயத்தை மேலாக மதிப்பவர்கள். அதற்காகப் போராடி மடியக் கூடியவர்கள்.

**நஸ்தி – தஸ்லீமா**

முஸ்லிம் சமுதாயத் தின் அடிப்படைக் கோட்பாடு களைக் காட்டிக் கொடுக்கும் கருத்துக் களைத் தெரிவித்த சல்மான் நஸ்தி யையும், தஸ்லீமா நஸீனையும் சமுதாயத்திலிருந்து தூக்கி எறிந் தது எமது சமுதாயம்.

எனவே அமைச்சர் ராஜித இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி முஸ்லிம் அரசவியல் வாதி பதவி, பட்டம், பணத்துக் காகச் சமயத்தைத் துறக்க மாட் டான்.

ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக எவர் மதம் மாறினார்கள் என்பதை வரலாற்றைப் புரட்டிப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

**முஸ்லிம்கள்**

முஸ்லிம்கள் அப்படியல்ல. இலங்கை வரலாற்றில் அப்படியெதுவும் பதிவு செய்யப்படவில்லை.

பதவிக்காக, பட்டத்துக்காக, பணத்துக்காக முஸ்லிம்கள் மதம் மாறினார்கள் என்ற வரலாறே கிடையாது.

எனவே அமைச்சர் ராஜித சேனாரட்ண தமது கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். அவர் பகிரங்கமாக முஸ்லிம் சமுதாயத்திடம் மன்னிப்புக் கோரவேண்டும்".– என்றார். (ற–30)

# சஞ்சிகை வெளியீடு இன்று

யாழ்ப்பாணம் ஜூலை 1

'முகவரி' சஞ்சிகை வெளியீடு இன்று புதன்கிழமை காலை 10மணிக்கு இலக்கம் 195, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் உள்ள லக்ஸ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த சஞ்சிகை வெளியீட்டு விழாவுக்கு யாழில் உள்ள இந்தியத்துணைத்தூதுவர் எ.நடராஜ் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ம)

# அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பூரணைத் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் இன்று புதன் கிழமை பூரணைத்தினத்தில் காலை 7 மணிக்கு யாழ்ப் பாணம், பலாலி வீதி, [illegible] நடராஜப்பெருமான் திருக்கோயிலில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள் ளார். (ற)

# கடை உடைத்துத் திருட்டு

நெல்லியடி, ஜூலை 1

வல்வெட்டித்துறை வல்வெட்டி வன்னிச்சி அம்மன் கோவில் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை செய்யும் கடையொன்று இனந்தெரியாத திருடர்களால் உடைக்கப்பட்டு மடிக் கணினி, தொலைபேசிகள், பணம் என்பன கடையிலிருந்து திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து வல் வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# விபத்தில் இளைஞர் காயம்

தென்மராட்சி, ஜூலை 1

ஏ–9 வீதியில் மெதுவாக வந்த மோட்டார் சைக்கிளை வேகமாக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவிலில் இடம் பெற்றது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செந் தூரன் (வயது–28) என்பவரே காயமடைந்தவராவார். அவர் விடத்தற்பளை சம்பா வெளிப் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்குச் சென்றுவிட்டு திரும்புகை யில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

# பற்றைக்குள் மது அருந்தியோர் சிக்கினர்

தென்மராட்சி, ஜூலை 1

பற்றைக்குள் மறைந்திருந்து மது அருந்தியவர்கள் பொலிஸாரிடம் அகப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம் பெற்றது.

சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ய பொலிஸார் பற்றைக்குள் மறைந் திருந்தனர். அவ்வேளையில் அங்கு வந்த 10இற்கு மேற்பட்டவர்கள் பற்றைக் குள் வைத்து மது அருந்திய போது பொலிஸாரிடம் அகப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ற–9)

# பரிசளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணியளவில் குறித்த பாடசா லையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.தனபால சிங்கம் தலைமை தாங்கும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக பீட பேராசிரியர் க.தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக பொறியியலாளரான சி.வ. கணேலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற முன்னாள் உப அதிபர்களான ஐ.மனோகரன், த.சிவப்பிரம்ம், வ.செல் வரஞ்சன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)


**வாடகைக்கு உண்டு**

இல: 94, நல்லூர் குறுக்கு வீதியில் 2000 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் விரும்பத்தக்கது. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 668 1547

**வாடகைக்கு**

ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சந்திக்கு அருகில் 4200 சதுர அடி கொண்ட புது வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் அரச அலுவலகங்களுக்கு உகந்தது. வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு.

தொடர்பு: 077 668 1547

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி சிவன் வீதிக்கு அருகில் 5 படுக்கையறைகளுடன் கூடிய இரண்டு இணைந்த குளியலறை வசதி மற்றும் சகல தளபாடங்களுடன்(Fully furnished) வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 751 3016

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கொழும்புத்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் கொழும்புத்துறை வீதிக்கரையில் 459 இலக்கம் கொண்ட வீடும் ஏறக்குறைய மூன்று பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

செல்லையா கணபதிப்பிள்ளை
சட்டத்தரணி
கொழும்புத்துறை

தொடர்பு : 077 691 4124
021 222 3812

**மேசன்மார் தேவை**

யாழ்,முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் சங்கெனின் வேலைத்தளங்களுக்கு மேசன்மார்/தொழிலாளிகள் தேவை. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். தங்குமிட வசதியுண்டு.

விவரங்களுக்கு:
071 238 7076, 071 534 9942
071 864 3636, 077 963 1789
076 850 2340, 077 762 6241





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவு



கரவற்ற கருணையாளன்

அமரர்
**நாகரத்தினம் பார்த்தீபன்**

*வஞ்சகர் வஞ்சனை*
*மிஞ்சவோ துஞ்சினாய்*

பட்டுடல் கட்டுடல் வெட்டுடன் பட்டதோ
வெட்டுடன் விட்டிடார் வேதனை விஞ்சிட
மட்டிடும் நிலையதாய் மாகொடும் கடுமையாம்
கெட்டதோர் கீழதாம் கேடதோ, செய்தனர்.
பஞ்சொரு பிஞ்சுடல் மிஞ்செழில் மேனியாய்
எஞ்சிட ஏதுடன் இன் பணி எண்ணியே
தஞ்சமொன்றில்லாதாய் தனித்துடன் ஏகினாய்
வஞ்சகர் வஞ்சனை மிஞ்சவோ துஞ்சினாய்!

தோற்றம்
10.03.1983

மறைவு
11.07.2014

குடும்பத்தினர்.
அறவழி முன்பள்ளி வீதி,
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

(16267)(9.3.7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.06.2015 திங்கட்கிழமை
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
**அற்புதம் சிதம்பரப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.07.2015) புதன்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
35, B.A. தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**முத்தையா நடராஜா**



தோற்றம்
30 . 12 . 1937

மறைவு
12 . 07 . 2014

கடந்த 12.07. 2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (01.07.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும். அத்துடன் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும். மதியபோசன நிகழ்வும் நாளை மறுதினம் (03.07.2015) வெள்ளிக்கிழமை நிகரை ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகரை வீதி,
சங்கானை.

ந.[illegible]
(மருமகன்)

# மடுத்திருத்தல திருவிழா இறுதி மீளாய்வுக் கூட்டம்

மன்னார், ஜூலை 1

மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா தொடர்பான இறுதி மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

மடுத் தேவாலயத்தின் கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல், உதவி மாவட்ட செயலாளர் திருமதி கனகாம்பிகை மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள மடுத்திருத்தலத்தின் திருவிழாவுக்குத் தேவையான முன்னேற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பது தொடர்பில் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. குறிப்பாக தேவாலய சூழலின் பாதுகாப்பு, வீதி ஒழுங்கமைப்பு, போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர், சுகாதாரம், உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் விடயங்கள் குறித்து பேசப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மதவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அதிகாரிகள், ஏனைய அரச திணைக்களங்களின் பிரதிநிதிகளுடன், மன்னார் அரச தனியார் போக்கு வரத்துத் துறையினரும் கலந்து கொண்டனர். (ற-10)

# திருட்டு ஆட்டின் இறைச்சி வாங்கியோர் விசாரணையில்

தென்மராட்சி, ஜூலை 1

ஆலய வேள்வியில் வெட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு விற்பனையான ஆட்டு இறைச்சியை மலிவு விலையில் வாங்கியவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. தமக்கு விற்கப்பட்ட ஆட்டிறைச்சி மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த ஆடொன்றினது என்பதை அவர்கள் அங்கு அறிந்து கொண்டனர். இறைச்சி விற்றவரோ தலைமறைவாகியுள்ளார். இந்தச் சம்பவம் கடந்தவாரம் சாவகச்சேரிப் பகுதியில் நடந்துள்ளது.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள வீடொன்றில் வளர்க்கப்பட்ட இரு ஆடுகள் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த வேளையில் கடா ஆடு காணாமல் போயிருந்தது. அதனைத் தேடி ஆட்டின் உரிமையாளர் பல இடங்களுக்கு அலைந்துள்ளார்.

தேடிக் களைத்து அந்தப் பகுதியில் உள்ள தனது நண்பரின் வீட்டில் இளைப்பாறும் போது நண்பர் வேள்வி இறைச்சி பற்றிக் கூறியுள்ளார். அது தொடர்பாகமேலும் தகவல்களைப் பெற்றுக்கொண்ட ஆட்டின் உரிமையாளர் இறைச்சி கொடுத்தவரைத் தேடியுள்ளார். அவர் தலைமறைவாகிய தால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார்.

அதனையடுத்து இறைச்சி வாங்கிய அனைவரும் பொலிஸ் நிலையத்திற்கு கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# நடமாடும் சேவை நாளை

தென்மராட்சி, ஜூலை 1

சாவகச்சேரி நகரசபையால் வட்டார ரீதியில் நடத்தப்படும் நடமாடும் குறைகேள் சேவை நாளை வியாழக்கிழமையும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் சபையின் இரண்டாம் வட்டாரமான மீசாலை கிழக்கில் இடம்பெறும்

நாளை மீசாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும், நாளைமறுதினம் மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் ஆலய மண்டபத்திலும் இடம்பெறும்.

இந்தக் குறைகேள் சேவையில் நகரசபைத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். வட்டார வரியிறுப் பாளர்கள் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு தமது வட்டாரத்தில் காணப்படும் குறைபாடுகளை எடுத்தியம்பி தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சேவையில் நகரசபைக்குச் செலுத்தவேண்டிய ஆதன வரி, வியாபார வர்த்தக தொழில் வரி போன்றவற்றைச் செலுத்தலாமெனவும், சைக்கிளுக்கான இலக்கத் தகடுகள் விநியோகம் இடம்பெறவுள்ளதால் வட்டார வரியிறுப்பாளர்கள் தமது சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் சபை உறுப்பினர் ப.சிறிதரன் தெரிவித்தார்.(ற-9)

# பதவியேற்றார் ஜக்ஸீஸ்

தென்மராட்சி, ஜூலை 1

யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றிய கொன்ஸ்ரன்ரைன் ஜக்ஸீல் வட மாகாண சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவரது இடத்துக்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலராகக் கடமையாற்றியரி.லிங்கநாதன் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ற-9)

# டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களை வலுப்படுத்தும் செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இயங்கும் டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களை வலுப்படுத்தும் செயலமர்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதார மருத்துவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பாடசாலை டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் கலந்து கொண்ட இந்தச் செயலமர்வை கொடிகாமம் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் அன்ரன் றொனால்ட் நடத்தினார். (ற-9)

# நகுலேஸ்வரா ம.வி. நிறுவுநர் தினம்

வலி.வடக்கு, ஜூலை 1

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழா, நகுலன் சஞ்சிகை நூல் வெளியீட்டு விழா என்பன இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் த.தயானந்தன் தலைமையில் வித்தியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தனும், சிறப்பு விருந்தினர்களாக மடு கல்வி வலய கணக்காளர் ம.ஜெயக்குமாரும் கலந்துகொள்ளவுள்ள னர்.

ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார்.

நினைவுப் பேருரையை வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் வ.வசந்தகுமாரும், வெளியீட்டுரையை திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி ஓய்வு நிலை உப அதிபர் திருமதி ஜெகதாம்பிகை கலாதரனும், மதிப்பீட்டுரையை நா.சுகந்தனும் வழங்குவர். (ற-86)

நினைவழியாப் பெருந்துயரில்
50 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி
நல்லாயன் வீதியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **கயித்தான் அருளப்பு**

தோற்றம்
1914.07.01

மறைவு
1965.07.01

அப்பா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றுமே மறையாது.
உங்களின் அன்பும் பாசமும் எம் நெஞ்சங்களில்
என்றுமே நிலைத்திருக்கும். எம்மை என்றுமே
ஆசீர்வதித்து காத்துவரும் எம் அப்பாவே
உங்கள் [illegible] அனுதினமும்
ஆண்டவரை வேண்டுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நல்லாயன் வீதி,
இளவாலை.

# வாக்குவாதம் முற்றியதில் நஞ்சருந்திய தாய், மகள்

தென்மராட்சி, ஜூலை 1

தாய்க்கும் மகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில், அவர்கள் இருவரும் ஒருவர் மாறி ஒருவர் நச்சுத் திராவகத்தைக் குடித்துள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை வேம்பிராய் வடக்கில் நடந்துள்ளது.

வீட்டில் தாய்க்கும் மகளுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் அது முற்றியதில் ஒருவர் நஞ்சை அருந்த அதனைப் பறித்து மற்றவர் அருந்தியுள்ளார். அதையடுத்து இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரம் கிராம மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன

மட்டக்களப்பு, ஜூலை 1

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் கூட்டு ஸகாத் நிதியத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிகரம் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 13 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வுக்கு இலங்கை ஜமா அத்தே இஸ்லாமியின் எஸ்.எப்.ஆர்.டி செரண்டிப் பௌண்டேஷனின் நிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளது. குறித்த வீட்டுத் தொகுதியில் இஸ்லாமிய கலாசார மத்திய நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில், செரண்டிப் பௌண் டேஷனின் நிவாரணத்துக்கும் அபி விருத்திக்குமான நிறுவனத்தின் கிழக்குப் பிராந்தியப் பொறுப்பாளர் அஷ் ஷெய்க் வாஜித் , காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் செயலாளர் அஷ்ஷெய்க் சபீல் நளீமி, அதன் முன்னாள் உப தலைவர் சுபைர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக், சம்மேளனத்தின் கூட்டு ஸகாத் நிதியத்தின் செயலாளர் ஸாதிகீன், உப தலைவர் காலித் ஜேபி, முன்னாள் காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் மர்சூக் அஹமட் லெவ்வை உட்பட காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், செரண்டிப் பௌண்டேஷனின் நிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பிரதிநிதிகள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-10)

# முன்பள்ளிச் சிறார் கல்வியை மேம்படுத்தும் செயற்றிட்டம்

## அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

பிள்ளைகளின் ஆரம்ப வயது அபிவிருத்தி தொடர்பில் தேசிய கொள்கையொன்று கட்டமைக்கப்படுமெனவும், அதன் கீழ் முன்பள்ளிக் கல்வியை முறைப்படுத்தும் செயற்றிட்ட மொன்று உலகவங்கியின் 50மில்லியன் டொலர் நிதியுதவியின் கீழ் எதிர்வரும் ஒக் ரோபர் மாதத்திலிருந்து செயற் படுத்தப்படுமெனவும் சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சரான ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் அனைத்து முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கும் ஒரே பாடத்தொகுதியின் கீழ் ஆசிரிய பயிற்சியை வழங்கி டிப்ளோமா சான்றிதழை வழங்குவது தொடர்பாக முன்பள்ளி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் நிறுவப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து முன்பள்ளிகளினதும் தரத்தை உறுதிப்படுத்தும் நியதியொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட துறைசார்ந்த நிபுணர்கள் தரப்பொன்றுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

முன்பள்ளிகளுக்குச் செல்லும் வய திலுள்ள நூற்றுக்கு 30 வீதமான சிறார்கள் வறுமை மற்றும் வேறு சிக்கல்கள், சிரமங்கள் காரணமாக முன்பள்ளிகளுக்குச் செல்லாதுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் திருமதி ரோசி சேனநாயக்க, முன்பள்ளிக் கல்வியைப் பெறவேண்டிய வயதிலுள்ள அனைத்துச் சிறுவர்கள், சிறுமியருக்கு அதைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதே தமது குறிக்கோள் என்றும் தெரிவித்தார். (ற-22)

# மன்னார் விபத்தில் அதிபர் படுகாயம்

மன்னார், ஜூலை 1

மன்னார்–உயிலங்குளம் பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் பாடசாலை அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார் இலகடி பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபரான அலெக்ஸ் குயின்டஸ் ஜேரோம் பெர்னான்டோ (வயது–47) என்வரே படுகாயடைந்துள்ளார்.

அவர்வங்காலையில்உள்ளதனதுவீட்டில் இருந்து பாடசாலைக்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் உயிலங்குளம்பிரதானவீதியூடாகசென்று கொண்டிருந்த நிலையில் உயிலங்குளம் நானாட்டான் வீதியை கடக்க முற்பட்டபோது வேக மாக வந்த ஹையஸ் ரக வாகனம் மோதியது என்று தெரிவிக்கப் பட்டது.

விபத்தை அடுத்து தூக்கி வீசப்பட்ட அவர் படுகாயமடைந்த நிலையில் அப்பகுதியில் நின்றவர்களால் மீட்கப்பட்டு உடனடியாக மன்னார் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டதோடு குறித்த ஹையஸ் ரக வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளனர். (ற-56)

# பேரீச்சம்பழ விநியோகத்தில் மக்கள் திருப்தி

யாழ்ப்பாணம், ஜூலை 1

நோன்பு காலத்துக்கென வழங்கப்பட்ட பேரிச்சம்பழங்கள் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக்கு முறையாக கிடைக்கப்பெற்றுள்ளதாக மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் கட்டமாக 136 பேருக்கு முஹம்மதியாபள்ளிவாசலில்வைத்து பேரீச்சம்பழங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதங்களில் யாழ்.முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்ட பேரிச்சம் பழங்கள் முறையாக கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வெளிவந்த நிலையில் முஹம்மதியா ஜூம்மா பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் ஏ.சி முபீன் உரிய நடவடிக்கை மேற்கொண்டு பழங்களை வழங்கியுள்ளார். இதற்கு முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு அனுசரணை வழங்கியது.

அத்துடன் சுமார் 450 யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பேரிச்சம்பழங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ற-10)

# போரால் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகள் தீர்க்கப்படவேயில்லை

## சிவன் நிறுவனத்தின் பணிப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

போரால் இடம்பெயர்ந்து தற்போது முகாம்களில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் கடந்த ஆட் சியாளர்களால் பூர்த்தி செய்யப்பட வில்லை என சிவன் நிறுவனத்தின் பணிப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

ஊரெழு சர்வசக்தி சனசமூக நிலையத்தில் ஊரெழு கிராம மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமும் முன் பள்ளிப் பாடசாலைகளுக்கு மின்னிணைப்பை பெற்றுக் கொள்வதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முகாம்களில் மக்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளுமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டுப் போர் முடிவுற்று ஆறு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட போரால் ஏற்பட்ட காயங்கள் ஆறவில்லை. மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர். நிரந்தரமான தொழிலில்லை.

மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு வசதியின்மையால் கணிசமான வீடுகளின் மின்னிணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பொது மலசல கூடங்கள் உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. சுத்தமான குடிநீரில்லை. மாணவர்கள் கல்வி கற்பதற்கான வளங்கள் இல்லை. இந்தப் பகுதியிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய என்னாலான உதவிகளைச் செய்வேன். – என்றார்.

நிகழ்வில் முன் பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ற-265, 10)

# மின்சார சபை புதிய கட்டடம் அடுத்த வாரம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பதில் பொதுமுகாமையாளர் அலுவலகக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா எதிர் வரும் திங்கட்கிழமை இடம்பெற வுள்ளது.

யாழ்.பழைய பூங்காவில் நிர்மாணிக் கப்பட்டுள்ள இந்தக் கட்டடத் திறப்பு விழாவுக்கு மின் சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். அவர்களுடன் இலங்கை மின்சார சபையின் தலைவர் எஸ்.விஜயபால உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-4)

# இராணுவத்தினரின் இரத்ததான முகாம்

மட்டக்களப்பு, ஜூலை 1

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக மட்டக்களப்பு 231 இராணுவப்படை கட்டளைத் தலைமையகத்தினால் இரத்ததான முகாம் ஒன்று நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது. இந்த இரத்ததான முகாமில் இராணுவ அதிகாரிகள் மற்றும் படைவீரர்கள் ஆகியோர் மட்டக்களப்பு போதானா வைத்தியசாலையில் இரத்த தானம் செய்தனர்.

231 இராணுவப்படை கட்டளைத்தலைமையகத்தின் உயர் அதிகாரியான மேஜர் எல்.பி.எஸ்.யு.கே. லியனகெதர மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்தான பிரிவின் வைத்தியர் எச்.டப்ளியூ.ஏ.ஐ. கருணாரட்ன ஆகியோரின் தலைமையில் இந்த இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. (ற-10)


**கணினி திருத்தம்**

2nd hand மடிக்கணினிகளும், 2nd hand branded கணினிகளும் விற்பனைக்குண்டு. இவற்றுடன் அனைத்துக் கணினிகள், மடிக்கணினிகள்,tablet, ipad திருத்திக் கொடுக்கப்படும்.

tablet, ipad ஆகியவற்றின் touch screen மாற்றித் தரப்படும்.

நாட வேண்டிய இடம் : ibuy computers
75/10, முன்னொழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P : 077 707 2092

(61464) (3,7,11)



**CHUNDIKULI GIRLS' COLLEGE**
**JAFFNA**

**Annual Prize Day 2015**

Saturday, 4th July 2015, at 9.00 a.m.

Chief Guest

Mrs. Nirmali Wickremesinghe,
Consultant to the Gateway International Schools
&
Principal emeritus of CMS Ladies' College, Colombo.

Chairperson

Ven. S.J. Jeyaveerasingan
(Archdeacon of Jaffna)

Parents, old girls & well wishers are cordially invited

Principal, Staff & Students



**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**மாதாந்த முழு நிலாக் கருத்தரங்கு**

காலம் : 01.07.2015 (புதன்கிழமை)
இடம் : சபாலிங்கம் கேட்போர் கூடம்,
யாழ்.இந்துக்கல்லூரி
நேரம் : மாலை4.00 மணி
விடயம் : யோகாசனச் செயல் முறைக் கருத்தரங்கு

யோகாசன ஆர்வலர்கள் மாணவர்கள் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். அனைவரும் வருக.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

அனுசரணை: Beetel Lanka Tours & Transport.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிவிரிச்சான் சிறார்களுக்கு இலவச மாலை நேர வகுப்புகள்

மன்னார், ஜூலை 1

போரால் இடம் பெயர்ந்து மீண்டும் மீள் குடியமர்ந்த மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பண்டிவிரிச்சான் கிராமத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி பெரிய பண்டிவிரிச்சான் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலனின் நிதி பங்களிப்புடன் மாணவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்புக்களை ஆரம்பித்துள்ளனர்.

வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீகுணசீலன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வைபவ ரீதியாக அதனை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த கிராமத்தில் உள்ள அரச பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதோடு, ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாக பெரிய பண்டிவிரிச்சான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வடமாகாண சபை உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

கிராமத்தில் உள்ள தரம் 1 முதல் 5 வரை கல்வி கற்கும் மாணவர்களை ஒன்றினைத்து அவர்களுக்கு மாலை நேரத்தில் இலவச கல்வியை மேற்கொள்வதோடு மாணவர்களுக்கு ஒழுக்கம் தொடர்பில் கற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

அதையடுத்து இலவச மாலை நேர வகுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்குத் தேவையான கற்றல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

மாலை நேர வகுப்புக்களை ஆரம்பிக்கும் நிகழ்வில் பெரிய பண்டிவிரிச்சான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (ந-56)

## வருமானப் பரிசோதகர் தொழிற்சங்க கூட்டம்

வடமாகாண வருமானப் பரிசோதகர்கள் தொழிற் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் யாழ்.பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொழிற்சங்கத் தலைவர் எஸ். சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் அண்மையில் மத்திய அரசுடன் நடத்தப்பட்ட பேச்சின் போது முன்வைக்கப்பட்ட புதிய சேவைப் பிரமாணம் உருவாக்கல் மற்றும் சம்பளம் போன்ற விடயங்கள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளதால் சகல உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை- வடமாகாண சபை பொதுச் சேவையில் வருமானப் பரிசோதகர்களாகக் கடமையாற்றுபவர்களைத் தரம் - III தரம் - II இற்கு உள்வாங்குவதற்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை இம்மாதம் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் சகல திணைக்களங்களின் செயலாளர்களுக்கு மாகாண பொதுச் சபை ஆணைக் குழுவின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந-115)

---

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசதுரை



பிறப்பு 29.02.1939 இறப்பு 30.06.2015

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரிஇராசதுரை 30.06.2015 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம், சரஸ்வதி , கண்மணி , கந்தசாமி, இராசமணி, மகேஸ்வரி மற்றும் அன்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவனேஸ்வரி (சந்திரா- கொழு ம்பு), புஸ்பராணி(ராணி - வவுனியா) , கோபாலகிருஸ்ணன் (குமார் -ஜேர்மனி), தனபாலசிங்கம் (அப்பன் -புளியங்குளம்), கணேசலிங்கம் (தங்கன் - சுவிஸ்), லோக நாயகி (உதயா -லண்டன்), சோதிநாயகி(ரூபி -சுவிஸ்), குணபால சிங்கம் (முகுந்தன் -சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் தில்லை மோகன் (பிரபல ஆங்கில புத்தக எழுத்தாளர் -யாழ்ப்பாணம்), ஞானசேகரம்(ஞானம்), பாக்கியலட்சுமி(பேபி), தனலட்சுமி, அருட் செல்வி (செல்வி), தனபாலசிங்கம் (சின்ராசு), மகேந்திரம், ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2015) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் புளியங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏ9 வீதி, பரசங்குளம்,
புளியங்குளம்,
வவுனியா.

தகவல், பிள்ளைகள்,
மருமக்கள்
தொ.பே: 0243248357

---

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா நமசிவாயம்



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நமசிவாயம் 27.06.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்ற நமசிவாயம் ஆசிரியரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், செல்லத்துரை, சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பூமணி, ருக்மணி, றஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் மகேந்திரம், காந்தி, செல்வறதி, கலா, குணம், செல்வம், ஜெயா, சிவா, சந்திரி, கண்ணா, சாந்தி, சியாமளா, நளினி, சிறீதரன், வானதி, மணிவண்ணன், சாந்தினி, பிறேமா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2015) வியாழக்கிழமை அவரது குப்பிழான் வடக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு குப்பிழான் காடாகடம்பை இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிழான் வடக்கு,
குப்பிழான். (61463)(3.6.9)

தகவல்:
வி.பரஞ்சோதி மூர்த்தி

---

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா இரகுநாதன்



பிறப்பு 1934.08.11 இறப்பு 2015.06.21

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் உடையார் வளவு புன்னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் டென்மார்க், தெகிவளையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா இரகுநாதன் 21.06.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி இரகுநாதன் (இலகுப்பிள்ளை)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற இளையதம்பி உடையார் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திரவியநாதன் (நாதன்) மற்றும் இளமுருகன், நந்தினி, வசந்தி, கருணாகரன் (கண்ணன் - டென்மார்க்), இளையதம்பி (சுவிஸ்), முருகானந்தன் (ஆனந்தன்- டென்மார்க்), குகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலநாயகி, காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சிவனேசன், குகனேசன், பவானி, அனுஜா, உமாகாந்தா, இந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் பானுஜா,கஜவதனன், பிரணவச்செல்வி, தாரங்கி, கயல்விழி, கயலன்பன், தக்ஷிணி, டௌகிதா, நிதர்சினி, கயானன், வித்தியா, நித்தியா, சௌமியா, மது கரன், அபிநயா,மதுஷிகா, மதுஜன், சினேஷிகா, சுபகரன்,பகிதரன், துவாரகன், சரணியா, டிலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று(01.07.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் மாலை வரை தெகிவளை இல்லத்தில் வைக்கப்பட்டு 02.07.2015 வியாழக்கிழமை மு.ப 10.00மணிக்கு இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் உடையார் வளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக விலங்கன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

24 A,பாடசாலை வீதி,
தெகிவளை.
011 271 5137, 077 707 4384

தகவல்: குடும்பத்தினர்
உடையார் வளவு
புன்னாலைக்கட்டுவன்தெற்கு.

---

## மரண அறிவித்தல்



### தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் (சிவசாமி)

(நவதானியா Stores & நவதானியா அரிசி ஆலை)

ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் அவர்கள் 27.06.2015 சனிக்கிழமையன்று இறைபதம் எய்தினார். அன்னார் தாமோதரம்பிள்ளை, பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் இளையமகனும் கணபதிப்பிள்ளை தெய்வானை தம்பதியினரின் மருமகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், பாகீஸ்வரி, மாங்களமேனை,தமிழரசி,பார்த்தசாரதி, மணிகண்டன், ஆகியோரின் அன்பு தந்தையும்,திருக்குமார், சிவகுமார், உத்தமன், ஜீவனா, அகிதா ஆகியோரின் மாமனாரும்,காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சுப்பையா, நாகலிங்கம் மற்றும் சிவகொழுந்து, மகாலஷ்மி, ருக்மணி தேவி ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன், தேவயானி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், காலஞ்சென்றவர்களான ராச பரமேஸ்வரி, சாரதாம்பாள், செல்லம்மா, செல்லத்துரை மார்க்கண்டு, விசாலாட்சி, சிவகுரு மற்றும் சதாசிவம், சற்குணானந்தன், குணபாலசிங்கம், கந்தசாமி, மாணிக்கவாசகர், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சகானா சரண்யா,ஜனிக்கா, அரன் அஸ்வினி,ஹாசினி, மிதுனா, அக்ஷயா ஆகியோரின் பேரனும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 01.07.2015 புதன்கிழமையும், 02.07.2015 வியாழக்கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று பிப 3.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தங்கேஸ்வரி (மனைவி) – 077 9837405
மைத்துனர்மார்கள் – 077 3619649 / 077 3170038 / 071 4181880
91/4 - 1/4, Hampden Lane, Wellawatte.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுதலாக அனுப்பிய மின்னஞ்சலை மீளப்பெற புதிய வசதி

மின்னஞ்சல் என்பது மனித வாழ்வில் இன்றியமையாததாக மாறிவிட்டது. இவ்வாறான மின்னஞ்சல் சேவையை வழங்குவதில் கூகுள் நிறுவனத்தின் ஈமெயில் முதல்வனாக விளங்குகின்றது.

இந்த நிறுவனம் காலத்துக்குக் காலம் பயனர்களின்



தேவைகள் கருதி பல புதிய வசதிகளை வழங்கி வருகின்றது. இந்த நிலையில் தற்போது தவறுதலான நபருக்கு அனுப்பிய மின்னஞ்சலை மீளப்பெற்றுக்கொள்ளும் வசதியை அறி முகம் செய்துள் ளது. இவ்வாறானதொரு வசதியை வழங்கு வதற்கு கடந்த காலத்திலிருந்தே ஆய்வுகளை மேற்கொண்டு வந்த கூகுள் நிறுவனம் Undo Send எனும் குறித்த வசதியை பய னர்களுக்காக வழங்கியுள்ள தாக கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வ மாக அறிவித் துள்ளது.



# iPhone கமராவுக்கு வினைத்திறன்

அப்பிள் நிறுவனத்தினால் வடிவமைப்பு செய்யப்பட்டு அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்ட iPhone கமெராக்கள் 8 மெகாபிக்சல்சகளை உடையதாகவே காணப்படுகின்றன. ஆனால் இந்தக் கமெ ராக்களை 20.2 மெகாபிக்சல்களை உடைய DSLR (Digital SingledLens Reflex Camera) கமராக்கள் போன்று அதி வினைத்திறன் உடையதாக் மாற் றியமைப்பதற்குரிய சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை DxO நிறுவன பொறியியலா ளர்கள் வடிவமைத்துள்ளனர்.

இதன் ஊடாக 30fps வேகம் கொண்ட தும், 1080 Pixel உடைய வீடியோக் களை, அல்லது 120fps வரையான வேகம் கொண்ட 720 Pixel உடைய வீடி யோக்களையும் பதிவு செய்ய முடியும்.

சட்டைப் பையினுள் வைத்து எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு சிறியதாக காணப்படும் இதன் விலை 599 டொலர் கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விற்பனைக்கு வரும் ஜெட்பேக்

மூன்று தசாப்த கால கடினமான உழைப்பின் காரண மாக உருவாக்கப்பட்ட Jetpack எனும் சாதனம் தனி மனிதர்களின் அல்லது பொது மக்களின் பாவனைக் காக அடுத்த வருடம் விற்பனை செய்யப்படவுள்ளது. இதனை நியூஸிலாந்து நிறுவனமான Martin Jetpack வடிவமைத்துள்ளது. விஞ்ஞானக் கட்டுக் கதைகள், சினிமாக் கதைகள் என்பவற்றில் வரும் கற்பனை விமானங்களை அடிப்படை யாகக் கொண்டு உரு வாக் கப்பட்ட இந்தச் சாதனத்தின் உதவியுடன் 3, 000 அடிகள் உயரம்வரை பறக்க முடியும். மேலும் மணிக்கு 46 மைல் வேகத் தில் பறக்கக்கூடிய இந்தச் சாதனத் தின் விலையானது 150,000 அமெ ரிக்க டொலர்கள் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகர் நினைவு தின, பரிசளிப்பு நிகழ்வு





வலி.வடக்கு, ஜூலை 1

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி யின் ஸ்தாபகர் நினைவு தினமும் வருடாந்த பரிசிளிப்பு விழாவும் கல் லூரி மண்டபத்தில் அதிபர் எம் மணி சேகரன் தலைமையில் கடந்த புதன் கிழமை பிற்பகல் நடை பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் பிரிட்டன் உள்ளூராட்சி மன்ற உறுப் பினருமான வை.தயாளன் தம்பதி யினரும் விசேட அதிதியாக ஆஸ் ரேலியாவில் வதியும் கல்வி அபி விருத்தி நிதியப் பணிப்பாளர் டாக்டர் பி.எஸ்.கணேசலிங்கம் தம்ப தியினரும்.

கௌரவ அதிதிகளாக தெல்லிப் பழை சிறி துர்க்காதேவி தேவஸ் தான தலைவர் ஆறு. திருமுருகன் மற்றும் முன்னாள் அதிபர் வேல் சிவானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நினைவுப் பேருரையை தேசிய திட்டமிடல் திணைக்களம் கொள் கைத் திட்டமிடல் பொருளாதார அலுவல்கள், சிறுவர்கள், இளை ஞர்கள் மற்றும் கலாசார அலுவல் கள் அமைச்சின் மேலதிக பணிப் பா



ளர் நாயகம் திருமதி மலர்விழி கங் காதரன் நிகழ்த்தினார்.

விருந்தினர்கள் கல்லூரி வாசலில் இருந்து மாணவ, மாணவிகளின் அணி வகுப்புடன் கலாசார விழுமி யங்களுக்கு ஏற்ப மேலைத்தேய மற் றும் கீழைத் தேய வாத்திய அணி களின் அணிவகுப்பு மரியா தையு டன் மண்டபத்திற்கு அழைத்து செல் லப்பட்டார்கள்.

மங்கல விளக்கேற்றும் நிகழ்வுகளைத் தொடர்ந்து கல்லூரி ஸ்தா பகர்க ளான பாவ லர் துரை யப்பா பிள்ளை மற்றும் அதிபர் ஜெய ரெத்தி னம் ஆகியவரிகளின் திருவு ருவுப்படங்க ளுக்கு பிரதம விருந் தினர் தயாளன் மற்றும் கௌரவ அதிதி வேல் சிவானந் தன் ஆகிய வர்கள் மலர் மாலை அணிவித் தார்கள். அதைத் தொடர்ந்து கல் லூரி மாணவிகளின் கலை நிகழ்வுக ளும் இடம் பெற்றன. (ற-869)



# கோண்டாவில் இந்துக் கல்லூரியின் தொழில்நுட்ப கூடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோண்டாவில் இந்துக்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட தொழிநுட்ப ஆய்வுகூடம் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப் பட்டது. நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆய்வுகூடத்தைத் திறந்தார்.

பாடசாலையின் அதிபர் எஸ்.தவ கீஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் வடமாகா ண சபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட், யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் தெய்வேந்திரராஜா, நல்லூர் பிர தேசசபை உறுப்பினர் தா.தியாக மூர்த்தி. கிராம சேவையாளர் திருமதி. கு.பிரதாபராஜன் மற்றும் முன்னாள் அதிபர் கள், அயல் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற் றோர், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் நேற்று முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஆதரவான வாக்கு எண்ணிக்கையின் வித்தியாசம் அதிகரித்து வருவதை அறிந்த அ.தி.மு.க தொண்டர்கள் மிகுந்த உற்சாகம் அடைந்தனர். பட்டாசு வெடித்தும் இனிப்பு வழங்கியும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# அமெரிக்காவுக்கு மீண்டும் தலைவலி

வொஷிங்டன்,ஜூலை 1

அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவரால் பிரான்ஸ் நிதி அமைச்சர்கள் உளவு பார்க்கப்பட்டதை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதிகளான ஜாக்குவெஸ் சிராக், நிக்கோலஸ் சர்கோசி மற்றும் பிராங்கோய்ஸ் ஹாலண்டே ஆகியோரை அமெரிக்கா உளவு பார்த்தது என விக்கிலீக்ஸ் ஆதாரத்துடன் கடந்த வாரம் தகவல் வெளியிட்டது. இது அமெரிக்காவுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. மீண்டும் இது போன்ற செயல்கள் நடைபெறாது என ஒபாமா உறுதி அளித்த பின்னரே பிரச்சினை ஓய்ந்தது.

ஆனால் தற்போது மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலியை ஏற்படுத்தும் வகையில் இரண்டு பிரான்ஸ் நிதி அமைச்சர்களின் தொலைபேசி மற்றும் இணைய உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டதை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது. 2011 முதல் 2014 வரை அந்த நாட்டின் நிதி அமைச்சர்களாக பதவி வகித்த பிரான்கோயிஸ் பரோயன் மற்றும் பியர் மொஸ்கோவிசி ஆகிய இரு வரின் நடவடிக்கைகளும் உளவு பார்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏற்றுமதி ஒப்பந்தங்கள், வணிகத் தகவல் போன்றவற்றை அமெரிக்கா சேகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# வன்முறைக்கு மத்தியில் புருண்டியில் தேர்தல்

புஜும்புரா,ஜூலை 1

புருண்டியில் வன்முறைச் சம்பவங்களுக்கு நடுவே நேற்று நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் புருண்டியில் நிலவும் நெருக்கடியை மேலும் அதிகமாக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பியஹே குருன்சிஷா மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டில் பல வாரங்களாக வன்முறையுடன் கூடிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.



இந்த நிலையில் நேற்று தேர்தல் நடைபெற்றது. சில வாக்குச் சாவடிகளின் மீது கையெறிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் காரணமாக தாமதமாகத் திறக்கப்பட்டன. ஆனால், இந்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளன. இந்த நிலையில் தேர்தலை நடத்துவது புருண்டியில் நிலவும் நெருக்கடியை மேலும் மோசமாக்கும் என ஐரோப்பிய ஒன்றியம் கூறியிருந்தது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான நிலைமை புருண்டியில் இல்லாததால், தமது கண்காணிப்பாளர்களை அங்கு அனுப்பவில்லை என ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது. புருண்டியில் அரசியல் நெருக்கடி தொடங்கியது முதல், அங்கு 70 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிரீஸில் பொருளாதார நெருக்கடி

## இந்தியாவின் ஏற்றுமதியில் பாதிப்பு

புதுடில்லி,ஜூலை 1

கிரீஸ் நாட்டுக்கான அவசர கால உதவியை நீடிக்க முடியாது என்ற ஐரோப்பிய மத்திய வங்கியின் முடிவை தொடர்ந்து கிரீஸ் நாட்டில் வங்கிகள் மூடப்பட்டுள்ளன. ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணம் எடுக்கவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் முழுவதும் வங்கிகள் மூடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. கிரீஸ் நாட்டின் இந்தப் பொருளாதார நெருக்கடி உலக நாடுகளின் பங்குச்சந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது இந்திய பங்குச்சந்தைகளிலும் எதிரொலித்துள்ளது.

இந்த நிலையில் கிரீஸ் நாட்டின் நிதி நெருக்கடி, அவை இந்தியாவின் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதியாகும் பொறியியற் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் ஏற்றுமதியில் பாதிப்பை ஏற்படுத்தும் என இந்திய பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல்–மே மாதத்தில் இந்தியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 1.86 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு ஏற்றுமதி இடம்பெற்றது.


கிரீஸ் பொருளாதார நெருக்கடி காரணமாக உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையை இந்திய ரிசர்வ் வங்கியும், மத்திய நிதி அமைச்சகமும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உலகளவில் பாரம்பரியமிக்க தளங்கள்; ஜேர்மனியின் 3 நகரங்களுக்கு வாய்ப்பு

பெர்லின்,ஜூலை 1

சர்வதேச அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க தளங்களைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் ஜேர்மனியில் உள்ள 3 புகழ்பெற்ற நகரங்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச அளவில் தனித்தன்மையுடன் விளங்கும் வரலாற்றுப் புகழ்பெற்ற தளங்களை தெரிவு செய்யும் பணியை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு தொடங்கியுள்ளது. சுமார் 161 நாடுகளில் உள்ள ஆயிரத்து 7 தளங்கள் இந்தப் போட்டியில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் ஜேர்மனியில் உள்ள 39 தளங்களும் அடங்கும். பாரம்பரியம் மிக்க தளங்களின் பட்டியலில் இடம் பெறுவதற்காக சர்வதேச அளவில் ஜேர்மனி நாடுதான் 3 தளங்களைப் பரிந்துரை செய்துள்ளது.



இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற தளங்களின் பட்டியல் அடுத்த வாரம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலக வங்கிக்குப் போட்டியாக புதிய வங்கி உதயம்

பீஜிங்,ஜூலை 1

ஆசியக் கட்டமைப்பு முதலீட்டு வங்கி எனும் பெயரில் புதிய வளர்ச்சி வங்கி ஒன்று தொடங்கப்பட்டுள்ளமை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்று சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் வர்ணித்துள்ளார்.

பீஜிங்கில் அந்த வங்கியின் தொடக்கத்தை குறிக்கும் வகையிலான கையொப்பமிடும் நிகழ்வொன்றின் போதே அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

அந்த வங்கியில் மிகப் பெரிய முதலீட்டாளராக சீனா உள்ளது. அதை அடுத்து இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் உள்ளன.

அந்த வங்கியின் நிர்வாகத் தரம் குறித்து கவலைகள் உள்ளன என்று கூறி அமெரிக்காவும் ஜப்பானும் அதில் இணைய மறுத்துள்ளன. இந்தப் புதிய வங்கி உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கிகளுக்குப் போட்டியாக அமையக் கூடும் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஐ)

# இந்தோனேஷியாவில் விமான விபத்து

இந்தோனேஷியா இராணுவத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று சுமத்ராதீவு அருகே விபத்துக்குள்ளானதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும் அந்த விபத்தில் 30இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பாக மீட்புப் படையைச் சேர்ந்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறும்போது 'ஹெர்குலஸ் சி 130' என்ற விமானம் சுமத்ரா அருகே உள்ள மேடன் நகர குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொறுங்கியது. கடைசியாக கிடைத்த தகவலின்படி குறித்த விபத்தில் 30பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும் விமானத்தில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்று சரியான தகவல் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# அமெரிக்கப் பூங்காவில் செல்பிக் குச்சிக்குத் தடை

வொஷிங்டன்,ஜூலை 1


உலகின் மிகப் பெரிய பொழுதுபோக்குப் பூங்காவான அமெரிக்காவில் உள்ள டிஸ்னி உலகத்துக்கு தினமும் லட்சக்கணக்கான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகள் செல்கிறார்கள். அங்கு இப்போது கைப்பேசி மூலம் செல்பி படம் எடுத்துக் கொள்வது வழக்கமாகி விட்டது.


இதற்காக சிலர் பெரிய குச்சிகளைக் கொண்டு வந்து அதன் மூலம் செல்பி படம் எடுக்கிறார்கள். இந்தக் குச்சியால் பாதுகாப்புக்கு



அச்சுறுத்தல் ஏற்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதனால் டிஸ்னி உலகுக்கு வருபவர்கள் செல்பி குச்சி கொண்டு வர உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட குச்சி இல்லாமல் அவரவர் செல்போனில் செல்பி படம் எடுக்கத் தடை இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





தற்போதைய உலகில் ரோபோக்கள் (எந்திர மனிதர்கள்) பல்வேறு சாதனை படைத்து வருகின்றன. அவற்றுக்குத் திருமணம் செய்து வைக்கும் நிகழ்வொன்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது. திருமண விழாவில் இரு தரப்பிலும் பல ரோபோக்கள் விருந்தினர்களாக பங்கேற்றன. இதன் மூலம் உலகிலேயே முதன் முறையாக ரோபோக்களுக்கு திருமணம் நடத்தி வைத்த நாடென்ற பெருமையை ஜப்பான் ஈட்டிக்கொண்டுள்ளது.

# ஐ.எஸ். தீவிரவாதிகளின் தொடரும் வெறியாட்டம்

கொய்ரோ,ஜூலை 1

எகிப்து நாட்டில் வீதியில் காரில் சென்று கொண்டிருந்த 3 நீதிபதிகளை மற்றொரு காரில் வந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுக்கொன்ற கொடூர காட்சிகளின் வீடியோ வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எகிப்து நாட்டு முன்னாள் ஜனாதிபதி முகமது மொர்ஸிக்கு அந்த நாட்டின் நீதிமன்றம் கடந்த மாதம் சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு வெளியான சில நிமிடங்களில், பல நகரங்களில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளன. மேலும், நீதிமன்றத்தில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக செயற்பட்டு வந்த வழக்கறிஞர் ஒருவரை கார் வெடிகுண்டை வெடிக்க வைத்து தீவிரவாதிகள் கொன்றனர்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து சில மணிநேரங்களில் 3 நீதிவான்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்தி வெளியாகி நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கடந்த மாதம் நிகழ்ந்த இந்தச் சம்பவம் தொடர்பான வீடியோ காட்சியை ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

வீதியில் காரில் 3 நீதிபதிகள் பயணம் செய்துள்ளனர். சிறிது தூர இடைவெளியில், ஐ.எஸ். தீவிரவாதிகள் இருவர் நீதிபதிகளின் காருக்குப் பின்னால் தொடர்ந்து சென்றிருக்கின்றனர். பின்னர், கண் இமைக்கும் நேரத்தில் நீதிபதிகளின் காருக்கு அருகில் வந்த தீவிரவாதிகள் இருவரும், தங்களது துப்பாக்கிகளை வெளியே நீட்டி, நீதிபதிகளின் காரை நோக்கிச் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினார்கள். கொடூரமான இந்தச் சம்பவத்தில், 3 நீதிபதிகளும் அதே இடத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். (ஐ)

# போஹோஹரம் தீவிரவாதிகளின் அட்டூழியம்



அபுஜா,ஜூலை 1

நைஜீரியாவில் கடத்தப்பட்ட பாடசாலை மாணவிகளை போஹோஹரம் தீவிரவாதிகள் மூளைச் சலவை செய்துவருவதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நைஜீரியாவின் சிபோக் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் கடந்த வருடம் அதிரடியாகப் புகுந்த போஹோஹரம் தீவிரவாதிகள் அங்கிருந்த 276 பாடசாலை மாணவிகளைக் கடத்திச் சென்றனர். அவர்களில் 219 பேரது கதி என்னவென இது வரை தெரியவரவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் கடத்தப்பட்ட அவர்களை தீவிரவாதிகள் கட்டாயத் திருமணம் செய்துள்ளதாகவும், அவர்களைத் தீவிரவாதிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் செய்வதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட 17 வயதுச் சிறுமி ஒருவர் கூறியதாவது, போஹோஹரம் தீவிரவாதிகள் எங்களைத் திருமணம் செய்ய கட்டாயப்படுத்தினர். நாங்கள் மறுத்த போது அருகிலிருந்த நான்கு பேரின் கழுத்தைக் கத்தியால் அறுத்தனர். மேலும் எங்களுக்கும் இதே நிலைமைதான் என்று எச்சரித்தனர். இதையடுத்து நான் உட்பட பலர் அவர்களைத் திருமணம் செய்துகொண்டோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் போஹோஹரம் தீவிரவாதிகள் பாடசாலை மாணவிகளை தீவிரவாதிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறிய அவர் சிறுமி ஒருவர் கிறிஸ்தவப் பணயக் கைதியின் கழுத்தை அறுத்ததை தான் பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் இரண்டு சிறுமிகள் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தியதில் 30 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தீவிரவாதிகள் பிரிட்டனுக்கு எதிராகச் சதித்திட்டம்

**பிரதமர் கமரூன் எச்சரிக்கை**

லண்டன்,ஜூலை 1

பிரிட்டனில் ஐ.எஸ் தீவிரவாதிகள் பயங்கரத் தாக்குதல் நடத்துவதற்கான சதித் திட்டத்தில் ஈடுப்பட்டுடிப்பதாக பிரதமர் கமரூன் வெளியிட்டுள்ள தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் செயற்பட்டு வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள் பிரிட்டன் மற்றும் பிற நாடுகளில் பயங்கரமான தாக்குதல்களை நடத்தச் சதித் திட்டம் தீட்டி வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள் அமைப்பு இருக்கும்வரை, பிரிட்டனுக்கும் பிற நாடுகளுக்கும் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருந்துக்கொண்டே இருக்கும். கடந்த வெள்ளிக்கிழமை துனிசியாவில் தீவிரவாதி ஒருவன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், பிரிட்டனைச் சேர்ந்த 30 பேர் கொல்லப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பிரதமர் கமரூன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

துனிசியாவில் நடந்த அந்தத் தாக்குதல், வரலாற்றில் நடந்த மிகத் துயரமான சம்பவங்களில் ஒன்று எனக் கூறிய அவர், பிரிட்டன் குடிமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# மறைந்துவரும் உலக அதிசயம்



பீஜீங்,ஜூலை 1

உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரின் பெரும் பகுதி மறைந்து வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. உலக அதிசயங்களில் ஒன்றாகக் கூறப்பட்டு வரும் சீனப் பெருஞ்சுவர், மிகவும் பழமை வாய்ந்ததாகும். ஷாங்ஹாயுன் நகரில் இருந்து ஜியாயூயுன் வரை பரந்து விரிந்துள்ள அந்தச் சுவரின் நீளம் 9 ஆயிரம் கிலோமீற்றரில் இருந்து 21 ஆயிரம் கிலோமீற்றர் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அந்தச் சுவர் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. இயற்கைச் சீற்றங்கள், பேரழிவுகள் ஆகியவைகள் மூலம் ஒ[illegible] பக்கம் அழிந்துவந்தாலும், ச[illegible] உள்ள கற்கள், இரும்புத் து[illegible]ளைச் சிலர் திருடிச் செல்வ த[illegible] இந்த உலக அதிசயம் கொஞ் ச[illegible]காஞ்சமாக மறைந்து வரு வ[illegible]த் தெரிவிக்கப்பட்டுள்ளது. மே[illegible]ும் சில பகுதிகளில் சீனப் பெ[illegible]ருஞ்சுவர் இருந்ததற்கான அடையா[illegible]ளம் மட்டுமே இருப்பதாகவும் தெ[illegible]ரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அமெரிக்காவில் காட்டுத் தீ; 3000 ஏக்கர் எரிந்து சாம்பல்



வொஷிங்டன்,ஜூலை 1

அமெரிக்காவின் வொஷிங்டனில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயில் 3 ஆயிரம் ஏக்கர் நிலம் மற்றும் பல்வேறு வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் தலைநகரான வொஷிங்டனின் கிழக்குப் பகுதியில் மழையின்மை காரணமாகக் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. மேலும் ஆறுகளில் உள்ள நீரின் அளவும் குறைந்துகொண்டே வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அங்குள்ள சிட்டில் நகருக்கு 140 கிலோமீற்றர் கிழக்கில் உள்ள மலையில் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அங்கு காற்று வேகமாக வீசியதை அடுத்து தீ வேகமாகப் பரவத்தொடங்கியுள்ளது. அதனால் 3ஆயிரம் ஏக்கர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 20 இற்கும் மேற்பட்ட வீடுகளும் எரிந்து சாம்பலானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று திடீரென அந்தப் பகுதியில் மழை பெய்தமையால் ஓரளவு தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது எனினும் காட்டுத்தீயின் காரணமாக ஏற்பட்டுள்ள வெப்ப நிலையால் மீட்பு நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாடாளுமன்றில் உறுப்பினர்கள் விலக[illegible]

ரொறான்ரோ,ஜூலை 1

கனடா நாடாளுமன்றத்தில் இரு[illegible]து 50 உறுப்பினர்கள் வில்கப்போ[illegible]வதாக அறிவித்துள்ளனர். அ[illegible]ர்களில் அதிகமானவர்கள் ஆ[illegible]ம் கொன்சர்வேட்டிவ் கட்சியை சே[illegible]ந்தவர்களாவர்.

குடும்பத்தினருடன் வாழ்க்[illegible] கழிப்பதற்காக அரசியலில் இரு[illegible]து ஓய்வு பெறப்போவதாக சி[illegible]ர் தெரிவித்துள்ளனர். வேறு சி[illegible]ர் வேறு பணி ஒன்றைத் தேடி[illegible]ளப்போவதாகவும், இன்னும் சி[illegible]ர் பூரண ஓய்வு எடுக்கப் போவ[illegible] கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▪ தனம்

# தானாகத் தோன்றி அருள்பாலிக்கும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் ஆலயம்

முல்லை மாவட்டத்தில் வயலும் வயல் சார்ந்த மருத நிலமாகவும் எல்லா வளங்களையும் கொண்ட பிரதேசமாக ஒட்டுசுட்டான் பிரதேசம் விளங்குகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் ஒட்டுசுட்டான் பிரதேசம் நிறைந்த வன வளமும் மற்றும் நீர் வளமும் நிலவளமும் நிரம்பப்பெற்று, முற்றிய நெற்கதிர்கள் யாவும் தென்றலிலே அசைந்தாடும் இயற்கைவனப்புக்கொண்டதொரு பிரதேசமாகும் இவற்றுக்கு மத்தியிலே மேலும் மெரு கூட்டும் வகையில் பல ஆலயங்கள் இருந்த போதிலும் பிரசித்தி பெற்ற ஆலயமாகவும் ஈச்சரங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈச்சரம் விளங்குவதோடு தானாகத் தோன்றிய சுயம்புலிங்கம் என்னும் பெரு மைக்குரியதாகவும் விளங்குகிறது. பல அற்புதங்களைக் கொண்ட தான் தோன்றி ஈசுவரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று தீர்த்தோற் சவத்துடன் நிறைவு பெறுகின்றது.

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப் பிரதேசத்துக்கு வந்தனர். இவர்களில் இருவர் ஒட்டுசுட்டான் என அழைக்கப்படும் இடத்தில் பிரிந்து செல்ல முதலாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்கு தென் மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள வாவெட்டி மலையில் தியானத்திலிருந்து சமாதியடைந்தார். இரண்டாவது சித்தர் காதலியார் சமளங்குளத்தில் வாழ்ந்து அங்கேயே சமாதியடைந்தார். மூன்றாவது சித்தர் ஒட்டுசுட்டானிலே ஒருகொன்றை மரத்தின் கீழ் நிஷ்டையிலிருந்து சமாதியடைந்தார். இவர் பூஜித்த சிவலிங்கமே இன்று தான் தோன்றி ஈசுவரமாக விளங்குகின்றது என வரலாறுகள் கூறுகின்றன.

ஆலயம் அமைந்துள்ள இடத்திலே யாழ்ப் பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த திரிபுத்திரகுமார் என்னும் சைவ மணவாளரும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் வந்து குடியேறினர். திரிபுத்திரன் காடுவெட்டிக் குரக்கன் பயிரிட்டார். குரக்கன் விளைந்தவுடன் வெட்டி எடுத்ததும், ஒட்டுப் பகுதி காய்ந்தவுடன் நெருப்பு வைத்தார். எல்லா இடங்களும் எரிந்தன. ஆனால் ஒரு கொன்றை மரத் தடியைச் சுற்றி எரியாமல் இருப்பதைக் கண்டார். எப்படியும் ஒட்டுக்களை நீக்க வேண்டும் என்ற ஆவலால் மண்வெட்டியால் வெட்டினார். வெட்டும்போது மண்வெட்டியானது ஒருகல்லில் பட்டதும் அதிலிருந்து குருதி வழிவதைக் கண்டார். இந்த மர்மத்தை அறியாத திரிபுத்தரன் அந்தப் பகுதியை ஆண்ட வன்னியனாரிடம் கூறினார்.

வன்னியனார் குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டபோது அங்கே சிவலிங்க வடிவைக் கண்டு அவ்விடத்திலே கோயில் அமைத்து வழிபாடு செய்யுமாறு மக்களிடம் பணித்தார். அதனை சிவன் எனப் பெயரிடாது கொன்றையடிப்பிள்ளையார் என பெயரிட்டு வழிபட்டனர். அந்தக் கல்லானது மேலும் மேலும் வளர்ந்து சிவலிங்கம் முழுமை யாகத் தோற்றமளித்தது. இதனை அவதா னித்த மக்கள் தானாகத் தோன்றிமையினால் தான்தோன்றீசுவரர் எனவும், வேகாத இடத்திலே தோன்றியமையால் வேகாவனேஸ்வரர் எனவும் அழைத்தனர். ஒட்டுக்களை தீயிட்டமையால் ஒட்டுசுட்டான் எனவும் ஊர் பெயர் வழங்கலாயிற்று.



> பல அற்புதங்களைக் கொண்ட தான்தோன்றி ஈசுவரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது.

ஆலயத்திருப்பணி வேலைகள் ஐந்து கட்டங்களாக இடம்பெற்றன. முதலாவது கட்டம் வன்னியனாரின் கட்டளைப்படி சிறு கோயில் அமைக்கப்பட்டது. இரண்டாவது கட்டம் யானை பிடிக்க அருள் செய்த பெருமானுக்கு பணிக்கன் கோயிலைப் பெருப்பித்துக் கட்டியமை. மூன்றாவது கட்டம் குளக்கோட்டான் திருப்பணி. சின்னத்துரை ஓவசியரின் திருப்பணி நாலாவது கட்டமுமகவும் தற்போதைய ஆலய பரிபாலன சபையும் திருப்பணிச் சபையும் ஆற்றிய திருப்பணி ஐந்தாவது கட்டமுமாகும். சிமெந்து பீப்பாக்கள் சுமந்து அடுக்கியமை, கெருடமடு தீர்த்தக் குளத்தை உருவாக்கியமை, மணியகாரருக்கு அருள்புரிந்தமை, நந்தியானது புல் தின்றமை போன்ற அற்புதங்களைக் கொண்டதாகும். இந்த விழாவானது சிறப்புற நடைபெறும் இந்த வேளையில் அனைத்து மாவட்ட மக்களும் ஆலயத்துக்கு வந்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

# வடக்கு மக்களின் வருமானத்துக்கு போதிய வழிகள் இன்னும் இல்லை

## சொப்றலொயிக் பினான்ஸ் திறப்புவிழாவில் ஆளுநர் தெரிவிப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 01

வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதும் வடமாகாண மக்களின் வருமானத்துக்கான வழிகள் இன்னமும் போதிய அளவு ஏற்படுத்தப்படவில்லை. எனவே தனியார் நிறுவனங்கள் அதற்கான வழிகளை ஏற்படுத்த வேண்டும் என வடமாகாண ஆளுநர் பளிகக்கார தெரிவித்தார்.

யாழ்.நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சொப்றலொயிக் பினான்ஸ் நிறுவனத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்று கையில்,

இந்த நிறுவனங்களைப் போன்ற வங்கியாளர்கள் பெரிய முயற்சியாளர்களுக்கு அப்பால் சிறு மு[illegible] வதில் அதிக கவ[illegible] நிதி நிறுவனங்கள் பொறுப்புக்கள் இருந்தால் மட்டுமே கடன் வழங்கும். ஆனால் இந்த நிறுவனம் பொறுப்புக்கள் இன்றி, அவர்களின் முயற்சிக்கேற்ப கடன் வழங்க முன்வந்தமை ஒரு வரவேற்கத்தக்க விடயம். வடக்கு மாகாண மக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு நிதி நிறுவனங்கள் உதவ முன்வருவதை வரவேற்கும் அதேவேளை, இந்த மக்களைக் க[illegible]காது சரியான வழியில் [illegible]வேண்டும்–என்றார்.

சொப்றலொயிக் பினான்ஸ்சின் 23 ஆவது கிளை நேற்று முன்தினம் யாழ்.நகரில் இந்த நிறுவனத்தின் வடக்கு மாகாண முகாமையாளர் நளின் விஜயக்கோன் தலைமையில் இடம்பெற்றது.

முதலில் விருந்தினர்கள் மங்கல இசை யுடன் அழைத்துவரப்பட்டு மதத்தலைவர்களின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் பிரதம விருந் தினராக கலந்து சிறப்பித்த வடமாகாண ஆளுநர் பளிகக் கார நிறுவனத்தை நாடா வெட்டி திறந்து வைத்த தோடு பிரதான உரையையும் நிகழ்த்தினார். (த–101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியில் விடிவு இல்லையா?

வேலையற்ற பட்டதாரிகளான நாம் இரவு பகல் என்று பாராமல் விழித்திருந்து உயர்தரப் பரீட்சையில் (A/L) உச்சப்புள்ளிகள் எடுத்து பல்கலைக்கழகத்தில் உள்வாங்கப்பட்டு பட்டதாரிகளானோம். பல்கலைக் கழகத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தபின் (4) நான்கு ஆண்டுகளாக வேலைவாய்ப்பின்றி வீண் பொழுதைக் கழிக்கின்றோம். பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியாதவர்கள், ஓரளவு சாதாரண சித்தி பெற்றவர்கள். அரச சேவையில், வங்கிகளில், சமுர்த்தி போன்ற இடங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளபோது பட்டதாரிகளான நாம், தனியார் கடைகளிலும், திடீரென முளைக்கும் கம்பனிகளிலும் சிறு ஊதியத்துக்கு கையேந்தி நிற்கின்றோம். இந்த அற்ப சொற்ப வேலைகள்கூட எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

என்ன அரசியல் பேசினாலும் முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில், வேலையற்ற பட்டதாரிகளின் பரிதாப நிலையை உணர்ந்து வகைதொகையின்றி வேலை வாய்ப்பை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளியையும் நிம்மதியையும் ஏற்படுத்திக் கொடுத்தனர். அவர்களுக்கு எமது மனமுவந்த நன்றிகள்.

இன்று நல்லாட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலகட்டத்தில், 100 நாள்கள் வேலைத்திட்டம் 160 நாள்கள் கடந்தும் வேலையற்ற பட்டதாரிகள் வாழ்வில் விடிவைக் காண முடியவில்லை.

கடந்த வருடம் 2012ஆம் ஆண்டு தவறவிடப்பட்ட 330 பட்டதாரிகளுக்கு யாழ்.செயலகத்தில் 03.05.2014 ஆம் ஆண்டு நேர்முகப்பரீட்சை நடைபெற்று இன்று வரை முடிவு எதுமில்லை.

யாழ். மாவட்டத்தில் இத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பொறுப்பு வாய்ந்த பிரதி அமைச்சர் இருந்தும் இந்த விடயத்தில், பல தடவைகள் கேட்டும் எதுவும் நடக்கவில்லை.

மீண்டும் மஹிந்த ஆட்சி வந்துதான் எமக்கு விடிவு கிடைக்குமென்றால் அந்த நல்ல நாளை பட்டதாரிகளான நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

*கி.அஜந்தன் மகேந்திரா*

# மாதாந்தக் கொடுப்பனவில் தாமதம்

70 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவாகிய ரூபா 2,000/= வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவு சித்திரை மாதத்துக்குப் பின் வழங்கப்படவில்லை. ஆனி மாதம் 25ஆம் திகதிக்கு முன் இந்தக் கொடுப்பனவு வழங்கப் படுமென உதயன் பத்திரிகையில் செய்தி பிரசுரமாகியும் இற்றை வரைக்கும் வழங்கப்படவில்லை. மூத்த பிரஜைகள், நீராவியடி உப தபாலகத்துக்குச் முச்சக்கர வண்டியில் வந்து தங்கள் பணத்தையும், நேரத்தையும் வீண்விரயம் செய்கின்றார்கள். இது குறித்து சரியான தகவலை பிரதேச செயலகத்தினரும், சமூக சேவைப் பகுதியினரும் வழங்கி, மூத்த பிரஜைகளுக்கு உதவும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*இ.இராஜேந்திரா*
*சமாதான நீதிவான்(தீவு முழுவதும்)*

# இவர்கள் மாணவர்களா?




யாழ் குடாநாட்டில் இளைஞர்களின் பழக்கவழக்கங்கள் மோசமான நிலைக்குச் சென்றுள்ளதை நேரடியாக அவதானிக்கும் சந்தர்ப்பம் எனக்கு நேற்றைய தினம் கிட்டியது.

நான் நேற்றையதினம் மாலை 5மணியளவில் யாழ்ப்பாணம் சிவன் ஆலயத்துக்கு முன்பாக பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். அப்போது கையில் கொப்பிகளை எடுத்துக்கொண்டு விடலைப் பருவத்திலுள்ள சில இளைஞர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சிலர் காதுகொடுத்துக் கேட்காதவாறான கெட்ட வார்த்தைகளை உரத்த குரலில் பேசியவாறு சென்றனர். பெண்கள் நிற்பதைக்கூட அவர்கள் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

இவர்கள் ஏதோ தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்பவர்களாகத் தெரிந்தது. கையில் பாடக் கொப்பிகளை வைத்துக்கொண்டு இவர்கள் மிகவும் இழிவான நிலையில் நடந்து கொண்டமை அங்கு நின்றவர்களுக்கு ஆத்திரத்தையும், அருவருப்பையும் ஏற்படுத்தியது.

குடாநாட்டு இளைஞர்கள் இவ்வளவு தரம் தாழ்ந்து இழிவான நிலைக்குச் சென்றதைப் பார்க்கும்போது இதயத்தை ஒரு கணம் பிசைந்தது. இவர்களை இப்படியே விட்டால் எமது சமூகத்தின் எதிர்காலம் பாழ்குழிக்குள் தள்ளப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் சீருடைகளுடன் வெளியே சுற்றித்திரிந்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுவார்களென்ற செய்தி அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. பாடசாலை மாணவர்களைப் போன்று தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களும் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆகவே தனியார் கல்வி நிலையங்கள் அமைந்துள்ள சூழலில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டும்.

எமது பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்குச் சில கடினமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும். நோய் தீர வேண்டுமென்றால் கசப்பு மருந்தையும் குடித்தே தீர வேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் நேற்றைய தினம் இழிவான வகையில் நடந்து கொண்ட மாணவர்கள் சுய நினைவுடன் இருந்ததாக வும் கூறமுடியவில்லை. அவர்கள் சுயநினைவுடன் இருந்திருந்தால் பொதுவிடத்தில் இவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டார்கள் என்பதுதான் எனது கணிப்பாகும்.

*வ.சரோஜினி*
*ஆனைக்கோட்டை*

## கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# நல்லாட்சி உறுதிப்படுத்தல் மைத்திரியின் கடமையாகும்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவாரா? அல்லது இல்லையா? என்பது குறித்த கருத்துகளும், ஊகங்களும் ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தல் தோல்வியுடன் ஆரம்பித்தன. மஹிந்தவை மீண்டும் அதிகாரத்துக்கு, அதாவது பிரதமர் பதவிக்கு கொண்டுவரும் மஹிந்த ஆதரவு எம்.பிக்களின் போராட்டம் படிப்படியாகப் பல கட்டங்களைக் கடந்து வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் ஒரு வாரம் உள்ள நிலையில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

மஹிந்த மீண்டும் அரசியலுக்கு வருவாரா என்பது தொடர்பாக இதுவரை எழுப்பப்பட்டு வந்த கருத்துகள், ஊகங்களுக்கு நாளை இன்று விடை கிடைத்துவிடும். மஹிந்தவின் முக்கிய அறிவிப்பு வெளிவருகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாகவோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகவோ ஒகஸ்ட் 17 பொதுத் தேர்தலில் போட்டியிட மஹிந்தவுக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படுமானால் அது ஐ.தே.க. எதிர்நோக்கும் முதலாவது பின்னடைவாக இருக்கும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இதே நிலைமைதான்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்து வருகிறார். மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதை மைத்திரி கடுமையாக எதிர்க்கிறார். மஹிந்தவுக்கு சுதந்திரக்கட்சியிலோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலோ போட்டியிட வேட்பாளர் நியமனம் வழங்கப் படமாட்டாது என்று சில நாள்களுக்கு முன் தெரிவித்திருந்தார். எனினும் தனக்கும் மஹிந்தவுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அறுவர் அடங்கிய குழு ஒன்றை மைத்திரி நியமித்திருந் தார். இது அவரது உறுதியற்ற நிலைப் பாட்டை வெளிக்காட்டுகிறது.

இந்த அறுவர் குழுவின் அறிக்கையும், மஹிந்தவின் அறிவித்தலும் ஒரே நாளில் அதாவது இன்று புதன்கிழமை வெளிவருகின்றன. அதனால் இலங்கை அரசியலில், தென்னிலங்கை அரசியலில் மிகவும் பரபரப்பான சூழ்நிலை காணப்படுகிறது. பொதுத் தேர்தல் குறித்த தனது நிலைப்பாட்டை இன்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்போவதாக மஹிந்த தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டை, மெதமுலனையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து அவரது அறிவிப்பு வெளிவருகிறது. இதனை ஒரு முக்கிய அறிவித்தலாக - பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடும் அறிவித்தலாக நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

தேர்தல் முடிவு எப்படி இருந்தாலும், மஹிந்த தனது கட்சியில் வேட்பாளர் நியமனம் பெற்றுக் கொள்ளுமிடத்து அது நிச்சயமாக மைத்திரியின் பலவீனத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கும்.

சுதந்திரக் கட்சியில் உள்ள மஹிந்த ஆதரவு அணியை ஓரங்கட்டி சுதந்திரக் கட்சியை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் மைத்திரி தோல்வியடைந்துள்ளார். இதன் பெரிய விளைவுகளே தற்போது உருவாகியுள்ள புதிய அரசியல் சூழ்நிலைகள். சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்தவின் ஆதரவு எம்.பிக்கள் குழு வில் இருப்பதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந் தவை வளைத்துப்போட முடியும் என்பதில் மஹிந்த ஆதரவு எம்.பிக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதும் அரசியலில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பங்களாகக் கருதப்படுகின்றன.

நாட்டில் ஓர் அமைதியான - சுபீட்சமான ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே கடந்த ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்தனர். அதற்கு முன்னர் நாட்டில் தலை தூக்கி இருந்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சி மீது தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் கடும் அதிருப்தி இருந்தது. குடும்ப ஆட்சியின் மூலம் தாம் விரும்பியபடி அவர்கள் முடிவுகளை மேற்கொண்டு, தமக்கு விரும்பியவர்களை விரும்பிய பதவிகளில் நியமித்து பெரும் அடாவடியான ஆட்சியை முன்னெடுத்தமை அனைவரும் அறிந்த விடயம். இதனால் அதிருப்தி அடைந்த மக்கள் நாட்டில் ஓர் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று விரும்பினர். அதன் பயனாக ஜனவரி 8 ஆம் திகதி தமது வாக்குகளை அந்த மாற்றத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். அதன் மூலம் நாட்டில் அடாத்தாகத் தலை தூக்கிய குடும்ப ஆட்சி ஒழிக்கப்பட்டு மஹிந்த தோற்கடிக்கப்பட்டார். மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றும் ஒருவராக மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

அவரது பதவியேற்பு வைபவம் முதல் பல விடயங்கள் நாட்டு மக்களின் கவனத்தை மட்டுமல்ல, சர்வதேசத்தின் பார்வையையும் ஈர்த்தன என்பதில் ஐயமில்லை. அந்தளவுக்கு மிகவும் எளிமையுடனும், சாதுவான குணத்துடனும் நாட்டில் நல்லாட்சியை நிலை நாட்டுவதற்கு புறப்பட்டார் அவர். அந்த நல்லாட்சி தொடர்ந்து நீடித்து நிலைக்க வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகிறார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் தேர்தலில் நிறுத்துவதன் மூலம் நல்லாட்சிக்காக மக்கள் வழங்கிய ஆணையை கொச்சைப்படுத்தக் கூடாதே என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

இன்றைய இக்கட்டான நிலைமையில், ஜனவரி - 8 வெற்றியைப் பாதுகாப்பதும் நாட்டில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதும் ஜனாதிபதி மைத்திரியின் துணிச்சலான நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளன. நாட்டில் நல்லாட்சிக்காக வாக்களித்த மக்கள் ஏமாற்றமடையக்கூடாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யாழில் மறுக்கப்படும் ஊடக சுதந்திரம்

வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் டி.என். சுவாமிநாதன், பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரி களுடன் சென்று பார்வையிட்டுத் திரும்பியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அரசு, தான் பதவியிலிருந்த காலமான சுமார் 155 நாள்களில் செய்துள்ள பணிகளின் பலாபலன்களை இப்போது மீள் ஆய்வு செய்வதில் இறங்கியுள்ளது. அந்த வகையிலானதாகவே அமைச்சர் சுவாமிநாதனின் இந்த வருகை அமைந்திருக்க வேண்டும். இல்லையெனில் வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களை அவர் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறியவில்லை என்று அந்த மக்கள் விசனம் தெரிவித்திருக்கமாட்டார்கள். மக்களைச் சந்திக்காமல் பணிகளின் விளைவுகளைக் கண்டறிவது சாத்தியமில்லை.

இராணுவம், அரச அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற பிரதிநிதிகள் போன்றவர்களுடன் மட்டுமே அவர் கலந்துரையாடிச் சென்றுள்ளார் என்பது மக்களின் குறை.

வடக்கில் இராணுவம் முகாம்கள் அமைத்துள்ள பகுதிகளில் இருந்து விலகுவது குறித்து அவர்களே முடிவெடுக்க வேண்டும் என்று பிரதமர் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்த அதே கருத்தையே அமைச்சர் சுவாமிநாதனும் நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் நடந்த கலந்துரையாடலின்போது வேறுவிதமாகத் தெரிவித்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. மக்கள் மீள்குடியமர்வுக்கு பாதுகாப்புத் த்ரப்பினரே தடையாக இருக்கின்றனர் என்பது அமைச்சரின் கூற்றாக இருக்கிறது.

பொதுவில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, பலவீனமான அரசுதான். அதற்கு அதிகாரத்தைச் செலுத்தும், செயற்படுத்தும் திராணி இல்லை. திராணி இல்லாமையால் துணிச்சலுக்கும் இடமில்லை. அது ஒரு சிறுபான்மை அரசாகவும், குறிப்பிட்ட குறுகிய காலத்துக்கு மட்டும் என்ற வரையறைக்குள் அமைந்த அரசாகவும் இருந்தது. எனவேதான் வடக்கு மக்களின் பிரச்சினைகளில் குறிப்பாக இராணுவ முகாம்களை அகற்றுவது, மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பாக ஒரு கொள்கையை வகுத்துச் செயற்படமுடியாமல் போயிற்று.

அவ்வாறானதோர் கொள்கையின் கீழ் எங்கெங்கே முகாம்களை உடனடியாக அகற்ற லாம். எங்கெங்கே மக்களை குடியமர்த்தலாம் என்பதை கண்டறிய விசேடமான குழுவொன்றை திறமையான நிபுணர்களைக் கொண்டமைத்து இராணுவத்தினரோடு கலந்து ஆராய்ந்திருக்க முடியும். அதன் மூலம் அவர்கள் கூறிக்கொள்வதுபோல் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலின்றி இந்த விடயத்தை கையாண்டிருக்க முடியும்.

அவை சாத்தியமாகாத நிலையில் ஜனாதிபதி மீதும் ஏனையவர்கள் மீதும் குறைபட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை.

இந்த மாதிரியானதோர் சூழ்நிலையில்தான் வடக்கின் அபிவிருத்தி குறித்து யாழ்ப்பாணம் செயலகத்தில் பத்திரிகையாளர்களை வெளியேற்றி விட்டு கலந்துரையாடல் ஒன்றை அமைச்சர் நடத்தியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடலன்று அது. வடக்கின் அபிவிருத்தி குறித்த அந்தக் கலந்துரையாடல் மக்கள் சம்பந்தமானது. அதில் என்ன இரகசியம் இருக்க முடியும்? மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்த நிலையில் மக்கள் தொடர்பு சாதன பிரதிநிதிகளை அதிகாரிகள் முன்கூட்டியே அழைத்துவிட்டு இருந்தாற்போலிருந்து வெளியேறும்படி நிர்ப்பந்தித்திருக்கிறார்கள். இது மிகவும் விசனத்துக்குரியது.

நாட்டின் தகவல் அறியும் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காக ஊடகவியலாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் இது நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. தகவல் அறியும் உரிமைச்சட்டம் நிறைவேற்றப்பட வேண் [illegible] அவசியத்தை இது வலியுறுத்துகிறது. எர் [illegible] யிலும் பத்திரிகையாளர்களை [illegible] றுக் கொள்ள முடியாத விடயம்.



# தோல்வியால் துவளாது தலைதூக்க முயலும் ராஜபக்ஷமார்

■ சிங்கள மூலம் மவ்பிம
தமிழில் விஎஸ்ரி

விடுதலைப்புலிகளது சர்வதேச வலையமைப்பு தற்போதும் பலம் மிக்கதாகச் செயற்பட்டு வருவதால் நாம் நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும்.

போர் முடிவுக்கு வந்து சரியாக ஓராண்டு காலம் கடந்த நிலையில், அதாவது 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதியன்று அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரி வித்திருந்தார். முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்த சந்தர்ப்பத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அந்த வகையில் போர் முடிவுக்கு வந்து ஓராண்டு காலம் கழிந்த நிலையிலும், மஹிந்த அரசு விடுதலைப் புலிகளது சர்வதேச வலையமைப் பைத்தடுத்து நிறுத்த எதுவுமே செய்ய இயலாத கையறு நிலையில் இருக்க நேர்ந்தது.

அப்படியானால் தற்போது எதற்காக இந்த ராஜபக்ஷமார் விடுதலைப் புலிகளது சர்வதேச வலையமைப்புக் குறித்து அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையைக் கையில் எடுத்துக் கொண்டு கூப்பாடு போடுகின்றனர். உலகில் செயற்பட்டு வரும் பயங்கரவாத அமைப்புக்கள் குறித்து அமெரிக்கா அறிக்கை களை வெளியிட்டு வருவது இன்று நேற்றுத்தான் ஏற்பட்ட வழக்க மொன்றல்ல. கடந்த பல ஆண்டு களாக வருடாவருடம் அமெரிக்கா அத்தகைய அறிக்கைகளை வெளியிட்டுத்தான் வருகிறது. அந்த அறிக் கையில் இலங்கை குறித்த பிரிவில் விடுதலைப்புலிகள் அமைப்புக் குறித்தே குறிப்பிடப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 2014ஆம் ஆண்டு வரை வருடாவருடம் வெளியிடப்பட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் அந்த அறிக்கை யில் ஒரே வகையான வாக்கியங்களே உள்ளடக்கப்பட்டு வந்துள்ளன. விடுதலைப் புலிகளது சர்வதேச வலை யமைப்பு தற்போதும் பலமான நிலையிலேயே செயற்பட்டு வரு கிறது. விடுதலைப்புலிகள் பெயரில் நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது என்பதே அந்த அறிக்கையில் தொடர்ச்சியாகக் குறிப்பிடப்பட்டு வரும் வாக்கியங்களாகும். அந்த வகையில் அண்மையில், இந்த ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கை யிலும் அதேவாசகங்களே அடங் கியுள்ளன.

விடுதலைப்புலிகளது சர்வதேச வலையமைப்பு பலமுள்ள நிலையில் செயற்படுகின்றதென்றால் அந்தத் தவறுக்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர்கள் ராஜபக் ஷமாரே. மஹிந்தவின் அரசால் இலங்கையில் விடுதலைப்புலிகளை முற்று முழுதாக அழித்தொழிக்க முடிந்த போதிலும், உலக நாடுகளில் இயங்கும் அவர்களது பிரிவுகளை செயலிழக்கச் செய்ய இயலாது போயுள்ளது. மஹிந்த லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றச் சென்ற வேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் காட்டிய கடும் எதிர்ப்பால் தமது அந்த நிகழ்வை இரத்துச் செய்ய நேரிட்டதற்கும், பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றவிருந்த வேளையில் இத்தகைய கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்ததற்கும், மஹிந்த அரசால் புலிகளது சர்வதேச வலையமைப்பை செயலிழக்கச் செய்ய முடியாது போனமையே காரணமாகும். புலிகளது அந்த வலையமைப்பை செயலிழக்கச் செய்வதற்காக மஹிந்த அரசு அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் பொதுமக்கள் தொடர்புகளை விரிவுபடுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை அவ்வவ் நாட்டு பொதுமக்கள் மத்தியில் பதிய வைப்பிக்கும் நோக்கில் அதற்கான செற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு பில்லியன் கணக்கில் பணம் செலுத்தியது. ஆனால் மஹிந்த அரசின் அந்த முயற்சியும் பயனற்றுப் போயிற்று.

அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளுக்கு இலங்கைத் தூதர்களாக மஹிந்த அரசின் காலத்தில் நியமிக்கப்பட்ட அனைவருமே மஹிந்தவின் குடும்ப உறவினர்களும், அவர்களது நெருங்கிய ஆதரவாளர்களுமே. இதன் காரணமாக அந்த நாடுகளின் இலங்கைத் தூதரகச் செயற்பாடுகள் அரசின் விருப்புக்கேற்ற விதத்தில், விடுதலைப்புலிகளுக்கு அவ்வவ் நாடுகளில் நிலவிய ஆதரவை மழுங்கடிப்பதற்கான பரப்புரைகளை மேற்கொண்டாலும், அந்த நடவடிக்கைகள் அரசு எதிர்பார்த்த விதத்தில் வெற்றியளிக்கத் தவறின. செயற்றிறனற்றவர்கள் இலங்கைத் தூதரக மட்டங்களில் கடமையாற் றியதன் விளைவு அது.

கடைசியில் மஹிந்தவின் அரசு, புலிகளது சர்வதேச வலையமைப்பை நலிவுபடுத்த, விடுதலைப்புலிகளின் வலையமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் கே.பி. என்ற குமரன் பத்மநாதனது உதவியை நாடியது. கே.பியும் தமக்கு நெருக்கமான விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பில் செயற்பட்ட நண்பர்களை இலங்கைக்கு வரவழைத்து அவர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சுமுகமான நட்புறவை ஏற்படுத்தி வைக்க முயன்றார். ஆனால் அதன் மூலம் கே.பி. இலங்கை அரசின் ஆசீர்வாதத்துடன் விடுதலைப் புலிகளது சர்வதேச வலையமைப்பின் நிதியை முடக்க முயல்வதாக புலிகளது சர்வதேச வலையமைப்பின் முக்கிய பிரமுகர்கள் குற்றஞ் சுமத்தியதால் அந்த முயற்சியிலும் மஹிந்த அரசுக்குத் தோல்வியே மிஞ்சியது.

அந்த முயற்சி தோல்வி கண்டதன் காரணமாக, விடுதலைப் புலிகளது சர்வதேச வலையமைப்பு பலமான நிலையில் செயற்பட்டு வரும் தென்னாபிரிக்க அரசின் உதவியை மஹிந்த அரசு நாடியது.

அந்த வகையில் தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிரில் ரம்போசாவின் மத்தியஸ்தத்துடன் மஹிந்த அரசுக்கும் விடுதலைப் புலிகளது சர்வதேச வலையமைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையில் சில சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அவ்விதம் பேச்சுக்கள் இடம்பெற்று வந்த நிலையிலேயே மஹிந்த திடீர் ஜனாதிபதித் தேர்தலொன்றைப் பிரகடனப்படுத்தினார்.

தற்போது மைத்திரிபால அரசின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. இந்த நிலையிலேயே அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் மேற்குறிப்பிட்ட அறிக்கை வெளியாகியது. உயிரிழந்த விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்தாவது சரி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றவிட வேண்டுமென எதிர்பார்த்திருக்கும் ராஜபக்ஷமாருக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அண்மைய அறிக்கை பழம் நழுவிப் பாலில் விழுந்ததொன்றாக ஆகியுள்ளது. அந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை உச்சாடனம் பண்ணியே, தமது தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்க ராஜபக்ஷ தரப்பு முன் நிற்கிறது.

மொத்தத்தில் மஹிந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்டு ஆறு மாதங்கள் முடிவடைகின்றன. இந்த ஆறு மாத காலமாக ராஜபக் ஷமார் முன்னெடுத்துவரும் இந்த விடுதலைப் புலிகள் பூச்சாண்டியை ஐ.தே. கட்சி அன்று முன்னெடுத்துச் செயற்பட்டிருந்தால் இன்று ஐ.தே. கட்சி அரசியலில் உச்சாணிக் கொம் பரில் உட்கார்ந்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருந்திருக்கும். தோல்வி கண்ட பின்னரும் அந்தத் தோல்வியை ஏற்றுக் கொள்ளாது, மீண்டும் வெற்றி காண்பது எப்படி? என்ற பாடத்தை ஐ.தே. கட்சி இந்த ராஜபக்ஷமாரிடமிருந்து கற்றுக்கொள்ள இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்தில் கொள்ளப்படாத புலம்பெயர் மக்களின் உரிமைகள்

தமது சொந்த நாட்டிலிருந்து ஒரு தடவை புலம்பெயர்ந்த மக்கள், அந்த நாட்டின் எதிர்காலம் தொடர்பில் ஆதரவளிக்க இயலாத வர்களாகக் கருதப்படுகின்றனர். புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் பிள்ளைகள் தமது சொந்த மொழியைப் பேசமுடியாதவர் களாகவும் கலாசாரத்தைப் புரிந்து கொள்ள முடியாத வர்களாகவும் நோக்கப்படுகின்றனர்.

சில வேளைகளில், புலம்பெயர் சமூகத்தவர்கள் வெளிநாடுகளில் வசிப்பதால் அவர்கள் செல்வச் செழிப்போடு வாழ்வதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் தமது சொந்த நாட்டை இழந்து வாழ்கின்றார்கள்.இவர்களால் இந்த உணர்வை வார்த்தைகளால் கூறமுடியாது.

எங்கள் எல்லோரையும்போல் அவர்கள் வெளிநாடுகளில் தங்கியிருக்கவில்லை. அவர்கள் தமது சொந்த நாட்டைப் பிரிந்தே வேறு நாடுகளில் வாழ்கின்றனர். இதனால் இவர்கள் தமது கருத்துக்களை உரத்துச் சொல்வதற்கான உரிமையை இழந்துள்ளனர்.

புலம்பெயர் அரசியல் என்ற ஒன்று உண்டு. வெளிநாடுகளில் இவர்கள் தமக்கான சிறிய அரசியற் கட்சிகளைக் கொண்டுள்ளனர். இவர்களின் அரசியலைக் கேலித்தனம் செய்வது இலகுவானது. இந்த மக்களுக்குள் நீண்டதொரு ஏக்கம் காணப்படுகிறது.

புலம்பெயர்ந்த மக்கள் தமது தொழில்நுட்பத் திறன் மற்றும் முதலீடு போன்றவற்றைத் தாம் வாழும் நாடுகளில் பயன்படுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களின் அரசியல் கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகள் போன்றவை இவர்கள் தாம் வாழும் நாட்டுக்குள்ளே நிதிப் பலம் பொருந்தியவர்களாக அல்லது அதிகாரம் பெற்றவர்களாக விளங்கும் போது மட்டுமே வரவேற்கப்படுகின்றன.

ஒத்திசைவான ஒரு அமைப்பாகச் செயற்படுகின்ற புலம்பெயர் மக்களைப் பற்றி இங்கு பேசப்படவில்லை. வேறுபட்ட தலைமுறையினர், வேறுபட்ட கல்வி மட்டங்கள், பல்வேறு துன்பங்களைச் சந்தித்த புலம்பெயர் மக்களின் அரசியல் கண்ணோட்டம் தொடர்பாகவே இங்கு கூறப்படுகிறது.

உலகெங்கும் சில மில்லியன் புலம்பெயர் தமிழர்கள் வசிக்கின்றனர். இவர்களில் ஒரு சாரார் சில பத்தாண்டுகளுக்கு முன்னர் வெளிநாடுகளில் குடியேறியவர்களாவர். ஏனையவர்கள் அண்மைய காலங்களில் சிறிலங்காவை விட்டுப் புலம்பெயர்ந்தவர்களாவர்.

சிறிலங்காவில் தற்போது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் தொடர்பாகப் பேசப்படுகின்றது. ஆனால் இன்னமும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் எவ்வாறான உரிமைகளை இழந்து வாழ்கின்றனர் என ஆராயப்படவில்லை.

சிறிலங்காவின் உள்நாட்டுக்குள் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகப் பேசப்படுகிறது. இவர்கள் முன்னாள் போர் வலயங்களில் வாழ்ந்த தமிழ் மக்களாகவும், தமது அன்பிற்குரியவர்களைத் தேடுகின்றவர்களாகவும் உள்ளனர். இதனால் உள்நாட்டில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாகத் தற்போது பேசப்படுகின்றது.

சிறிலங்காவில் பாதிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம்கள் தொடர்பாகப் பேசப்படுகின்றது. இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது எதிர்காலத்தில் மீளிணக்கப்பாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என வலியுறுத்தப்படுகிறது.

ஆனால் நாட்டுக்கு வெளியேயும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் வெளியில் கூறமுடியா தளவு குற்றங்களை நேரில் பார்த்த பின்னர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தற்போது வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர்.

இவர்களைக் கண்ணுக்குத் தெரியாதவர்கள் என நான் இங்கு குறிப்பிடுகிறேன். இவர்கள் தாம் வாழும் புதிய நாடுகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அல்லது சிறப்புச் சந்தைகளில் இனந் தெரியாதவர்களாக வாழ்கின்றனர்.

இவர்கள் தொடர்பான கதைகள் அல்லது இவர்கள் பட்ட துன்பங்கள் வேறெவருக்கும் தெரியாது. இந்தப் புலம்பெயர்ந்த மக்களுடன் இணக்கப்பாட்டை உருவாக்குதல் அல்லது அவர்களது இழப்புக்களை ஈடுசெய்தல் என்பது தொடர்பாக எவரும் பேசவில்லை. இவர்கள் கண்ணுக்குத் தெரியாதவர்களாக தமது நாள்களைக் கழிக்கின்றனர். இவர்கள் தாம் வசிக்கும் புதிய நாடுகளில் - பல்வேறு துன்பங்களை நாள்தோறும் அனுபவிக்கின்றனர். இவர்கள் லண்டனின் அல்லது சூரிச்சின் நடைபாதைகளில் அலைந்து திரிகின்றனர். இதன்போது இவர்கள் தாம் பட்ட சித்திரவதைகளை மீட்டிக்கொள்வார்கள்.

இவர்களது உடல்களில் சிகரெட்டால் அல்லது வேறு பொருள்களால் சுடப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன. இவர்கள் தொடர்ந்தும் இந்த வடுக்களுடனேயே வாழ வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவர்களில் சிலரால் ஒருபோதும் மேலாடைகளை அணியமுடியாத அளவுக்கு உடலில் தீக்காயங்கள் உள்ளன. ஏனெனில் இவர்களது கால்களில் அல்லது முதுகில், காய்ச்சிய இரும்புக் கம்பியால் சுடப்பட்ட அடை யாளங்கள் உள்ளன.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பலர் தமது துன்பங்களை மறைக்க முனைகிறார்கள். ஏனெனில் இவர்கள் தொடர்ச்சியாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையை எண்ணி வெட்கமுறுகின்றனர். அத்துடன் தங்களால் தமது குடும்பத்தவர்கள் இலக்கு வைக்கப்படுவார்களோ என இவர்கள் அச்சப்படுகின்றனர்.

கால்நகங்கள் பிடுங்கப்பட்டு இப்போது அவை திரும்பவும் முளைக்கின்றன. இவர்களது உடல்களை உலோகத் துண்டுகள் பதம் பார்த்துள்ளன. இவை அறுவைச் சிகிச்சை மூலம் வெட்டியகற்றப்பட முடியும். பற்கள் மீளவும் சீர் செய்யப்பட முடியும். ஆனால் இவர்கள் தமது சொந்த நாட்டில் பெற்றுக் கொண்ட மன, உள ரீதியான வடுக்கள் ஒருபோதும் அவர்களது எண்ணங்களிலிருந்து அழிக்கப்பட முடியாதவை.

முற்றுமுழுதாக இவர்களால் இதனை மறந்து வாழவும் முடியாது. சித்திரவதையே இவர்களது வாழ்வாக உள்ளது.

இவர்கள் வெளிநாடுகளில் சுகபோக வாழ்வே வாழ்வதாகக் கூறப்படுகின்றது. ஆனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஏனைய நாடுகளில் புகலிடம் கோரும் போது அந்நாட்டு குடிவரவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்படுகின்றனர். இதனால் இவர்கள் மீளவும் உளத் தாக்கத்துக்கு உட்படுகின்றனர்.

புகலிடம் கோரிய மக்கள் சிலர் அவர்களது சொந்த நாடுகளுக்குத் திருப்பியனுப்பப்படும் போது அங்கே தற்கொலை முயற்சிகளை மேற்கொள்ள முனைகின்றனர். இதனால் இவர்கள் தடுத்து வைக்கப்படும் போது தற்கொலை முயற்சி மேற்கொள்வதைத் தடுப்பதற்காக [illegible] [illegible] மீண்டும் சிறிலங்காவின் சித்திரவதை முகாங்களில் தாம் தடுத்து வைக்கப்படுவதால் தாம் எத்தகைய மனக்குழப்பத்திற்கு உள்ளாகிறோம் எனவும், புகலிடம் கோரிய நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படும் மக்கள் சில வேளைகளில் அர்த்தராத்திரிகளில் திடுக்கிட்டு விழித்து அச்சங் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் ஐரோப்பிய நாடுகளில் அல்லது ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பல ஆண்டுகள் தமக்கான புகலிட நிலையைப் பெறக் காத்திருக்க வேண்டியுள்ளனர்.

சித்திரவதைகளை அனுபவித்து அதிலிருந்து விடுபட்ட பலர் தமக்குத் தெரிந்தவர்களின் குடியிருப்புக்களில் நிலத்தில் நித்திரை செய்து, வீட்டுப் பணிப்பெண்களாகப் பணி புரிந்து, மற்றையவர்களின் பிள்ளைகளைப் பராமரித்து என பல கடினங்களை எதிர்கொள்கின்றனர். இதன்பின்னரே இவர்கள் தமக்கான தொழிலையும் தங்குமிடத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த மக்கள் தமது புகலிடக் கோரிக்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் பல்வேறு கடினங்களை எதிர்கொண்டாலும் கூட, இவர்களது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. இது ஐரோப்பாவில் வாழும் புலம் பெயர் தமிழ் மக்களின் நிலையாகும்.

இந்தியா அல்லது தென்னாசியாவில் இந்த நிலை மிகவும் மோசமானது. எந்தவொரு கணத் திலும் புலம்பெயர் மக்கள், அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டு சிறிலங்காவுக்குத் திருப்பியனுப்பப்படுவர். ஒட்டுமொத்தத்தில் இவர்கள் இருண்ட வாழ்வையே வாழ்கின்றனர்.

இவர்கள் மிகமோசமான காயங்களுக்கு மருந்து கட்ட முடியாத ஏதிலிகளாக வாழ்கின்றனர். இவர்கள் தமது உயிரைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவ்வாறான வாழ்வை வாழ்கின்றனர்.

> சிறிலங்காவில் பாதிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லீம்கள் தொடர்பாகப் பேசப்படுகின்றது. இவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது எதிர்காலத்தில் மீளிணக்கப் பாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என வலி யுறுத்தப்படுகிறது.

2009 இல் சிறிலங்காவில் போர் முடிவுற்ற பின்னர், போரிலிருந்து தப்பிய எத்தனை தமிழ் மக்கள் ஐரோப்பாவுக்கு, ஆஸ்திரேலியாவுக்கு, மலேசியாவுக்கு, தாய்லாந்துக்கு, இந்தியாவிற்குத் தப்பிச் சென்று வாழ்கின்றனர் என்பது எவருக்கும் தெரியாது. இவர்கள் ஏன் தற்போது தமது நாட்டின் எதிர்காலம் தொடர்பாகக் குரல் கொடுக்க முடியாதவர்களாக வாழ்கின்றனர்?

இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்ப் புலிகள் என்பதன் காரணமாகவே அனைத்துலக சமூகமும் அரசுகளும் இவர்களை ஓரங்கட்டுவதாகச் சிலர் கூறுவர். ஆனால் இவர்கள் சிறிலங்காத் தீவின் எதிர்காலம் தொடர்பாக குரல் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையிலேயே வாழ்கின்றனர் என்பது நிச்சயமாகும்.

தமது உடல்கள் மட்டுமே இங்கிலாந்திலும் அல்லது சுவிற்சார்லாந்திலும் இருப்பதாகவும் ஆனால் தமது மனங்கள் தமது சொந்த நாட்டிலேயே இருப்பதாகவும் சிறிலங்காவில் தொடரப்பட்ட இறுதிக் கட்டப் போரில் பாதிக்கப்பட்டு புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

இந்தப் போரில் இறந்தவர்கள் யார், உயிர் மீண்டவர்கள் யார் என்பதை அறிவதற்காக இவர்கள் இணையச் செய்திகளைப் பார்வையிடுகின்றனர். இவர்கள் வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ்கின்ற மக்களல்ல. இவர்கள் கண்ணுக்குப் புலப்படாத மக்களாக வாழக் கூடாது.

சிறிலங்காப் போரின் தாக்கத்தால் உளத்தாக்கத்துக்கு உள்ளாகிய மக்கள் வாழ்வதாக மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி அமைப்புக்கள் கூறுகின்றன.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் இது தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் சிறிலங்காவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்ததுடன் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு மற்றும் நம்பிக்கை போன்றவற்றை உள்ளடக்கியதாக எதிர்காலத்தில் எந்தவொரு பொறுப்புக்கூறலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

ஆனால் சிறிலங்காப் போரின் போது மிக மோசமான சித்திரவதைகள் மற்றும் துன்பங்களுக்கு ஆளாகி தமது விருப்புக்கு மாறாக வெளிநாடுகளில் அண்மைக் காலங்களில் அடைக்கலம் புகுந்துள்ள பல நூறு வரையான, போரிலிருந்து மீண்டெழுந்தவர்களை சிறப்பு அறிக்கையாளர் கூடத் தனது கவனத்திற் கொள்ள மறந்துவிட்டார்.

*நன்றி: புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

ஆனி-16
வியாழக்கிழமை
02.07.2015

திதி: பூரணை
மு.ப. 08.42 வரை
நட்சத்திரம்: பூராடம்
பி.இ.03.59 வரை
சுபநேரம்:
07.26-08.56 வரை
இராகுகாலம்:
01.26-02.56 வரை
மடுமாதா திருநாள்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சொல், செயல், சிந்தனைகளில் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டி வைக்க முடியும். இந்த உண்மையை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.
நீங்கள் உண்மையிலேயே எனது குழந்தைகளானால், எதற்குமே அஞ்சி நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்கக்குட்டிகளைப் போலத் திகழ்வீர்கள்.
சாவு வரும் வரையிலும் வேலை செய். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் இறந்த பிறகும் எனது ஆவி உன்னுடன் இருந்து வேலை செய்யும்.

## இஞ்சியின் மகத்துவம்

இஞ்சிச் சாற்றோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்துவர தொந்தி கரைந்து விடும். இஞ்சிச் சாறில், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட நல்ல பசி ஏற்படும்.



இஞ்சியை வதக்கி, தேன் விட்டுக் கிளறி, நீர் விட்டுக், கொதிக்க வைத்து நீரை காலை, மாலை குடித்துவர வயிற்றுப் போக்குத் தீரும். இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்த பின், நீரை எடுத்து, துளசி இலைச் சாற்றைச சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.

## இருமலை குணப்படுத்தும் தேன்

இயற்கையில் நமக்கு கிடைக்கும் பல்வேறு பொருள்கள் மருத்துவக் குணம் நிறைந்தவையாக உள்ளன. அந்த வகையில் தேன் சிறந்த மருந்தாக விளங்குகிறது. தொடர் இருமலை நிறுத்தும் ஆற்றல் தேனுக்கு இருப்பதை சித்த மருத்துவர்கள் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளின் மருத்துவர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். நமது நாட்டில் பெரும்பாலான நாட்டு மருந்துகளும் சித்த மருந்துகளும் தேனுடன் கலந்து உண்ணும்படி மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். இவ்வாறு தேனின் மகத்துவத்தை அடுக்கிக் கொண்டே போகலாம்.



## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 90 | 70 | 70–80 | 80 | 80 | 40 |
| கத்தரி | 60 | 60 | 40 | 40 | 40–60 | 40 | 60 | 20 |
| கரட் | 180 | 180 | 160 | 160 | 240–160 | 240 | 220 | 200–220 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 40 | 50–60 | 60 | 60 | 45–50 |
| பயிற்றை | 100 | 100 | 80 | 80 | 80–100 | 50 | 140 | 100 |
| பாகல் | 150 | 200 | 130 | 160 | 140 | 80 | 160 | 150–160 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 120 | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 80– 120 | 120 –160 | 160 | 140–160 | 180 | 200 | 140 |
| பூசணி | 40 | 30 | 30 | 30 | 20–30 | 20 | 50 | 15 |
| தக்காளி | 90 | 120 | 80 | 100 | 80–100 | 100 | 80 | 50 |
| வாழைக்காய் | 150 | 60 | 40 | 50 | 40–50 | 30 | 60 | 35 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 10 | 40 | 15 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 20 | 35 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 240 | 300 | 160 | 260 | 250–300 | 400 | 350 | 290 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 40–60 | 80 | 80 | 60– 70 |
| கோவா | 80 | 120 | 90 | 100 | 80 | 80 | 120 | 30 |
| வெண்டி | 120 | 100 | 100–140 | 100 | 120 | 80 | 100 | 70 |
| போஞ்சி | 160 | 240 | 140 | 160 | 200–280 | 240 | 220 | 200 |
| லீக்ஸ் | 100 | 170 | 160 | 160 | 160 | 200 | 160 | 130 |
| தேங்காய் | 50 | 25–35 | 50 | 40 | 40–50 | 40 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 | 90 | 80 | 100–120 | 120 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 120 | 100 | 60 | 120 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 15 | 10 |
| கரிமிளகாய் | 140 | 160 | 120–140 | 150 | 200 | 200 | 220 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 120 | 100 | 120 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 500 | 100 | 400–600 | 200 | 200 | 250 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 950 | 800 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 300 | 600 | 400 | 400 | 150 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 650 | 550 |
| பாரை | 550 | 600 | 650 | 650 | 600 | 400 |
| சுறா | 600 | 600 | – | 700 | 600 | |
| சீலா | 300 | 450 | 500 | 500 | 300 | – |
| விளை | 600 | 400 | 400 | 550 | 500 | 380 |
| சூரல் | 250 | 400 | 400 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 450 | – | – |
| கிழாக்கன் | 600 | 700 | 400 | 500 | 350 | – |
| ஒரா | 400 | 400 | 300 | 550 | – | 300 |
| திரளி | 300 | 250 | 200 | 400 | 150 | 250 |
| நகரை | 200 | 300 | 200 | 350 | 200 | 300 |
| ஆடை | 150 | 200 | 80 | 160 | 100 | 100 |
| ஒட்டி | 200 | 300 | 150 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 100 | 300 | 200 | 150 |
| பாலை | 350 | 350 | 300 | 450 | – | – |
| வாழை | 100 | 200 | – | 350 | – | – |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 280 | 280 | – | 250 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 2 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 | 2 |
| 4 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 5 |
| 2 | 9 | 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 |

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களை யும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | | |
| | | 3 | | | 6 | 1 | | 8 |
| 4 | 1 | 2 | | 8 | | | | |
| 1 | 4 | | | | | 8 | | |
| | 3 | | | | | | 4 | |
| | | 5 | | | | | 2 | 6 |
| | | | | 2 | | 9 | 8 | 7 |
| 5 | | 9 | 7 | | | 3 | | |
| | | | | | 9 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்களால் எதிர்காலம்



## எண் 7 கேது

முழுமை என்ற எண் 7. ஏழு கடல், ஏழு நிறம், ஏழு ரிஷி என்று உலகம் சுகிக்கும் சில முழுமையான இயற்கைத் தன்மையின் எண் 7 எனப்படும். கிரகங்களில் பாதி உடல் மனித உடலும், பாதி பாம்புத் தலையுமாக இருப்ப தாகக் கருதுவார்கள். ஆனால் 7, 16, 25 ஆம் நாள்களில் பிறந்தவர்கள் முழுமையுடை யவர்கள். ஞானத்தின் முழுமையான முனி வனாக முக்கால் வாசி உலக மக்கள் எண்ணும் ஏசு கிறிஸ்து, நியூட்டன் போன்றவர்கள் இந்த எண்ணின் ஆளுகையில் தோன்றியவர்கள். இவர்கள் தெய்வத்தின் பிள்ளை களைப் போல இருப்பார்கள். இல்லற சுகங்கள் அற்பமாக இருக்கும். எவருக்கும் கட்டுப்பட மாட்டார்கள். தங்களுக்கு உண்மை என்று தோன்றுவதை பிடித்துக் கொண்டு செயற்படுவார்கள். வைடூரியம் இரத்தினமாகும். சந்திரன் எண் 2, சூரியன் எண் 1 இவை தனக்கு எதிரிடையான எண்களாக அமைகிறது. 6, 3 தனக்கு நட் பாகவும், இசைக் கலைப் பயிற்சிக் கூடங்கள் ஆராய்ச்சி மையங்கள் தனக்கு இருப்பிடமாக ஞானம் வளர உதவக் கூடிய வர்களாகவும், வைத்தியம், நடனம், சோதிடம், அறிவியல் ஆராய்ச்சி செய்பவர்களாகவும் சாது, சன்னியாசிகளாகவும், ஆசிரியர்களாக வும் இவர்கள் இருப்பார்கள். தெய்வத்துக்கு சமமானவர்கள்.

## எண் 8 சனி

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். எட்டு லட்சுமியும் பொருந்தி வாழப் பிறந்தவர் கள் எண் 8 ஆகி, சனி எண்ணில் தோன்றி யவர்கள். ஆங்கில திகதி 8, 17, 26 இல் பிறந் தவர்கள் வாழ்க்கை ஆரம்பத்தில் இளநிலை களில் சிரமங்களை தாய், தந்தை இல்லாமல் அல்லது அவர்களால் சரியாக பராமரிக்கப் படாமல் தொல்லையான வாழ்க்கையையும், பின்னர் தாங் களே மற்றர்கள் விரும்பி ஏற்க முடியாத துறைகளில் வேலை யைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு சுயம்பு போல தங்களை வளர்த்துக் கொள்ளக் கூடியவர்கள். யாருடனும் கூடி இருக்க மாட்டார்கள். நாளுக்கு நாள் தங்கள் வழி தனி வழி என்பதைக் காட்டிக் கொள்வார்கள். அசிங்கம், தள்ளிவிடப்பட்ட தரம் இல்லாதவைகளில் கலை யாக தரமான தாக குப்பையிலும் குண்டு மணி எடுப்பது போல இருக்கக் கூடியவர்கள் இவர்கள். ராசி எண் 2, 6. ராசி நிறம் நீலம். எதிரிடையான எண் 1, 9. ஏறிவாழ வந்தவர்கள், இம்சை பட்டு வாழ்க் கையைக் கண்டவர்கள். பொருள் பலமற்ற எல் லாம் பொருந்த வாழக் கூடியவர்களாக இவர்கள் இருப்பார்கள். இருட்டு உலகம் என்றால் என்ன என்பதையும் கண்டவர்களாக இருப்பார்கள்.

## எண் 9 செவ்வாய்

புலி பசித்தாலும் பசிக்காவிட்டாலும் வேட்டை யாடும். மின்சாரம் என்பதை எடுத்துக் கொண்டு வேலை செய்வது போக, தாங்களே உற்பத்தியும் செய்வார்கள் என்பதற்கு உதாரணமானவர்கள் எண் 9 இல் பிறந்தவர்கள். ஆங்கிலத் திகதி 9, 18, 27 இல் தோன்றியவர்கள் இவர்கள். தாங்கள் உதவி செய்தவர்கள் தங்கள் நலத்தைப் பேண வேண்டும் என்பதில் அக்கறை காட்டுவார்கள். எவராவது தனக்கு பயன்படா விட்டால் அவர்களை விலக்கிக் கொள்வார்கள். மனைவி புகழ் உடைய பெண்ணாக இருக்க வேண்டும் என விரும்புவர். பெரிய அதிகாரிகளாக அரச பிரதானிகளின் நம்பிக்கை குரியவர்களாக இவர்கள் படைத்தலை வனைப் போல வாழ்வார்கள். பவளம் இயற்கை யாக உள்ளபடி ஆபரணங்களில் பயன்படுவது போல தாங்கள் பிறப்பால் மற்றவர்களைப் பாதுகாப்ப வர்களாக இருப்பார்கள். கண்கள் செவ்வரி ஓடியதாக இருக்கும். முன்கோபி என்றுகூடக் கூறலாம். நற்பலன் செயல்களைச் செய்வார்கள். எண் 2, 3 இவற்றுடன் நட்பும் எண் 8, 5 இல் எதிர்ப்பும், பவளம் ராசியாகவும் அமையும்.

எல்லா எண்களும் அதன் அதன் தனித்தன்மைகள் உடையவை. அந்த வகையில் செயல்பாடுகளைச் செய்து வந்தால் வாழ்க்கை வெற்றியளிக்கும்.

# பொறாமை வேண்டாம் பெண்ணே




பொறாமை, பெண்களின் கூடப்பிறந்த குணங்களில் ஒன்று. பொறாமை என்பது ஒருவித மனநோய் என்றுதான் கூற வேண்டும். தான் பெறாத ஒன்றை பிறர் பெறும் போது ஏற்படும் ஒருவகை உணர்வே பொறாமை உணர்வாகும். சிலர் தாம் பெற்றிருப்பதைத் தனக்குக் கீழே உள்ளவர்கள் பெறும் போதும் பொறாமை கொள்வர்.

பெண்களின் பொறாமைக் குணம் ஆச்சரியமானது. பொறாமை நெருக்கமானவர்களுக்கு மத்தியில் தான் ஏற்படும். அமெரிக்காவில் இருக்கும் ஒருவன் மீது இலங்கையில் இருப்பவன் பொறாமை கொள்ள மாட்டான். ஒரே துறையில் இருக்கும் இருவருக் கிடையே தான் பொறாமை ஏற்படும். ஆனால் பெண்களின் பொறாமை ஆச்சரியமானது.

தனது சகோதரிக்கு அழகிய கணவன் கிடைத்திருக்கிறான் என்று பொறாமை கொள்ளும் பெண்களும் இருக்கின்றனர். சில பெண்கள் தமது குடும்ப வாழ்வில் பல சிரமங்களைச் சந்தித்திருப்பர். கண வனால் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டிருப்பர். இவர்கள் தங்களது மருமகள்மாரைப் பார்க்கின்றனர். தமது மகன்மார் அவர்களை அடிப்பதில்லை, தமது மருமகள் தாம் அனுபவித்த கஷ்டங்களை அனுபவிக்காமல் மகிழ்வாக வாழ்வதைப் பார்க்கும் போது சில மாமிமார்களுக்குப் பொறாமை ஏற்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் பெறும் இன்பத்தை நிறுத்த ஏதேனும் செய்ய முடிந்தால் செய்வார்கள். அப்படி இல்லையென் றால் புறம் பேசி, கோள் சொல்லி அல்லது அவதூறு கூறி அவளது கௌரவத்தைக் குறைக்க முயல்வார்கள். இந்தப் பொறாமைக் குணத்தால் மன அமைதி கெடுகின்றது.

நீங்கள் பொறாமைக்காரியாக இருந்தால் உங்கள் நிம்மதியை யும் மன அமைதியையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். நீங்கள் எவர் மீது பொறாமை கொள்கிறீர்களோ அவர்கள் சந்தோசப்படும் போதெல்லாம் உங்களுக்குக் கவலையை ஏற்படும். இது தேவை தானா?

உங்களோடு கூட இருப்பவர்கள் வாழ்வில் சந் தோசங்களை அனுபவிக்கும்போது அவர்கள் மீது பொறாமை கொள்வதை விட்டு விட்டு, அவர்களை வாழ்த்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைக்காதது உங்கள் தோழிக்கோ, உறவுக்காரப் பெண்ணுக்கோ கிடைத்திருக்கிறதே என்று மகிழ்ச்சி கொள்ளுங்கள். மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். உங்களுடன் கூட இருப்பவர்கள் சிறப்பை அடையும் போது மகிழ்வடையக் கற்றுக் கொள்ளுங்கள். பொறாமை கொண்டு அவர்களின் அந்தஸ்தையும், மகிமையையும் குறைக்கும் வண்ணம் பேசித் தொலைக்காதீர்கள். கூட இருப்பவர்கள் மகிழ்ச் சியுடன் இருக்கும்போது முகத்தை சுருட்டிக் கொண்டு சோகத்தில் வாடாதீர்கள். மலரும் பூக் களைக் கண்டு மனம் சோர்வடையலாமா? பூக்களின் நறுமணத்தை சுவாசிக்காமல் மூக்கைப் பொத்தி மூடிக் கொள்ளலாமா? எனவே, பொறாமை கொள்ளாதீர்கள். பொறாமை மூலமாக மன அமைதியையும், நிம்மதியையும் இழந்து கோள் சொல்லி, புறம் பேசி, அவதூறு கூறி, பாவத்தைத் தேடாமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் பிறர் மீது பொறாமை கொள்ளக் கூடாது. பிறர் உங்கள் மீது பொறாமை கொள்ளும் விதத் தில் நடந்து கொள்ளவும் கூடாது. இதிலும் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாழ்வில் வளங்களையும், உயர்வையும் அடையும் போது கர்வம் கொள்ளாதீர்கள். நீங்கள் அடையும் வளங்களால் உங்களைச் சூழ இருப்பவர்களும் நலம் பெறும் வண்ணம் பார்த்துக் கொள்ளுங் கள். அதே வேளை பிறரின் பொறாமையால் நீங்கள் பாதிக்கப்படாமல் இருக்க குறிப்பிட்ட சில விடயங் களில் அதிக அக்கறை செலுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்திர உறவு வியாபாரம்

பஸ் நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர், பஸ்ஸொன்றில் பழக் கூடையுடன் ஏறினார். ஐந்துபழங்கள்பத்துரூபாய்! என்றுகூவி, பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கியதும், இளைஞன் ஒருவன் பஸ்ஸில் ஏறினான். ஆறு பழங்கள் பத்து ரூபாய்! என்று கூவினான். அவனுக்கு நல்ல விற்பனை!. மற்றொரு பஸ்ஸில் ஏறிய முதியவர் அங்கும், ஐந்து பழங்கள் பத்து ரூபாய்! என்று விற்க முயன்றார். பலன் இல்லாமல் போகவே, கீழே இறங்கி விட்டார். அடுத்து, ஆறுபழங்கள் பத்துரூபாய் என்றுகூவியபடி அந்தப் பஸ்ஸில் ஏறிய இளைஞன், நிறையப் பழங்கள் விற்பனை செய்தான்!

மிகப் பெரிய நிறுவனத்தின் விற்பனை ஆலோசகரான ஒருவர் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். முதியவரை அருகில் அழைத் தவர், அந்த இளைஞனின்சாமர்த்தியம்உங்களிடம் இல்லையே! அவனுக்குப் போட்டி யாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால்தானே உங்களுக்கு விற்பனை ஆகும். அதிக கொள்முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, இலாபத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழங்கள் தாத்தா! என்று தனது ஆலோசனைகளைக் கூறினார்.

முதியவர் சிரித்தபடி, போய்யா... அவன் எனது மகன். இந்தப் பழங்களும் அவனுடையவைதான். ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால்... சட்டென்று வாங்குவதற்கு, மற்றவர்களுக்கு மனசு வராது. அதனால் நான், ஐந்து பத்து ரூபாய் என்று கூவிக் கொண்டு போவேன். அப்புறம், ஆறு பழம் பத்து ரூபாய் என்று அவன் வந்து சொன்னதும்... அடடே இலாபமாஇருக்கே என்று மற்றவர்கள்சட்டென்று வாங்குவார்கள்.அவன் தான் வியாபாரி.வாங்குபவர்களது மனதை மாற்றுவதற்காகத்தான் என்னை முன்னால் அனுப்புவான் என்றார் முதி யவர். அந்த விற்பனை ஆலோசகர் அதைக் கேட்டுத் திகைத் துப் போனார்.






# முக்குளிப்பான்


முக்குளிப்பான் என்பது குடிபெயராத, புலம்பெயராத சுமார் 23 செ.மீ அளவுடைய ஒரு இந்திய வாத்தாகும். இதை தண்ணிப்புள் எனவும் அழைப்பர். மந்த–காக்கி நிறம் கொண்ட குண்டான நீர்ப்புள்(நீர்ப் பறவை)இது. சிறிய, கூரான அலகும் வாலற்றதுமான இந்தப் பறவை ஏரிகளிலும் (வேடந்தாங்கல்) குளங்களிலும் இணையாகவோ கூட்டமாகவோ காணப்படும். இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் சமவெளியிலிருந்து 2500 மீற்றர் உயரம் வரை காணப்படும். நன்றாக நீந்தவல்லது. தேர்ந்த மூழ்கி. சிறு அலை கூட எழுப்பாமல் மிகவும் வேகமாக மூழ்கும் திறனுடையது. பொதுவாக அதிக இயக்கம் இல்லாது இருந்தாலும் தேவைப்படும் போது அதிக தூரங்களுக்கு பறக்கவல்லது. நீர்ப்பூச்சிகள், அவற்றின் நுண்புழுக்கள், தலைப்பிரட்டைகள், தவளைகள் மற்றும் கிரத்தேசியன்கள் (மெல்லுடலிகள்) ஆகியவைகளை உண்ணும்..



# சக்திபெற்ற குச்சி

சாதாரணப் பொருள்களைத் தங்கமாய் மாற் றும் சக்திபெற்ற ஒரு முனிவர், காட்டில் வாழ்கிறார் என்ற செய்தி, ஊரெங்கும் பரவியது. இதைக் கேட்ட இருவர், அந்த முனிவரைத் தேடிக் காட்டுக்குச் சென்றனர். அவரைக் கண் டதும், அவரது பாதத்தில் விழுந்து வணங்கினர். தன்னைத் தேடிவந்ததன் காரணத்தை முனிவர் கேட்டபோது, இருவரும் மிகப் பணிவுடன், குருவே, உங்களைப் போல உலகைத்துறந்து, உள்ளொளி பெறவே உங்களைத் தேடி வந்துள்ளோம் என்று பொய் சொன்னார்கள். அவர்களை தனது சீடர் களாக ஏற்றுக்கொண்ட முனிவர், அடுத்த நாள், ஒரு மண்கலம் நிறைய தானியங்களையும், ஒரு குச்சியையும் அவர்களிடம் கொடுத்து, சூரிய ஒளியில், தானியங்களைக் காயவைத்து வருமாறு பணித்தார்.



முனிவர் தந்த பணியை அறவே வெறுத்த இருவரும், பொய்யான பணிவோடு, கலத்தையும், குச்சியையும் எடுத்துச் சென்றனர். கலத்தில் இருந்த தானியங்களை, சூரிய ஒளியில் வைத்து, குச்சியால் அதனைக் கிளறிய வண்ணம் அமர்ந்திருந்தனர். அப்போது, சிறிது சிறிதாக, அந்த மண் கலமும், அதி லிருந்த தானியங்களும் தங்கமாக மாறத் தொடங்கின. அந்த ஆனந்த அதிர்ச்சியில் தங்களையே மறந்த இருவரும், தங்கள் கையில் வைத்திருந்த குச்சியைத் தூர எறிந்துவிட்டு, தங்கமாய் மாறியிருந்த கலத்தையும், தானியங்களையும் எடுத்து கொண்டு, காட்டை விட்டு ஓடி மறைந்தனர். தொட்ட பொருள்கள் அனைத்தையும் தங்கமாய் மாற்றும் சக்தி, அவர்கள் கையிலிருந்த குச்சியில்தான் இருந்ததென்பதை அவர்கள் உணரவில்லை.



நம்மில் பலர், வாழ்வில் நல்லவை பலவற்றை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல், எவ்விதம் தவறவிடுகிறோம்? குறிப்பாக, எதிர்பாராத மகிழ்வு எமக்கு கிட்டும் போது அந்த மகிழ்வின் ஊற்று எது என்பதையும், அந்த மகிழ்வை நிலைக்கச் செய்யும் வழிகள் எவை என்பதையும் மறந்து, கணப்பொழுது மகிழ்வில் கரைந்து போகும் ஆபத்து உண்டு.

# தெரிந்து கொள்வோம்

- நெருப்புக்கோழி மணிக்கு சுமார் 80 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும்.
- பைசா சாய்ந்த கோபுரத்தில் 294 படிக்கட்டுகள் உள்ளன.
- அன்னாசிப் பழத்தில் விதை கிடையாது.
- பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் அறிவியல் துறைக்கு 'ஆர்னித்தாலஜி' என்று பெயர்.
- மழையின் அளவைக் கண்டறிய உதவும் கருவி, 'ரெயின்கேஜ்'.
- விலங்குகளில் அறிவுள்ளதாக கருதப்படுவது, டொல்பின்.
- ராணித்தேனீயின் ஆயுட்காலம், 3 முதல் 4 ஆண்டுகள்.
- கடற்குதிரை, ஒரே நேரத்தில் தனது கண்களால் இரண்டு வெவ்வேறு பொருள்களைப் பார்க்கும் தன்மை கொண்டது.

## விடுகதைகள்

1.வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதைச் சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?

2.முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

3.மேலிலும் துவாரம், கீழிமும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம் வெளியிலும் துவாரம் இருந்தும் நீரை என்னுள் சேமித்து வைப்பேன், நான் யார்?

4.ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் குடிக்க நீர் தந்தால் இறந்து விடுவேன், நான் யார்?

5.கண்டுபிடித்தவனும் வைத்திருக்கவில்லை, வாங்கியவனும் உபயோகிக்கவில்லை, உபயோகிப்பவனுக்கு அதனை பற்றி எதுவும் தெரியாது அது என்ன?

6.ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அந்தக் குற்றம் என்ன?

## விடைகள்

1.சோளம் 2.முத்திரை 3.பஞ்சு 4.நெருப்பு 5.சவப்பெட்டி 6.தற்கொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றமிழைத்தவர்களுடன் இணைய மைத்திரிக்கு வெட்கம் இல்லையா?

*கேட்கிறார் ஹரின் பெர்னாண்டோ*

கொழும்பு, ஜூலை 1

குற்றஞ் சுமத்தப்பட்டவர்களுடன் இணைந்து செயற்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெட்கம் இல்லையா? என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கேள்வியெழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறி கொத் தாவில் உள்ள தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஊவா மாகாண முதலமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெட்கத்தை ஏற்படுத்தும் நரம்பு சிதைந்து விட்டதா எனத் தனக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன மஹிந்தவின் ஊழல்களை மேடைகளில் பேசியிருந்தார். அத்துடன் தான் ஜனாதிபதியாகாவிட்டால் நிலத்துக்குள் 6 அடிக்கு கீழ் நாட்டை மஹிந்த அரசு கொண்டு சென்றிருக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தற்போது முன்னாள் ஜனாதிபதியுடன் இரகசியப் பேச்சுக்கள் நடத்தப்பட்டமை தொடர்பில் வெளிவரும் செய்திகளுக்கு ஏன் சரியான பதிலை ஜனாதிபதி வழங்கவில்லை என இதன்போது ஊடக வியலாளர்கள் மத்தியில் முதலமைச்சர் கேள்வியெழுப்பினார்.

இதனாலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வெட்க நரம்பு அறுந்து விட்டதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (த)

# ஜெயராஜ் கொலைச் சந்தேக நபர் சிறை அதிகாரிகளின் பொறுப்பில்

கொழும்பு, ஜூலை 01

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ உட்பட 13பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் கூரேயை சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் கொண்டு வர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுவரைகாலமும் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் பூஸா தடுப்பு முகாமின் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இவரைச் சிறைச்சாலை அதிகாரிகளின் பொறுப்பின் கீழ் கொண்டு செல்லுமாறு நேற்று கம்பஹா மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ உட்பட 13பேர் வெலிவேரிய பிரதேசத்தில் உள்ள காந்திவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலின்போது கொல்லப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டிலேயே முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் கூரேயே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். (த)

**தேவை**

யாழ். நகரில் முன்னணியில் உள்ள உணவகத்துக்கு
* Chinese cook. * Kitchen Helper.
* Steward (5-10 pm) ஆகியோர் தேவை.

தொடர்பு:
021 222 2829, 077 22 15 167

**வாடகைக்கு**

யாழ். நகரின் மத்தியில் அறைகள் மாதாந்த வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 22 333 08

**வீட்டு பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு: 077 303 8787, 0776510 696

**விற்பனைக்கு**

வளர்ந்த செவ்விளநீர் நாற்று, ஒரு மாத ஊர்க்கோழிக்குஞ்சு ஊர்க்கோழிச் சேவல், லவ்பேட்ஸ் என்பன விற்பனைக்குள்ளன.

தொடர்பு : 077 613 8964(மண்கும்பான்)

**தேவை**

இருவர் மட்டும் உள்ள குடும்பத்துக்கு தங்கி இருக்கக்கூடிய வீட்டு உதவிக்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் யாவும் பேசிக் கொள்ளலாம்

தொடர்பு : 078 674 7347

**வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை**
**வேலை வங்கி விண்ணப்பம் கோரல் - 2015**

கல்வி கற்று, வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகள், தங்கள், கல்வித் தகைமை அடங்கிய சுயவிவரக்கோவையினை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

இவ்விவரங்கள் பதிவு செய்யப்பட்டு கூட்டுறவுத்துறை சார்ந்த அமைப்புக்களுக்கு வேலைக்கு ஆள்கள் தேவைப்படும் பட்சத்தில் தகுதிக்கு ஏற்ப தங்களது விவரம் கூட்டுறவுத்துறை சார்ந்த அமைப்புக்களிற்கு வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தபால் முகவரி : தலைவர், மாவட்டக் கூட்டுறவுச் சபை, புகையிரத நிலைய வீதி, வவுனியா.
024 222 0528
செயலாளர்,
வவுனியா மாவட்டக் கூட்டுறவுச்சபை.

**வேலையாள் தேவை**

அலங்கார கடை ஒன்றிற்கு வேலையாள் தேவை.

தொடர்பு : 077 775 0318

**வேலையாள்கள் தேவை**

மந்திகையில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு : 077 921 9737
021 226 1459

**சேவை நலன் பாராட்டும் வாழ்த்தும்**



எமது கல்லூரியில் அதிபராக கடமையாற்றி பாடசாலையின் மேம்பாட்டுக்கு பெரும் பணிபுரிந்து 02.07.2015 தொடக்கம் மாகாணக் கல்விப் பணிமனைக்கு இடமாற்றம் பெற்று செல்லும்

**செல்லையா இளங்கோ**

அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று பிரதேச கல்வி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

Best Wishes

நலன்புரிக் கழகம்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

**சேவை நலன் பாராட்டு**

Best Wishes



தனது 60 ஆவது வயதில் 40 வருட இலங்கை வங்கிச் சேவையை நிறைவு செய்து இலங்கை வங்கி அச்சுவேலி கிளையில் முகாமையாளராக கடமையாற்றி 29.06.2015 இல் ஓய்வுபெற்ற

**கனகரட்ணம் மனோகரன்**

வங்கிக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனை வேண்டி நீடூழி வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்
இலங்கை வங்கி-அச்சுவேலிக் கிளை

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2015* *Date: 01.07.2015.*

## விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **வேலைகளுக்கான** இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், **வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல்** vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை **09.00** மணிமுதல் மாலை **15.00** மணிவரை, 02.07.2015ஆம் திகதி தொடக்கம் 16.07.2015ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல்** chairmanvsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ண்ப்ப மொன்றைச் சமர்ப்பித்து 02.07.2015 முதல் 16.07.2015 வரை **9.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05. விலைக்கேள்விகள் 17.07.2015ஆம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி **தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்** எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 17.07.2015 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 09.07.2015 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | விவசாய வீதி திருத்தம் - ஏழாலை | 5.703 | 03 மாதம் | M7/C8 | 57,000.00 |
| 2 | மயான வீதி திருத்தம் - சுன்னாகம் | 1.132 | 03 மாதம் | M7/C8 | 11,500.00 |
| 3 | வரியப்புலம் வீதி – சுன்னாகம் | 0.911 | 03 மாதம் | M7/C8 | 9,500.00 |
| 4 | முருகமூர்த்தி வீதி – உடுவில் | 2.284 | 03 மாதம் | M7/C8 | 23,000.00 |
| 5 | கலையம்மன் வீதி - ஏழாலை | 1.081 | 03 மாதம் | M7/C8 | 11,000.00 |
| 6 | வாதனை வீதி – உடுவில் | 2.276 | 03 மாதம் | M7/C8 | 23,000.00 |
| 7 | தில்லைகட்டி வீதி - சுன்னாகம் | 1.921 | 03 மாதம் | M7/C8 | 19,500.00 |
| 8 | அம்பலவாணர் வீதி – உடுவில் | 1.000 | 03 மாதம் | M7/C8 | 10,000.00 |

தி.பிரகாஷ்
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C/16274)(10.6.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெல்மட் விவகாரம்; தடை நீடிப்பு

முகத்தை முழுமையாக மூடும் தலைக் கவசத்துக்கு விதிக்கப்பட்ட தடையை ஜூலை மாதம் 14ஆம் திகதிவரை மேல் நீதிமன்றம் நீடித்துள்ளது.

முகத்தை முழுமையாகமூடும்தலைக் கவசம் அணிவதற்குத் தடை விதித்து பொலிஸார் வெளியிட்ட சுற்ற றிக்கைக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த தடையுத் தரவை நீடித்து நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தர விட்டுள்ளது. (த)

## முகாம்களில் வாழ்கின்ற மக்கள் அடிப்படை வசதியின்றி அவலம்

யாழ்ப்பாணம், ஜூலை, 1



உள்நாட்டுப் போரினால் இடம் பெயர்ந்து தற்போது முகாம்களில் வாழும் மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் கடந்த ஆட்சியாளர்களி னால் பூர்த்தி செய்யப்படவில்லை என சிவன் நிறு வனத்தின் பணிப்பாளர் கணேஸ் வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

ஊரெழு சர்வசக்தி சனசமூக நிலை யத்தில் ஊரெழு கிராம மக்களு டைய அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கூட்டமும் முன் பள்ளிப் பாடசாலைகளுக்கு மின்னிணைப்பை பெற்றுக் கொள் வதற்கான நிதியுதவி வழங்குதலும் அண்மையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில்,

முகாம்களில் மக்கள் எந்த விதமான அடிப்படை வசதிகளுமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டுப் போர் முடிவுற்று ஆறு வருடங்கள் கழிந்த பின்னரும் கூட போரினால் ஏற்பட்ட காயங்கள் ஆறவில்லை. மக்கள் பொருளாதார நெருக்க டியை எதிர் நோக்கியுள்ளனர். நிரந்தரமான தொழிலில்லை.

மின்சாரக் கட்டணம் செலுத்துவ தற்கு வசதியின்மையால் கணிச மான வீடுகளின் மின்னிணைப்பு கள் துண்டிக்கப்பட்டுள்ளன. பொது மல சல கூடங்கள் உடைந்து பயன் படுத்த முடியாத நிலை உள்ளது. சுத்தமான குடிதண்ணீரில்லை. மாண வர்கள் கல்வி கற்பதற்கானவளங்கள் இல்லை. இந்தப் பகுதியிலுள்ள மக் களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய என்னாலான உதவி களைச் செய்வேன்–என்றார்.

இந்த நிகழ்வில் முன் பள்ளிப் பாட சாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக் கப்பட்டன.

(த–265–10)

## மரண அறிவித்தல்கள்

" கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"

### திருமதி புளோரா நல்லம்மா சோமசுந்தரம்

புவியில் : 17.11.1930 மகிமைக்குள்: 30.06.2015



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புளோரா நல்லம்மா சோமசுந்தரம் நேற்று (30.06.2015) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நவரெட் ணம் ஹண்ட் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற போல் ஜெயராஜசிங்கம் சோமசுந்தரத்தின் (கணக்காளர் இலங்கை புகையிரதசேவை அநுராதபுரம்) அன்பு மனைவியும், கிளா ரன்ஸ் ரவிச்சந்திரன் (கணக்காளர் London), வின்சன்ட் ஜெயச்சந்திரன் (சுவிஸ்), இவ்லின் சாந்தினி ரட்ணம் ஆகி யோரின் பாசமிகு தாயும், சுலோசனா ரவிச்சந்திரன் (லண் டன்), வசந்தி சோமசுந்தரம் (சுவிஸ்), தேவகுமார் ரட்ணம் (போதகர் ரெயின்போ திருச்சபை) ஆகியோரின் அன்பு மாமியும், ஜொனத்தன், சலோமி (லண்டன்), விவின், ஜோயல் (சுவிஸ்), போல் ரட்ணம் (முகாமையாளர் ஜனசக்தி), இவான்சலின் குமணன் (H.N.B சங்கானை), தபித்தா கிரிஸ்டீன் (தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லிவிஸ் ரெஷாந்தின் பூட்டியும், செல்வநாயகம் ஹண்ட், குணராஜா ஹண்ட், செல்வராஜா ஹண்ட், றோசம்மா பாலச்சந்திரன், மகிழம்மா ஹண்ட், காலஞ்சென்ற ஜெயராஜா ஹண்ட் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சுவிஸில் நடைபெறும். அதேவேளை அவர் களின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் ஆராதனை நாளை (02.07.2015) வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு அவரின் இல்லத்தில் ("கலாபவனம்" டச்ரோட், சண்டிலிப்பாய்) நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள் - சாந்தினிரட்ணம்
மருமகன்- J.D. ரட்ணம்
0777110002
021 2255335

### மயில்வாகனம் சத்தியநாதன்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் புன் னாலைக்கட்டுவன் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சத்தியநாதன் நேற்று (30.06.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வயாவிளான் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- சாவித்திரி தம்பதியரின் அன்பு மகனும், புன் னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம்-பரமேஸ்வரி தம் பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற டாக்டர் இந்திராணியின் (கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை முன்னாள் பொறுப்பதிகாரி) அன்புக் கணவரும், லெளமீகரன் (லண்டன்), பிங்கலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தினி (லண்டன்), தக்ஷினி ஆகியோரின் அன்பு மாமனும், ஆர்த் திக், ஆடாஷ், வைசிகா, சயுந்தன், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அலகு பொறுப்பதிகாரி), ஜெகநாதன், மகேஸ்வரி, ஞானேஸ்வரி, நிர்மலேஸ்வரி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, வித்தியேஸ்வரி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, தற்பரநாதன், சுரேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோக ராணி, விஜயராணி, யோகராணி, தர்மராணி, சண்முகதாசன் (முன்னாள் முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி) யுகேந்திரராஜா, நந்தகுமாரன் (ஆசிரியர், சென் ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்றவர்களான சிறிஸ் கந்தராஜா, தயாபரன், முரளிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2015) வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக் கிரியைக்காக விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலடி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்
077 12 98 159

தகவல்:
த.நந்தகுமாரன்
(மைத்துனர்)

### செல்லத்துரை சுரேஸ்கரன்



தோற்றம் 19.07.1982 மறைவு 29.06.2015

குடமியன் வரணியை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுரேஸ் கரன் 29.06.2015 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல் லத்துரை கனகம்மாவின் அன்பு மகனும் பாஸ்கரன் (லண்டன்), றமேஸ்கரன் (லண்டன்) ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் 'சரண் யாவின் அன்பு மைத்துனனும் சுபேதனின் சித் தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.07.2015) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன்,
வரணி.

தகவல் :
சிவசாந்தி குடும்பம்,
மன்னார்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் **சுப்பிர மணியம் மகேந்திரன்** அவர்களின் அன்புத் தாய்

**சுப்பிரமணியம் பொன்னம்மா**

அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலரும்,
கிராம உத்தியோகத்தர்களும்.
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

(61483)
(10.6.1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் செல்லையா



இணுவில் மேற்கு, செட்டி வீதியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் செல்லையா நேற்று (30.06.2015) செவ்வாய்க்கிழமை அகால மரண மடைந்தார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பொன்னர்-நல்லம்மா தம்பதி யரின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதி-பார்வதி தம்பதியரின் மரு மகளும், வேலும் மயிலும் சந்திரமேனன், மங்களகௌரி, செந்தில்வேல் (ஜேர்மனி), சிவானந்தகௌரி, சிவபாலன், விஜயகௌரி ஆகியோரின் அன்புத் தாயும், இராஜகுமாரி, மேகலா, அமிர்தலிங்கம், பத்மலோஜினி, ஆனந்தன், லோஜினி (ஜேர்மனி), விஜயகுமார் ஆகியோரின் மாமியும், பாலசுப்பிர மணியம், கனகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தெய் வேந்திரம், சாந்தகுமார் மற்றும் குணரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அண்ணாமலை, கிருஷ்ணபிள்ளை, சாம்பசிவம் மற்றும் நாகரத்தினம், பாலச்சந்திரன், செல்லப்பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும், வினுஜா, வேணுஜா, பூஜா, சங்கீதா, கிரிதரன், நிவேதன், தேனுஜா, நிஜானா அஷாமி, பிருந்தா, தனுப்பிரியன், தருமிகா, தருமிகன், பிரமிளா, வைஷ்ணவி ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செட்டி வீதி,
இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### சரவணமுத்து பூதநாதன் (இளிப்பர்)



பன்னாலை தெல்லிப்பழையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சர வணமுத்து பூதநாதன் நேற்று (30.06.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவண முத்து- இராமாசிப்பிள்ளை தம்பதியரின் மக னும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சிவ காமிஅம்மை, சிவசுப்பிரமணியம், சின் னத்துரை, சரஸ்வதி, ஆறுமுகசாமி ஆகி யோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2015) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கீரிமலை இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
021 321 8188

தகவல்:
[illegible]வடிவேற்பிள்ளை (மருமகன்)
(காப்புறுதி அமைப்பாளர்)

## பாடசாலை மாணவருக்கு இரும்புச் சத்து வில்லைகள்

கொழும்பு, ஜூலை 1

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைப் பிள்ளை களுக்குஇரும்புச்சத்து வில்லைகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதாகக்குடும்பசுகாதாரச்செயற் பாட்டுப்பிரிவின்பணிப்பாளர் வைத்திய நிபுணர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தரம் 1 இல் இருந்து தரம் 13 வரையிலான அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாடசாலையில் வைத்து இந்த இரும்புச் சத்து வில் லைகள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது இரும்புச் சத்து வில்லை யொன்று போலிக் அஸிட் வில்லை யொன்று, விற்றமின் – சீ வில்லை யொன்று வீதம் வாரத்துக்கு ஒரு தடவை உணவின் பின்னர் பிள்ளை களுக்கு கொடுக்கப்படவுள்ளதோடு, தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு அந்த வில்லைகளைப் பெற்றுக் கொள்வதால் பயன்மிக்க பெறுபேறு களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் வைத்திய நிபுணர் பெனர கம கூறினார்.

இரும்புச் சத்து வில்லைக்கு மேலதிகமாக பூச்சிக் குளிகைளைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது எனவும், கொழுக்கிப் புழுக் கள் பிள்ளைகளின் குடலுக்குள் தங்கியி ருந்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதை இதன் மூலம் தடுத்து நிறுத்த முடியுமெனவும் வைத்தியர் குறிப்பிட்டார். (த–22)

## தலதா அத்துக்கோரளவின் ஆதரவாளர் படுகொலை

கொழும்பு, ஜூலை 1

அமைச்சர் தலதா அத்துக்கோரளவின்ஆதரவாள ரான துஷார தேவாலேகம இனம் தெரியா தோரால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ள தாகக் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன் னிட்டு மேற்கொள்ளப்பட்ட முதலாவது வன் முறையாக இந்தச் சம்பவம் உள்ளதாக கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர் இரத்தின புரிப் பிரதேசத்தை சேர்ந்த துஷார தேவாலே கம (வயது–37) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தலதா அத்துக்கோரளவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக இரத்தினபுரி நெறுக்கல்லேவத்த வீதியில் மோட்டார் சைக் கிளில் சென்று கொண்டிருந்தபோதே இனம் தெரியாதவர்களால் இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்திலும் தமிழ்க் கூட்டமைப்பு களமிறங்கவேண்டும்

*தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளை சம்பந்தனுக்குக் கடிதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 1
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மேல் மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட வேண்டும் என்று கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.கிளையினரால், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு முன்னணியையும் இணைத்துப் போட்டியிட பேச்சு நடத்த வேண்டும் என்றும், அதற்கு தமிழர் முற்போக்கு முன்னணி இணங்க மறுப்பின், தனித்துப் போட்டியிட வேண்டும்' எனவும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்குக்கு வெளியே 50 சதவீதமான தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் கணிசமானோர் மேல் மாகாணத்தில் வாழ்கின்றனர். அவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. தற்போது, அந்த நிலைமை மாறியுள்ளது. வடக்கு - கிழக்குக்கு வெளியே கூட்டமைப்பு போட்டியிட வேண்டும். தமிழருக்கான பிரதிநிதித்துவத்தை அங்கேயும் உறுதி செய்ய வேண்டிய தேவை உள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான அணியினர், வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழுகின்ற ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் தாங்களே தலைவர்கள் என்று கொண்டாட முனைகின்றனர். இப்போதுள்ள வடிவத்தில் இதனை அனுமதிப்பது, தமிழர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதிக்கும். கூட்டமைப்பை வடக்கு - கிழக்கினுள் முடக்கி, எமது கட்சியினதும், மக்களினதும் முக்கியத்துவத்தை இல்லாதொழிக்கும் ஒரு நடவடிக்கையின் ஆரம்பம் இது.

வடக்கு - கிழக்கிலிருந்து போரினால் இடம்பெயர்ந்து மேல் மாகாணத்தில் வசிக்கும் மக்களின் நலன்களி லும் கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டும். இதனால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மேல் மாகாணத்தில் போட்டியிட வேண்டும். இதன் மூலம் தேசியப் பட்டியல் ஆசனமும் அதிகரிக்க வாய்ப்புஉண்டு. இதன் மூலம், யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள ஆசனக் குறைப்பையும் ஈடு செய்ய முடியும்.

மேல் மாகாணத்தில், மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு முன்னணியுடன் பேசி, அவர்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்து தேர்தலில் போட்டியிட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மனோகணேசன் வெற்றி பெறாவிடினும், அவருக்கு தேசியப் பட்டியல் ஊடாக ஆசனம் வழங்கப்படும் என்பதைக் கூறி, கூட்டை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அதற்கு அவர்கள் இணங்காத பட்சத்தில் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட வேண்டும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், சேவியர் குலநாயகம், பொ.கனகசபாபதி, சோ.சுகிர்தன், ந.இராசேந்திரன், கனக நமநாதன், அ.பரஞ்சோதி ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

(த-5-101)

## வெலிக்கடைச் சிறைக் கொலை; விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
2012 ஆம் ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். மோதலில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்பது அதில் பிரதான விடயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தனியாக பொலிஸ் விசாரணை நடத்தப்படவேண்டும் என குறித்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டமைக்கு அமைய, பொலிஸ்மா அதிபரிடம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த மோதல் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையிலான மூவரடங்கிய விசாரணைக் குழுவினர் அனைத்துச் சாட்சி விசாரணைகளையும் நிறைவு செய்து அறிக்கையைக் கையளித்துள்ளனர்.

எவ்வாறாயினும் அறிக்கையிலுள்ள ஒரு சில விடயங்கள் மாத்திரமே ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன. விசாரணைகள் தொடர்வதால் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்க முடியாத நிலை உள்ளதாகவும் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கைதிகளான நிமலரூபன், டெல் றொக்சன் ஆகியோர் சிறையில் வைத்துக் கொல்லப்பட்டிருந்தனர். குறித்த சம்பவம் அன்றைய காலகட்டத்தில் பெரிய பிரச்சினையாக வெடித்திருந்தது. எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் அது தொடர்பான பூரண விசாரணையும் நடக்காது இருந்தது. இது பற்றிய கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதுபற்றிய விசாரணை நடத்தப்பட்டு விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## நாவன்மை போட்டி பூர்வாங்க தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1
நாவன்மைப் போட்டி 2015 சுவாமி விவேகானந்தர் / ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பண்ணிசைப் போட்டி ஆகியவற்றின் பூர்வாங்கத் தேர்வு இன்று காலை 8 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது பாடசாலை அதிபர் திருமதி வி.சண்முகரட்ணம் தெரிவித்துள்ளார். (ற-10)


இணுவில்
அருள்மிகு கந்தசுவாமி கோயில்
மஹோற்சவ மஞ்சத்திருவிழா



காலம் : நாளை (02.07.2015) வியாழக்கிழமை
காலை : 8.00 மணிக்கு 1008 சங்குகளால் விசேட அபிஷேகம் இடம்பெறும்
மாலை : 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து 8.00 மணிக்கு ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தர்மகர்த்தா சபை.



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



அறிவித்தல்

உதயன் பத்திரிகையின் 30ஆவது அகவையை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை, இலக்கிய போட்டிகளில் வெற்றியீட்டி பரிசளிப்பு நிகழ்வில் பரிசு பெறும் ஒளிப்படங்களை பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களுக்கு இதுவரை படங்கள் கிடைக்காவிடின் பற்றுச்சீட்டுடன் இல 361, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயனின் தலைமைக்காரியாலயத்திற்கு நேரில் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு:
071 862 8390



பதவி வெற்றிடங்கள்

முகாமைத்துவ உதவியாளர் பெண்
தகைமைகள்:- * கணினித் தேர்ச்சி *தொடர்பாடல் திறன் * ஆங்கில அறிவு

விரிவுரையாளர்கள்:
பின்வரும் தொழில் துறைசார் கற்கைநெறிப் பாடங்களுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

a) CIMA Business Law
b) CIMA Business Economics
c) CIMA Business Mathemetics
d) AAT2 Cost Accounting
e) Banking Financial System

மேற்குறித்த அனைத்து விரிவுரையாளர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனைவரும் ''ஆங்கில அறிவு, சிறந்த கற்பித்தல் திறனும் உடையவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.
விண்ணப்ப முடிவு திகதி: 05.07.2015
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

Spectra Skills
19, Stanley Road, (people's Bank 2nd Floor), Jaffna.
(மின்னஞ்சல் ஊடான விண்ணப்பங்கள் விரும்பத்தக்கது)
Tel: 021 222 1422 Mob: 076 7520 940
E-mail: jaffna@spectraskills.com



கடந்த கால யுத்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும்
அங்கஜன் இராமநாதன் அழைப்பு..!



கடந்தகால யுத்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சகல மக்களையும் உடனடியாக தனது இல.80, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் சந்தித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளரும், வடமாகாண சபை உறுப்பினருமாகிய அங்கஜன் இராமநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.



SEMINAR (கருத்தரங்கு)
B.B.A (MANAGEMENT)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வெளிவாரி (ஒலுவில்)

மேற்படி கற்கைநெறியினை வடமாகாணத்தில் மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்ற ஒரே நிறுவனமான புதிய உயர் கல்லூரியில் மாணவர்களின் பதிவினை மேற்கொள்வது, பதிவுக் கட்டணம், பரீட்சை தொடர்பாகவும் மேற்படி பல்கலைக்கழக வெளிவாரி பீடாதிபதியினால் விளக்கமளிக்கப்படவுள்ளது. பதிவினை மேற்கொண்டவர்களும் பதிவினை மேற்கொள்ள இருப்பவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி உங்கள் பதிவுகளை பரீட்சைகள் சம்பந்தமான கேள்விகளுக்கு பதிலை பெற்றுக் கொள்ளலாம்.

அனைவரும் கருத்தரங்கில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
காலம் : 04,05 07/2015 காலை 9 மணி
இடம் : புதிய உயர்கல்லூரி மண்டபம்

முக்கிய கவனிப்பு: B.A. போாதனை இறுதியாண்டு புவியியல் பாடத்துக்கான கருத்தரங்கு 04,05 07/2015 காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொ.பே.இல.021 222 8148
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைவஸ்து

அனுபவம், திறமைமிக்க படையினரை மீள அரச துறைகளில் இணைத்துக் கொள்ளும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.
பெரும் பிரச்சினையாகியுள்ள போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை மற்றும் போதைப் பொருள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் கடற்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.
நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதே போன்று நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வரப்படுவதைத் தடுக்கவும் விசேட செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். அதற்குக் கடற்படையினரின் முழுமையான பங்களிப்புப் பெற்றுக்கொள்ளப்படும்.
இந்த யுகத்தில் கடற்படையினர் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களுள் போதைப்பொருள் ஒழிப்பு மிக முக்கியமாகிறது. நாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கு இது காரணமாகியுள்ளது.
கடல் மார்க்கமாகவோ, விமானம் மூலமோதான் போதைப்பொருள் நாட்டுக்குள் வருகிறது. நாம் இது பற்றித் தேசிய பாதுகாப்புச் சபையிலும் கலந்துரையாடியுள்ளோம்.
கடந்த போர்க் காலங்களில் அன்றுள்ள தேவைகளுக்கேற்பப் படைகளுக்கு ஆள்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். எதிர்வரும் இரண்டு மூன்று வருடங்களில் அவர்களின் சேவைக் காலம் நிறைவடைந்து அவர்கள் தமது 42 அல்லது 43 வயதில் ஓய்வு பெறவுள்ளனர். இவர்கள் கடந்த சுமார் 22 வருடங்களாக அர்ப்பணிப்புள்ள சேவை செய்தவர்கள். சாதாரணமாக ஒருவர் தமது 40 – 42 வயதில்தான் பெரும் அனுபவத்தையும் தொழில் தேர்ச்சியையும் அறிவையும் பெற்றிருப்பார். உற்பத்தித் திறனில் ஒருவர் பூரணப்படும் வயது அது–என்றார்.

(த–4)

## டக்ளஸுக்கு

ஈடுபட்டமை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைக்கு மணல் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு முறைப்பாடு இலஞ்ச ஊழல் ஒழிப்புக் குழுச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டது.
பாரவூர்தி உரிமையாளர் சங்கத் தலைவர் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் இந்த முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தனர். இதற்கமைய விசாரணைகளை மேற்கொள்வதற்காகக் கொழும்பிலிருந்து விசேட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளனர்.
முறைப்பாடுகளைப் பதிவு செய்த பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோரையும், பாரவூர்தி உரிமையாளர் சங்க அங்கத்தவர்களையும் விசாரணை செய்துள்ளனர். நாளை மறுதினம் 3 ஆம் திகதி வரையில், யாழ்ப்பாணத்தில் விசாரணை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த–5)

## மஹிந்த

தர்ஜன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரு [illegible] முக்கிய சந்தி [illegible] த்த் [illegible] லையிலேயே [illegible] டுக்கின்றார்.
[illegible] த்திரிபால சிறிசேன

உள்ளிட்ட அவரது ஆதரவு தரப்பினர்களுடன் இடம்பெற்றுவரும் பெரும் கருத்து மோதல்களுக்கு மத்தியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மஹிந்தவை பிரதமர் வேட்பாளாராகப் போட்டியிட வருமாறு அழைப்புவிடுக்க மெதமுலனைக்கு படையெடுத்துள்ளனர்.
அதுமட்டுமன்றி, தலைநகர் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பாகங்களிலிருந்தும் மஹிந்த ஆதரவாளர்கள் மெதமுலனை நோக்கிச் சென்றுள்ளனர். மஹிந்தவின் விசேட அறிவிப்பை முன்னிட்டு, கொழும்பிலிருந்து விசேட வாகன தொடரணிக்கும் மஹிந்த ஆதரவணி ஏற்பாடு செய்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கைக்குப் பதில் தேடியும் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட வருமாறு அழைப்பு விடுத்தும் 200 தொழிற்சங்கங்கள் இன்று மெதமுலனை செல்லவுள்ளன என்று ஒன்றிணைந்த தொழிற்சங்க சபையின் ஏற்பாட்டாளர் பியசிறி விஜேநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

(த–சி)

## தேர்தல் கால

கையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும், அமைச்சர்கள் – பிரதி அமைச்சர்களுக்குரிய அதிகாரங்கள் தொடர்ந்தும் இருக்கும். அதனைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது.
தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், புதிதாக நேர்முகத் தேர்வு நடத்துதல் அரச நியமனங்கள் வழங்குதல் என்பனவற்றை மேற்கொள்ள முடியாது. அதனைச் செய்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் அல்லது மூன்று வருட சிறைத்தண்டனை அல்லது இரண்டையும் விதிப்பதற்கு 19 ஆவது திருத்தச் சட்டம் வாய்ப்பளித்துள்ளது.
ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கான நியமனங்களை வழங்க முடியும். அவ்வாறு வழங்குவது தொடர்பில், முன்னரே தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(த–5)

## தனிநபர்

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மேலும் தெரிவித்ததாவது:–
இரத்தினக்கல் கைத்தொழிலிலிருந்து வியாபாரிகளும் அரசும் பெறுகின்ற இலாபத்தில் ஒரு பகுதியை, அந்த வளங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிடையே பகிர்ந்தளிப்பது கொள்கை ரீதியான விடயமாக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.
இதற்கான மிகத் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதான வெளிக்கள உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இதில் ஏதேனும் முறைகேடுகள் நிகழுமானால் அது தொடர்பில் குறித்த அதிகாரிகள் பொறுப்புக் கூறவேண்டும். அது தொடர்பாக சூழல் அமைச்சுக்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற

வகையில் ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் சட்டபூர்வமாக–சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு ஆகக்கூடிய அளவில் உறுதிப்படுத்தப்படும். அரசினால் வழங்கப்பட வேண்டிய அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
கடந்த சில ஆண்டுகளாக இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக எந்தவிதத்திலும் திருப்திப்பட முடியாது– என்றார்.

(த–4)

## தேர்தல் வன்முறை

கோன் தெரி வித்துள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம், 13 ஆம் திகதி மதியம் வரையில் நடைபெறவுள்ளது.
வேட்பு மனுத் தாக்கல் ஆரம்பமாக முன்னரே, தேர்தல் வன்முறைகள் ஆரம்பித்துள்ளன. சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் இனந்தெரியாத குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
அநுராதபுரம் மற்றும் குருநாகலில் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்களில் இருவர் காயமடைந்துள்ளனர்.

(த–5)

## ரவிராஜ்

நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிணை வழங்கியுள்ளது.
முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் வசந்த கரன்னகொடவின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான, கப்டன் சமந்த முனசிங்கவுக்கு இந்தப் படுகொலையில் தொடர்பு இருப்பதாக, குற்றப்புலனாய்வுப் பிரிவு வலுவான குற்றச்சாட்டு களை முன்வைத்திருந்தது. அத்து டன், குறித்த படு கொலைகள் குறித் து முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அறிந்திருந்திருக்காமல் இருக்க வாய்ப்பில்லை என்றும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.
இந்த நிலையில், கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்போது, நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையுடன், 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல சமந்தவுக்கு நீதிவான் நிரோசா பெர்னான்டோ அனுமதி அளித்தார்.
இந் தப் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஏனைய மூன்று சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்க நீதிபதி மறுத்து விட்டார்.

(த–5)

## மஹிந்த

அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே மேற்
கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:–
ஊழல், மோசடிகளை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியே நாம் இப்போது சிந்திக்கின்றோம். மஹிந்தவைத் தோற்கடிக்கவேண்டும் என நாம் இருக்கவில்லை. கொள்கை

அடிப்படையில்தான் நாம் அவரைத் தோற்கடித்தோம். மஹிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார் என்பது பிரச்சினையல்ல. பழைய கள்வர்களுடன் இணைந்து போட்டியிடுவாராயின் எம்மால் கூட்டணி அமைக்க முடியாது.
மஹிந்தவின் அபிலாஷை என்ன என்று எமக்குத் தெரியாது. அவரின் அரசியல் நோக்கம், அரசியல் குழு எது என்றுகூட எமக்குத் தெரியாது. அதனால், மஹிந்த எவ்வாறு வருகின்றார் என்றே நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மைத்திரியால்தான் நாம் வந்தோம். அவரிடம்தான் அதிகாரம் உள்ளது. எவர் பிரதமரானாலும் எமக்குப் பிரச்சினை இல்லை. அரசியல் தீர்மானம் எடுப்பது ஜனாதிபதிதான். எனவே, நான்தான் நாட்டின் தலைவர் அரசின் தலைவர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூற வேண்டும்.
ஊழல், மோசடிகளைத் தடுக்கவும், அவ்வாறானவர்கள் நாடாளுமன்றத்திற்கு வருவதைத் தடுக்கவும் அவருக்கு அதிகாரம் உள்ளது.
மஹிந்த மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்கு மைத்திரிபால சிறிசேன இடமளிப்பது, கடந்த ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலாக இருக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடாமல் அரசியல் செய்யத்தான் அவர் பார்க்கின்றார். நாம் மைத்திரியுடனும் இல்லை, ரணிலுடனும் இல்லை. எவர் பக்கமும் சாராமல் இருக்கின்றோம். இந்தச் சக்திகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைப் பொறுத்தே எமது தீர்மானம் அமையும்– எனத் தெரிவித்தார்.

(த)

## பிரதமர்

வேட்பாளரும் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படமாட்டார்கள் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ களமிறங்க மைத்திரி இணங்கியுள்ளார். இதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் ஆகியோர் இன்று மாலை (நேற்று), மஹிந்தவைச் சந்தித்துப் பேசியதாகவும், அதன்போது பிரதமர் வேட்பாளராகக் களமிறங்க மஹிந்த சம்மதித்தாகவும் கொழும்பு ஊடகங்கள் நேற்று மாலை செய்தி வெளியிட்டிருந்தன.
இவ்வாறானதொரு நிலையிலேயே, ஜனாதிபதி மைத்திரியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில், ஜனாதிபதி செயலகம் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
அதில்,
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணி தற்போது நடந்து வருகிறது. இந்தத் தேர்தலில் வெற்றி பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னரே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் யார் என்பது குறித்து தீர்மானிக்கப்படும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் எந்த வேட்பாளரும் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படமாட்டார்கள் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
இதற்கிடையே மைத்திரிபால சிறிசேனவின் இந்த முடிவு மஹிந்த ராஜபக்ஷவிடம், அதிகார பூர்வமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து தனது அடுத்தகட்ட நகர்வு குறித்து ஆதரவாளர்களுடன் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார். இதேவேளை, இன்று காலை தனது சொந்த ஊரான மெதமுலானவில் வைத்து, தனது எதிர்காலத் திட்டத்தை மஹிந்த அறிவிக்கவுள்ளார்.

(த–5)

## மோசடி

அத்துடன், மஹிந்த மற்றும் அவரது சகாக்களுடன் ஜனாதிபதி இணைந்து செயற்படுவதற்கு முயற்சிப்பதானது கள்வர் கூட்டத்துக்கு மத்தியில் நிர்வாணமாக நிற்கும் செயலுக்கு ஒப்பான தாகும் எனவும் விமர்சித்துள்ளது.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. கேள்விநேரத்தின் போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில ளிக்கையிலேயே அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:–
ஊழல், மோசடி மிக்க ஆட்சியை ஜனவரி 8ஆம் திகதி நாட்டு மக்கள் தோற்கடித்துவிட்டனர். எனவே, அந்த ஆட்சியில் அங்கம் வகித்த திருடர்களுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது. மீளவும் அரசியலுக்கு வருவதற்கு அவர்கள் முன்னெடுக்கும் முயற்சியைத் தோற்கடிக்கவேண்டும்.
மக்கள் ஆணையை மதித்து இவர்களைப் புறக்கணிப்பதா அல்லது மக்களை ஆணையை மீறி திருடர்களுடன் நிர்வாணமாக நிற்பதா என்பதுபற்றி ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும்.
ஆனால், தற்போது என்ன நடக்கிறது? திருடர்களுடன் இணைந்து நிர்வாணமாக நிற்பதற்கே முயற்சிக்கப்படுகிறது. மக்கள் இதை அனுமதிக்கமாட்டார்கள். நாமும் அனுமதிக்கமாட் டோம்.
அதேவேளை, மஹிந்தவும் அவரின் சகாக்களும் அறிமுகப்படுத்திய அரசியல் கலாசாரத்தை நாம் தோற்கடிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் திருட்டுக் குழு செய்ததையே ஐக்கிய தேசியக் கட்சியும் செய்கிறது. மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் இது அம்பலமாகியது" –என்றார்.

(த–சி)

## இணுவில்

துள்ளது.
யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் இணுவில் குட்டிப்பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சமூர்த்தி வங்கி சங்கத்துக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த குறித்த வயோதிப மூதாட்டி குட்டிப்பிள்ளை யாரை தரிசித்து விட்டு எதிரே உள்ள தனது வீட்டுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முற்பட்டவேளை மோட்டார் சைக்கிளுடன் மோதி காயமடைந்துள்ளார்.
பின்னர் இவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.
சம்பவத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த இளைஞனும் பலத்த காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு பணியகத்தை இங்கு மூடுகின்றது ஐ.நா.

கொழும்பு, ஜூலை 1
இலங்கையில் உள்ள ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகம் (யு.என்–ஒச்சா) இந்த ஆண்டு இறுதியில் மூடப்படவுள்ளது.
பாங்கொக்கில் உள்ள ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய தலைவர் ஒலிவர் லாசி – ஹோல் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
யு.என்.–ஒச்சாவின் யாழ்.மாவட்ட அலுவலகம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் மூடப்பட்டது. இதன் பின்னர், வடக்குக்கான அலுவலகம் கிளிநொச்சியில் இருந்து இயங்கியது. அந்த அலுவலகமும் மூடப்பட்டுக் கொழும்பிலுள்ள ஓர் அலுவலகம் மாத்திரம் இயங்கியது.
தற்போது, இலங்கையிலிருந்து முழுமையாக தனது பணிகளை முடித்துக் கொண்டு யு.என்.ஒச்சா வெளியேறவுள்ளது.
சில ஆசிய நாடுகளில் மனிதாபிமானப் பணியாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஐ.நா. முடிவெடுத்துள்ளதாகவும் இதன்படி, பப்புவா நியூகினியாவில் உள்ள மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்புப் பணியகம் இந்த மாதம் மூடப்படவுள்ளதாகவும், இலங்கையில் உள்ள பணியகம் இந்த ஆண்டு இறுதியில் மூடப்படும் என்றும் ஹோல் தெரிவித்துள்ளார். (த–5)

## கட்சி தாவிய எவருக்கும் ஐ.தே.கவில் இடமில்லை

### லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 01
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியவர்களுக்கு கட்சியில் மீண்டும் இடமில்லை என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.
கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–
கடந்த காலங்களில் தனிப்பட்ட சுய நலன்களுக்காகப் பலர் கட்சியை விட்டுச் சென்று விட்டார்கள்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் தற்போது வரையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கோரிக்கை முன் வைத்துள்ளனர்.
எதிர்வரும் நாள்களில் கட்சியை விட்டு சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ளப் போவதில்லை–என்றார். (த)

## ஓகஸ்ட் 17 க்குப் பின் மீண்டும் அபிவிருத்தி

### கூறுகிறார் மஹிந்த

நாட்டின் அபிவிருத்தி எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் திகதிக்கு மீண்டும் மேம்படுத்தப்படும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
பஸ்கம விகாரையில் இடம்பெற்ற மதவழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் மக்களைச் சந்தித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் கூறுகையில்,
அன்று புலிகளை நினைவு கூருவதற்கு விளக்கேற்றிய பிரதான அமைச்சர் உட்பட குழுவினருக்கு எதிராக வழக்குத் தொடுக்கவில்லை. கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மத வழிபாடுகளில் ஈடுபட்ட தேரர்கள் இன்று விளக்கமறியலில். இதுவே மாற்றம், 100 நாள்கள் என்றார்கள் ஆனால் இன்று 200 நாள்கள் கடந்து விட்டன. எங்கள் அமைச்சர்களைப் பழிவாங்கிவிட்டார்கள். உறுப்பினர்களைப் பழிவாங்கிவிட்டார்கள். எங்கள் முழுக் குடும்பங்களையும் பழிவாங்கிவிட்டார்கள்.
நான் நேற்றுமுன் தினம் தான் கண்டி பிரதேசத்திற்கு வருகை தந்தேன். கண்டி வருவதற்கு 03 அல்லது மூன்றரை மணித்தியாலங்களாகி விட்டன. எனினும் நான் அமைத்த பாதைகளைத் தொடர்ந்து அமைத்திருந்தார்கள் என்றால் 55 நிமிடங்களில் என்னால் வர முடிந்திருக்கும். அதனையும் இடைநிறுத்திவிட்டார்கள், எனவே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் அனைத்துப் பாதைகளையும் அமைக்க முடியும் என்று நான் நம்புகின்றேன் – என்றார். (த)

## விபத்தில் இருவர் சாவு

கொழும்பு, ஜூலை 01
லொறி–மோட்டார் சைக்கிள் நேருக்கு நேராக மோதிக்கொண்ட விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு புத்தளம் பாலாவிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியும், சிலாபம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்துச் சம்பவத்தை அடுத்து லொறிச் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த–ரி)

## கடற்படைத் தளபதியின் பதவிக் காலம் நிறைவு



கொழும்பு, ஜூலை 01
கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேராவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது. இந்தநிலையில் அவ[illegible]க்குச் சேவை நீடிப்பு வழங்கப்படு[illegible]ா என்பது தொடர்பாக இதுவரை எ[illegible]த அறிவிப்பும் வெளியாகவில்லை[illegible]
கடற்படைத் தளபதியாக, வை[illegible] அட்மிரல் ஜெயந்த பெரேரா கட[illegible]த ஆண்டு ஜூன் மாதம் பதவியேற்[illegible]ருந்தார்.
இவருக்குச் சேவை நீடிப்பு வழ[illegible]கப்படாவிட்டால், தற்போது க[illegible]படைத் தலைமை அதிகாரிய[illegible] இருக்கும் ரியர் அட்மிரல் ரவீந்[illegible] விஜயகுணவர்த்தன சேவை மூ[illegible] அடிப்படையில், கடற்படையின் பு[illegible] தளபதியாக நியமிக்கப்படக் கூ[illegible] என்று கூறப்படுகின்றது.

## விமானப் பொதிகள் மூலம் போதை மாத்திரை கடத்தல்?

கொழும்பு, ஜூலை 01
விமானப் பொதிகளின் ஊடாகப் போதை மாத்திரைகள் நாட்டுக்குள் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.
விமானப் பொதிகளின் ஊடாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் மற்றும் பொதிகளில் மிகவும் நுட்பமான முறையில் போதை மாத்திரைகள் கடத்தப்படுவதாகத் தபால் திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தான், இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இவ்வாறு பல்வேறு போதை மாத்திரைகள் கடத்தப்படுகின்றன.
போதைப்பொருள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் திட்டமிட்ட கும்ப[illegible] ஒன்று இவ்வாறு போதை மாத்தி[illegible]ரகளைக் கடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இ[illegible]ங்கையின் பல பகுதிகளின் [illegible]ப் பெயர்கள் மற்றும் போலி [illegible]களைப் பயன்படுத்தி போதைப் [illegible]ள் கடத்தப்படுவதாக அவர் [illegible]ள்ளார்.
ச[illegible]ரோதமாக தருவிக்கப்படும் [illegible]த மாத்திரைகள் மாணவர் க[illegible] இளைஞர், யுவதிகளுக்கு வ[illegible]கப்படுவதாகக் குற்றம் சுமத்த[illegible]டுள்ளது. (த)

## மஹிந்தவை எதிர்க்கும் 36 முன்னாள் எம்.பிக்கள்

### தேர்தலில் வாய்ப்பளிக்கக்கூடாது என ஜனாதிபதியிடம் கோரிக்கை



கொழும்பு, ஜூலை 1
நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட சிறிலங்கா சுதந்திரக் கட்சி வாய்ப்பளிக்கக் கூடாது என்று, அந்தக் கட்சியின் 36 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளனர்.
பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிட முன்வந்த போது, அவருடன் இணைந்து கொண்டவர்களும், வெற்றி பெற்ற பின்னர், அவருடன் இணைந்து கொண்டவர்களுமான, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 36 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.
மஹிந்த ராஜபக்ஷவை போட்டியிட வாய்ப்பளித்தாலோ அல்லது குற்றப் பின்னணி கொண்டவர்களுக்கு வாய்ப்பளித்தாலோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியால், சுத்தமான தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ள முடியாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.
மேலும், மஹிந்த ராஜபக்ஷவை போட்டியிட வைத்து வெற்றி பெறுவதை விட தோல்வியடைவதே மேல் என்றும் அவர்கள் மைத்திரிபால சிறி சேனவிடம் எடுத்துக் கூறியுள்ளனர். (த)

## கட்டுப் பணம் கையேற்பு நடவடிக்கைக[illegible] ஆரம்பம்



கொழும்பு, ஜூலை 01
எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் நாள் நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தேர்தலில் போட்டியிட விரும்பும் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களிடம் இருந்து, வார நாள்களில் மட்டுமே கட்டுப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், எதிர்வரும் ஜூலை 13ஆம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
வேட்பாளர்களை விரைவாகக் கட்டுப்பணம் செலுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.
மாவட்ட செயலகங்களில் கட்டுப் பணத்தைச் செலுத்த முடியும். சுயேச்சை வேட்பாளரிடம் இருந்து 2000 ரூபா கட்டுப்பணம் பெறப்படுவது குறிப்பிடத்தக்கது. (த)

## நீதியரசருக்கு எதிரான முறைப்பாடு சி.ஐ.டிக்கு

கொழும்பு, ஜூலை 01
உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவருக்கு எதிரான புகார் தொடர்பிலான விசாரணை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
[illegible] தப்பட்டிருந்த பெண்ணைத் தாக்கினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்த நீதியரசர், பொலிஸார் ஒருவரையும் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியதாக அவர் மீது முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## பிரேமலாலுக்[illegible] மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 01
கடந்த ஜனாதிபதித் தேர்தல் கா[illegible]தில் அரசின் ஆதரவாளர் ஒரு[illegible] சுட்டுக்கொல்லப்பட்ட சம்ப[illegible]துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்[illegible]கைதான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசே[illegible] உள்ளிட்ட சந்தேகநபர்களுச்[illegible] தொடர்ந்தும் விளக்கமறியல் [illegible]கப்பட்டுள்ளது.
இது தொடர்பிலான வழக்கு [illegible]ரணை நேற்று நீதிமன்றத்தில் [illegible]துக்கொள்ளப்பட்டபோது சந்[illegible]நபர்கள் சார்பில் முன்னிலை[illegible] சட்டத்தரணி மன்றில் விசார[illegible]கள் முடிவடைந்துள்ள நிலை[illegible] அவர்களைப் பிணையில் [illegible]தலை செய்யுமாறு கேட்டிருந்த[illegible]
இதன்போது குறுக்கிட்ட குற்றப்[illegible]னாய்வுத் திணைக்கள அதிகாரி[illegible] விசாரணைகள் இன்னமும் மு[illegible]வில்லை எனத் தெரிவித்த[illegible] அடுத்து இவர்களைத் தொடர்[illegible] ஜூலை மாதம் 14ஆம் திகதி [illegible] விளக்கமறியலில் வைக்கும[illegible] நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாம்பவான் ஜாரா இல்லாமல் இறுதியில் களமிறங்குகிறது சிலி


[illegible]யில் வீரர்கள்



சர்ச்சையை ஏற்படுத்திய செயற்பாடு

தென்னமரிக்க உதைபந்தாட்டத் தொடரில் சிலி உருகுவே அணிகள் மோதிய காலிறுதியாட்டமொன்றில் சிலியின் பின்கள வீரர் கொன்ஸாலோ ஜாரா செய்ய தவறுக்காக சில நாட்கள் கழித்து அவருக்கு மூன்று ஆட்டங்களுக்கு தடை விதித்து தீர்ப்பாகியுள்ளது.

சிலி பின்கள வீரர் கொன்ஸாலோ ஜாராவின் முகத்தில் கையால் இடித்ததற்காக உருகுவே ஸ்டிரைக்கர் எடின்சன் கவானிக்கு 2ஆவது மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு ஆட்டத்திலிருந்து வெளியேற்றப் பட்டார். அப்போது ஜாரா தனது பின்பக்கத்தில் கையை வைத்து தள்ளினார் என்று கவானி குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்தியது. அப்போது தொலைக் காட்சியின் பதிவுகளை ஆராய்ந்த போது, கவானியை ஜாரா தள்ளியது தெரியவந்தது. இதையடுத்து அவருக்கு 3 ஆட்டங்களில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜாராவின் தடை குறித்து கருத்து தெரிவித்துள்ள சிலி கால்பந்து சம்மேளனம், இந்தத் தடை வருத்தமளித்தாலும், அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.


இதனால் தற்பொழுது இறுதிக்கு முன்னேறியுள்ள சிலி ஜாரா இல்லாமல் விளையாட வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. (ம)

# சம்பியனானது இந்து மகளிர்

யாழ்ப்பாணம் ஜுலை 1

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 19வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டம் நேற்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்றது.

இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 48:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ம-23)



## சண்டிலிப்பாயை வீழ்த்தியது தெல்லிப்பழை

யாழ்ப்பாணம், ஜுலை 1

மீள் குடியேறிய மக்கள் மீள் திறனை கட்டியெழுப்பல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் யு.எஸ்.எயிட், மற்றும் சேவா லங்கா நிறுவனத்தினுடன் இணைந்து நடத்திய இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மாகாணமட்ட வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

ஞாயிற்றுக்கிழமை புதுகுடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக அணி 29:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.(ம-23)

# திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் தரப்படுத்தலில் முதலிடம்

வலி. வடக்கு, ஜுலை 1

ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகம் ஒன்பது ஆட்டங்களில் கலந்து கொண்டு எட்டுப் ஆட்டங்களில் வெற்றிபெற்றதன் மூலம் 53.65 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 10 ஆட்டங்களில் பங்குபற்றி 7 ஆட்டங்களில் வெற்றிபெற்று 51.68 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் 8 ஆட்டங்களில் பங்குபற்றி 5 ஆட்டங்களில் வெற்றிபெற்று 37.68 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளன.

நான்காம் இடத்திலிருந்து பத்தாம் இடம்வரை முறையே கொக்குவில் கே.சி.சி.சி, பருத்தித்துறை ஹாட்லியைற்ஸ், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ், யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் சொக்ஸ், யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ், யாழ்ப்பாணம் சென்றல் ஆகிய அணிகள் உள்ளன.

(ம-86)

## எல்லே தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 1

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே தொடர் இன்று புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்தத்தொடரில் கிட்டத்தட்ட 10 பிரதேச செயலகங்கள் கலந்துகொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகன் தெரிவித்துள்ளார். (ம-23)

## வரணியில் மாட்டுவண்டிச் சவாரி

வரணி, ஜுலை 1

வரணி இயற்றாலை அந்தணத் திடல் விளையாட்டுத்திடலில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பியின் ஞாபகார்த்தமாக இந்தப் போட்டி இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-122)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 26ஆவது விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன அணி இரண்டாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# தொழில்முறை குத்துச் சண்டையில் இணைகிறார் விஜேந்தர்

ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் பெற்றுக்கொடுத்த குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங், இனி தொழில்முறை குத்துச் சண்டை போட்டிகளில் பங்கேற்க உள்ளதாக நேற்று அறிவித்துள்ளார். இதற்காக பிரபல பொழுது போக்கு நிறுவனம் ஒன்றுடன் நீண்டகால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.


விஜேந்தர்

தொழில்முறை குத்துச் சண்டையில் பங்கேற்பது தொடர்பாக விஜேந்தர் தெரிவித்ததாவது தொழில்முறை போட்டிகளுக்கு திரும்பி எனது வாழ்வின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதற்கு மிகுந்த ஆர்வமாக உள்ளேன். கடுமையாக பயிற்சி பெற்று என் நாட்டுக்காக சர்வதேச அரங்கில் விளையாட விரும்புகிறேன். கடுமையாக பயிற்சி பெற்று அடுத்த ஆண்டு குறிப்பிட்ட சாதனையை படைப்பதுதான் எனது முதல் குறிக்கோள் என்றார்.

தொழில் முறை குத்து[illegible] யில் பங்கேற்பவர்கள் ஒலிம்பிக போன்ற தொடர்களில் பங்கேற்க முடியாது என்ற காரணத்தினால் [illegible] ஏற்பட்டுள்ளது.

(ம)

# யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ்.இந்து மூன்றாம் இடம்


யாழ்ப்பாணம். ஜுலை 1

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்றது.



யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்ட இந்த ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 30:28 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிறிஸ் கெயில்

# சொந்த மண்ணில் கெய்ல் தாண்டவம்

மேற்கிந்தியத் தீவுகளில் தற்பொழுது நடைபெற்றுவரும் தீவுகளின் மாகாணங்களுக்கிடையிலான ரி–20 தொடரில் (கரிபியன் லீக்) ஜமைக்கா அணியின் தலைவரான கிறிஸ் கெய்ல் சென்.லூட்ஸ் அணிக்கு எதிராக 36 பந்துகளில் 90 ஓட்டங்களை விளாசி தனது அணியை வெற்றிபெற வைத்தார்.
இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.லூட்சியா அணி 118 ஓட்டங்களைப் பெற்றது. 119 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென்ற நிலைமையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜமைக்கா அணி கெய்லின் மரண அடியின் மூலம் பத்தாவது பந்துப்பரிமாற்றத்தில் 121 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது.

(ம)

# சர்வதேச பூப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றது இந்திய இணை



அஸ்வினி

ஜுவாலா கட்டா

கனடாவில் நடைபெற்றுவரும் சர்வதேச பூப்பந்தாட்டத் தொடரில் இந்தியாவின் ஜுவாலா கட்டா – அஸ்வினி பொன்னப்பா இணை கிண்ணம் வென்றுள்ளது.
நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெதர்லாந்தின் எப்ஜெ மூஸ் கென்ஸ் –செலினாபியேக்இணையை எதிர்கொண்ட இந்திய இணை 21–19, 21–16 என்ற புள்ளிகள் கணக்கில் இரு செற்களையும் கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.
முதல் செற்றில் இரு தரப்புக்கும் இடையே கடும் போட்டி நீடித்த நிலையில் ஒரு கட்டத்தில் 19–19 என்ற சமநிலை காணப்பட்டது. எனினும் சிறப்பாக விளையாடிய இந்திய ஜோடி, 21–19 என்ற புள்ளி கணக்கில் முதல் செற்றைக் கைப்பற்றியது.
இரண்டாவது செற்றில் முதலில் இந்திய ஜோடி 5–0 என்று முன்னிலை பெற்றது. அடுத்து 10–6 என்று முன்னிலையில் இருந்து. தொடர்ந்து 15–6 என முன்னிலை பெற்றது. இந்த நிலையில் விஸ்வரூபம் எடுத்த முஸ்கென்ஸ் – பியேக் ஜோடி 9 புள்ளிகளை தொடர்ந்து கைப்பற்றி 15–15 என்று புள்ளிகளை சமன் செய்தது. எனினும் அடுத்த 7 புள்ளிகளில் 6 புள்ளிகளை கைப்பற்றி 21–16 என்ற புள்ளிகளின் கணக்கில் 2வது செற்றை கைப்பற்றி ஜுவாலா கட்டா – அஸ்வினி இணை கிண்ணத்தை வென்றது.

(ம)

# சங்காவுக்காக ....

ஒருநாள், ரி–20 ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள சங்கா இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்துடன் டெஸ்ட்டிலும் விடை பெற்று தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவுள்ளார். இதனையடுத்து சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள சங்காவுக்கு கிரிக்கெட்டின் பிரபலங்கள் பலர் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

***ஆகாஷ் சோப்ரா:*** நவீன கிரிக்கெட்டின் மாபெரும் சாதனையாளர் சங்கக்கார. அவர் தனது ஒப்பற்ற கிரிக்கெட் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருகிறார்.

***சஞ்சய் மஞ்ச்ரேக்கர்:*** சாதனைகளை முறியடிப்பதற்காக நான் தொடர்ந்து விளையாடவில்லை. அப்படி இருந்தால் இது விடை பெறுவதற்கான நேரம் என்று கூறிய சங்கக்காரா ஒரு உண்மையான சம்பியன்.

***பீட்டர் மில்லர்:*** என்னை பொறுத்த வரையில் லாராவிற்கு பிறகு குமார் சங்கக்கார தான் மிகச் சிறந்த இடதுகை துடுப்பாட்டக் காரர். அவரை கிரிக்கெட் உலகம் அதிகமாக தவறவிடப்போகிறது.



சங்கா

***போக்லே:*** சங்கக்காரவின் கிரிக்கெட் வாழ்க்கை சிறப்பாக அமைந்தது. தனித்துவ பாணியில் விளையாடிய சங்கக்கார, தனித்துவமாகவே விடைபெறுகிறார்.

***லக்ஸ்மன்:*** இலங்கையின் எழுச்சிக்கு பிரதான காரணமாக இருந்த சங்கா தனது ஓய்வினை அறிவித்துள்ளது வருத்தமளிக்கிறது. இருப்பினும் இதுவே சரியான நேரம்

***பீற்றர்சன்:*** இலங்கைக்கிரிக் கெட்டில் உருவாகிய நுட்பமான அறிவு கொண்ட ஒரு கிரிக்கெட் மேதையை அனைவரும் தவறவிடுகின்றோம். வீரராக சங்கா ஓய்வுபெற்றாலும் வேறு விதமாக தொடர்ந்தும் கிரிக்கெட்டுடன் இணைந்திருப்பார் என்று தெரிவித்துள்ளனர்.

(ம)

# வீரர்கள் குற்றமற்றவர்கள்

லலித் மோடியால் குற்றம்சாட்டப்பட்டுள்ள வீரர்களான சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, டுவைன் பிராவோ ஆகியோர் தொடர்ந்து விளையாட எந்தத் தடையும் இல்லை என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் அனுராக் தாக்குர் தெரிவித்துள்ளார்.
குறித்த வீரர்கள் மூவரும் சென்னையை தோல்வியடையச் செய்யும் நோக்கில் இந்திய மதிப்பில் தலா 20கோடி லஞ்சம் பெற்றதாக லலித் மோடி சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் முறைப்பாடு செய்தார். இவ்வாறான முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்றதாக ஐ.சி.சியும் உறுதிப்படுத்தியது. இந்த நிலையில் இந்தியா சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணியின் அறிவிப்பில் செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அனுராத் தாக்குர் இவ்வாறு தெரிவித் தார்.
வீரர்களுக்கெதிரான ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக அனுராத் தாக்குர் தெரிவித்ததாவது –ஒரு வீரர் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும்போது அதற்கு ஐ.சி.சி.தான் பொறுப்பு. சம்பந்தப்பட்ட வீரர் ஐ.சி.சி.யின் விசாரணை வரம்புக்குள் இருக்கும்போது அது தொடர்பாக ஐ.சி.சி.தான் பதில் சொல்ல வேண்டும். இந்த விவகாரத்தில் விசாரணை நடத்தி வருவதாக ஐ.சி.சி. கூறியிருக்கிறது. அதனால் அவர்கள் மட்டுமே பதில் சொல்ல முடியும். விசாரணையின்போது ஏதாவது தகவல் கிடைத்தால் அது தொடர்பாக எங்களிடம் பகிர்ந்து கொள்வார்கள். ஆனால் குறித்த விடயம் தொடர்பாக எந்த ஆதாரமும் இல்லையென்றே ஐ.சி.சி.யும் தெரிவித்துள்ளது. எனவே வீரர்கள் குற்றமற்றவர்கள் என்றே கருதுகிறோம் என்றார்.

(ம)



# இந்தியா சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு



ரஹானே

இந்தியா – சிம்பாப்வே தொடருக்கான இந்திய அணி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. டோனி, கோஹ்லி உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு ரஹானே தலைமையில் பெரும்பாலான இளம் வீரர்களைக் கொண்ட அணியாக இந்த அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.
சிம்பாப்வே செல்லும் இந்திய அணி மூன்று ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் இரண்டு ரி–20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் பங்கேற்கிறது. இதற்கான இந்திய அணியில் அணித் தலைவர் டோனி, கோஹ்லி, ரோஹித் சர்மா, அஷ்வின், தவான், யாதவ் மற்றும் ரெய்னா உள்ளிட்ட வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.
தெரிவுசெய்யப்பட்ட இந்திய அணியின் விவரம் வருமாறு:– ரஹானே, முரளி விஜய், அம்பதி ராயுடு, மனோஜ், கெடர், ரொபின் உத்தப்பா, திவாரி, ஹர்பஜன் சிங், அக்ஷர் பட்டேல், கரண் சர்மா, தவால், ரோஜர் பின்னி, புவனேஷ் குமார், மொகித் சந்தீப்.

(ம)

# பகலிரவு டெஸ்ட் தொடர் இந்த வருடம் ஆரம்பம்



தயாரில் இருக்கும் இளஞ்சிவப்பு பந்துகள்

டெஸ்ட் ஆட்டத்தின் பக்கம் ரசிகர்களை கவரும் விதமாகவும், அழிவு நிலையில் இருக்கும் டெஸ்ட்டுக்கு புத்துயிர் கொடுக்கும் விதமாகவும் சில மாற்றங்களை ஏற்படுத்த சமீப காலமாக ஐ.சி.சி. முயற்சித்து வந்தது. இதன் பலனாக பகலிரவு ஆட்டமாக டெஸ்ட் ஆட்டத்தை நடத்த ஐ.சி.சி. பரிந்துரைத்து வெற்றி கண்டுள்ளது.
இதன்படி ஆஸ்திரேலியா–நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக நடைபெறும் என்று ஐ.சி.சி. உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்தத்தொடர் முழுவதும் இளஞ்சிவப்பு பந்துகள் பயன்படுத்தப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெய்மர் இல்லாத பிரேஸில்
# பந்தாடியது பராகுவே

தென் அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டமொன்றில் பலம் வாய்ந்த பிரேஸில் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது பராகுவே அணி. நெய்மருக்கு 4 ஆட்டங்களில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவர் இல்லாமல் களமிறங்கியது பிரேசில். ஆட்டம் தொடங்கிய 15ஆவது நிமிடத்தில் பிரேஸில் அணியின் ராபின்ஹோ அட்டகாசமாக கோலடித்து பிரேஸிலின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தாலும் பராகுவேயின் விடாத போராட்ட குணம் கைகொடுக்க இரண்டாம் பாதியின் பிற்பகுதியில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து 2:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் பராகுவே வெற்றி பெற்றது. பராகுவே ஆர்ஜென்ரீனா அணியை எதிர்த்து அரையிறுதியில் மோதுகின்றது. மற்றொரு அரையிறுதியில் சிலி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது. (ம)

# இறுதிக்கு முன்னேறியது சிலி
## 28வருடக் கனவு நனவாகியது

தென் அமெரிக்கா உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்றில் பெரு அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது சிலி.
ஆட்டத்தில் முரட்டுத்தனமான போக்கை கடைப்பிடித்ததால் 7ஆவது மற்றும் 21ஆவது நிமிடங்களில் பெரு வீரர் ஒருவர் நடுவரால் எச்சரிக்கப்பட்டு ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் 10 வீரர்களுடன் விளையாடும் நிலை பெரு அணிக்கு ஏற்பட்டது. இது பாதிப்பை ஏற்படுத்தியது. முதல் பாதியின் 42ஆவது நிமிடத்தில் எட்வர்டோ வார்கஸ் முதல் கோலை அடிக்க சிலியின் ஆதிக்கம் ஆரம்பமானது. இரண்டாம் பாதியில் சிலி வீரர் செய்ய தவறினால் சிலியின் கோல் கம்பங்களுக்குள்ளேயே சிலியின் வீரரால் கோல் பதிவாகும் பரிதாபம் ஏற்பட்டது.
இதனால் சிலி வீரர்கள் ஆக்ரோஷத்துடன் முன்னேறி தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். மீண்டும் ஒரு கோல் சிலி சார்பாக பதியப்பட 28 வருடங்களின் பின்னர் இறுதிக்கு முன்னேறியது சிலி. சிலி வெற்றி பெற்றதும் மைதானத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஆரவாரம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ம)




# விம்பிள்டன் தொடரில்
## பெண்கள் பிரிவின் முடிவுகள்

ரென்னிஸ் உலகமே ஆவலுடன் எதிர்பார்த்திருந்த விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தரப்படுத்தலில் ஆறாம் இடத்தில் உள்ள வீராங்கனையான செக்குடியரசின் சபரோவா முதல் சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த அலிசனை எதிர் கொண்டார். இதில் சபரோவா 36, 75, 63 என்ற கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.
மற்றொரு ஆட்டத்தில் 16ஆம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 60:60 என்ற நேர் செற் கணக்கில் சகநாட்டைச் சேர்ந்த மேடின்சனை வீழ்த்தினார்.
இவர்களைவிட செரீனா வில்லியம்ஸ், மரியா – ரபோவ, ஸ்டெப் ஹென்ஸ் ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளனர். (ம)



# பவுன்சர் தாக்கி டில்சான் காயம்



மேற்கிந்தியத் தீவுகளில் தற்பொழுது நடைபெற்றுவரும் தீவுகளின் மாகாணங்களுக்கிடையிலான ரி–20 தொடரில் (கரிபியன் லீக்) வொரியர்ஸ் அணிக்காக களமிறங்கிய டில்ஷானின் தலைக்கவசத்தை பந்து தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
லூசியா சூக்ஸ் அணிக்கு எதிராக 157 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வொரியஸ் அணிக்கு சிம்மோன்ஸ், டில்ஷான் ஆரம்ப வீரர்களாக விளையாடி இருவரும் அதிரடி காட்டினர். இந்த நிலையில்; ரோச் வீசிய நான்காவது பந்துப் பரிமாற்றத்தின் மூன்றாவது பந்து (3.3) பவுன்சராக மாறி டில்சானின் தலைக்கவசத்தை பதம்பார்த்தது. இதனால் வலது கண்ணுக்கு சிறிது மேல் பகுதியில் காயம் ஏற்பட 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் டில்ஷான் களத்தை விட்டு வெளியேறினார். இதனால் வொரியஸ் அணி 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)

**வாடகைக்கு**
நல்லூரில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
தனியறை, குளியலறை,
சமையலறை,ஹோல் உத்தியோகத்தர் குடும்பம்.
முற்பணம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு: 078 521 0573

**ALL OUT**
Pest control service
கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்

தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள்.

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்


**ஆங்கிலம்** மூன்று மாத சனி,ஞாயிறு பயிற்சி நெறி
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள் மாணவர்கள்,இளைஞர், யுவதிகளுக்கானது.
2வது பயிற்சிநெறி ஆரம்பம் : 04.07.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
யாழ்நகர் 021 320 3313
சங்கானை 021 567 4133
நெல்லியடி 021 3200 607
SAAMSON
Experts in English Training
110, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 621 4567 021 320 3313

**சிவப்பு மணல் விற்பனைக்குண்டு**
பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும், வீட்டு நில அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் உகந்த சிவப்பு மணல் குறைந்த விலையில் எம்மிடம் விற்பனைக்குண்டு. இது டிப்பர் மூலம் (04 டிராக்டர் லோட்) உரிய இடத்திற்கு எம்மால் வழங்க முடியும்.
தொடர்பு:
077 649 1027, 077 940 0963

**பணியாளர் தேவை**
மானிப்பாய் பிரதேசத்தில் இயங்கி வரும் எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு
- காசாளர் + சிட்டை எழுதுநர்(ஆண்/பெண்).
- கணக்காளர் (அனுபவமுள்ளவர்கள் மட்டும்).
- கட்டடப் பொருள் விற்பனையாளர்(Hard Ware).
- கட்டட மேற்பார்வையாளர்.
- மின் இணைப்பாளர்.

தேவைப்படுகின்றனர். மானிப்பாய்க்குள் 2Km இற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 492 7248
(61457) (3.7.9)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org